
# அவள் ஓர் வசந்த கீதம்



031.3
169380

# அவள் ஓர் வசந்தகீதம்

**சத்யராஜ்குமார்**

வட்டார நூலகம்
அசோக் நகர், சென்னை-83



**சபரி பதிப்பகம்**

27/24, 7வது தெரு, திருநகர்,
வடபழனி, சென்னை – 600 026.

## உள்ளே....

1. அவள் ஓர் வசந்த கீதம்........................5

2. ஊஞ்சலாடும் உறவுகள்......................82

# அவள் ஓர் வசந்த கீதம்

## 1

ரத்னம் தீர்ந்து போன பிடித்துண்டைக் காலடியில் நசுக்கிப் போட்டுவிட்டு லாரி கேபினுக்குள் தொற்றினான். ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டி, கரகரத்த குரலைக் காற்றில் கொட்டினான்.

"தங்கராஜ்..."

கெட்டியான காக்கித் துணியில் ஆடை தைத்துப் போட்டிருந்த அந்த தங்கராஜ் லாரிக்கு வலப்பக்கம் பேட்டரி பாக்ஸ் அருகே இருந்தான். டிஸ்டில்டு வாட்டர் மட்டத்தைச் சரிப்படுத்திக் கொண்டிருந்தான்.

"என்ன அண்ணே?"

"கொஞ்சம் ரிவர்ஸ் பாரு... லாரியைத் தண்ணி டாங்குக்கு நேரா நிறுத்திடறேன்."

"ஆகட்டும். வண்டியை எடுண்ணே..."

ரத்னம் ஸ்டியரிங்கைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு இக்னிஷியன் பொத்தானை அழுத்தினான். அந்த விடிகாலை குளிருக்கு என்ஜின் சோம்பேறித்தனமாய் ஸ்டார்ட் ஆக மறுத்து முனகியது. நாலாவது முயற்சியில் ஸ்டார்ட் ஆகி சப்தம் சிந்தியது.

கியரை மாற்றி லாரியை ரிவர்ஸில் நகர்த்தினான். அந்த மஞ்சள் நிற கார்ப்பொரேஷன் தண்ணீர் லாரி நிதானமாய்ப் பின்னால் நகர்ந்தது. கேபினுக்குப் பின்னால் பிரம்மாண்டமான சைஸில் ஓவல் வடிவ தண்ணீர் டாங்க். டாங்க்கின் உடம்பில் உரத்த சைஸில் கறுப்புப் பெயின்ட் எழுத்துக்கள், 'காஸ்மா மாநகர குடிநீர் வாரியம்' என்று பேசின.

"ரைட், ரைட்" என்ற தங்கராஜின் குரல் உதவியோடு வாகனத்தைத் தொட முயற்சிக்கிற கனசதுர சிமெண்ட் டாங்குக்குக் கீழே லாரியைச் சரியான பொஸிஷனில் நிறுத்தினான்.

தங்கராஜ் டாங்க் மேல் லாவகமாய்த் தாவி வட்டமான மூடியைத் திறந்துவிட்டான். கைக்கு எட்டுகிற தூரத்திலிருந்த கனமான குழாயின் வால்வைத் திறந்து விட, கார்ப்பொரேஷன் தண்ணீர் சிமெண்ட் டாங்க்கிலிருந்து சளசளவென்ற இரைச்சலோடு நயாகராத் தனமாய்க் கொட்ட ஆரம்பித்தது.

"அண்ணே, இன்னிக்கு எந்த ஏரியா?"

ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டியிருக்கிற ரத்னத்தைப் பார்த்துக் கேட்டான்.

"மின் நகர்."

"ரெண்டு நாள் முன்னாலதானே அங்கே தண்ணி சப்ளை பண்ணினோம்?"

"எம்.எல்.ஏ.யோட மச்சினன் வீடு அங்கே இருக்கு. தினமும் நாலு தரம் கொண்டு வந்து ஊத்திட்டுப் போடான்னு சொன்னாலும் நாம செஞ்சுதான் ஆகணும். அங்கே டாங்கைப் பாரு தண்ணி நிறைஞ்சு வழிஞ்சிடப் போகுது."



தங்கராஜ் திரும்பிப் பார்த்தான்.

கேஜ் ஸ்டிக்கை உள்ளே போட்டு, தண்ணீர் மட்டம் சரி பார்த்துவிட்டு, குழாய் வால்வைத் திருகி மூடினான்.

டாங்க்கின் வட்ட மூடியை 'தொம்ம்'மென்ற சப்தத்தோடு சாத்தினான்.

பின்பக்கமிருந்து கேபினுக்குள் வந்து சீட்டில் அவன் உட்கார்ந்தபின், ஆக்ஸிலேட்டரை அழுத்தினான் ரத்னம். லாரி குடிநீர் வாரியப் பூங்காவுக்குள் ஓட ஆரம்பித்தது. அடர்வான மரங்களுக்கு நடுவே நகர்ந்த காம்ப்பௌண்ட்டைத் தாண்டினார்கள்.

காஸ்மா சிடி வீதிகளில் காலை நேர சுறுசுறுப்பு ஆரம்பமாகியிருந்தது. ஆபீஸ் போகிற ஜனங்கள் ஹேண்ட்பேக் சகிதமாய் பஸ் ஸ்டாப்களையும், ப்ளாட்பாரங்களையும் பரபரக்க வைத்துக் கொண்டிருந்தார்கள். தண்ணீர் லாரி வந்தனா பிரிட்ஜைக் கடந்து ஏழாவது நிமிஷம் மின்நகருக்குள் பிரவேசித்தது.

நாலாவது அவென்யூவில் ஜனங்கள் குடங்களை வரிசையாய் நிற்க வைத்துக் காத்திருந்தார்கள். ரத்னம் லாரியை நிறுத்திவிட்டு, கீழே இறங்கி, பீடியை வாயில் சொருகிக் கொண்டான். தங்கராஜ் பின்புறம் வர வரிசையில் முதலாவதாய் நின்றிருந்த பெண் குடத்தை லாரி டாங்கின் குழாய்க்குக் கீழே நகர்த்தி வைத்தாள்.

அவன் குழாய் வால்வைத் திறந்துவிட்டதும் குடத்தில் தண்ணீர் விழ ஆரம்பித்தது.

அதே விநாடி -

முன்பாக நின்றிருந்த ஐந்தாறு பெண்கள் கோரஸாய் வீறிட்டு அலறினார்கள். லாரி டாங்க் குழாயிலிருந்து -

தண்ணீருக்குப் பதிலாக -

செர்ரி நிறத்தில் கொழுகொழுவென்று ரத்தமாய்க் கொட்டிக் கொண்டிருந்தது.

## 2

TOLET என்ற போர்டைப் பார்த்ததும், நின்றான் அவன். தோளில் லெதர்பேக் தூக்குப் போட்டிருந்தது. பார்க்கிறவர்களின் ஞாபகக் கேந்திரத்தில் டி. ராஜேந்தரை நுழைத்தான். கட்டம்போட்ட சர்ட்டும் கறுப்பு நிற பேண்ட்டுமாய் இருந்தான்.

'வாடகைக்கு' என்ற போர்டு தொங்கும் வீட்டின் காம்பவுண்ட் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான். சாயம் போன மஞ்சள் டிஸ்டெம்பர் பூச்சோடு நின்றிருந்தது அந்த டெரஸ் வீடு. இரண்டு பக்கமும் ரோஜா பதியன்கள்.

காலிங்பெல் ஸ்விட்சுக்கு வேலை கொடுத்தான்.

"பர்ர்ர்..."

வீட்டுக்குள் இசை குதித்த இரண்டாவது நிமிஷம் சலக் சலக் சலக்கென்று கொலுசு சப்தம் கதவை நோக்கி நெருங்கி வந்தது. கதவு விலக உள்ளே மேக்ஸியில் மூழ்கியிருந்த இருபத்திமூன்று வயதுப் பெண் பார்வையில் பதிவானாள்.

"என்ன வேணும்?"

"டுலெட் போர்டு போட்டிருந்தது. நான் வாடகை வீடு தேடிட்டிருக்கேன்."

"உள்ளே வாங்க."

மேக்ஸி வழிவிட, வீட்டுக்குள் நுழைந்தான்.

சின்ன முன்னறை. நீளமான க்ரீம்நிற சோஃபா தவிர, இரண்டு மூன்று பைபர் நாற்காலிகள் வரிசையாய்த் தெரிந்தன. வால்க்ளார்க் ஒன்று எட்டு இருபத்திமூன்றில் டிக்-கிக் கொண்டிருந்தது. உள்ளறைக் கதவுக்கு மேலே என்லார்ஜ்ட் அசலில் பிரேமிடப்பட்ட பாரதியாரின் போட்டோ.



"உட்காருங்க." சொல்லிவிட்டு அவள் உள்ளே போக சோபாவில் தன்னை அமர்த்தினான்.

வீட்டுக்குள் சுசுசுவென்ற பேச்சுக் குரல் கேட்டது. எல்லாமே பெண் குரல்.

சில விநாடிக் கழியலுக்குப் பின் முதலில் வந்த பெண் இன்னும் இரண்டு மேக்ஸிகளோடு திரும்பி வந்தாள். மூன்று பேரும் அவனைப் பார்வையால் அளந்து கொண்டே எதிரே இருக்கிற ஃபைபர் நாற்காலிகளில் நிரம்பினார்கள்.

முதல் பெண் குரலை அவிழ்த்தாள்.

"உங்க பேரு?"

"சந்தீப்."

சந்தீப்பின் பார்வை வீட்டில் ஆண்கள் யாரும் இல்லையா என்று துழாவிக் கொண்டிருந்தது.

"இப்ப எங்கே குடியிருக்கீங்க?"

"சவீதா காலனியில்."

"அந்த வீடு வசதியா இல்லையா?"

"வீடு வசதியாத்தான் இருக்கு பட், இந்த ஏரியாவுடன் குடிவந்தேன்னா கம்பெனி பக்கமாயிருக்கும்."

"எங்கே வொர்க் பண்ணீங்க?"

"முகாஸ் என்ஜினீரிங் இண்டஸ்ட்ரீல."

"நீங்க பேச்சிலர்தானே?"

"எஸ்."

அரைமணி நேரம் அந்த மூன்று பெண்களும் மாறி மாறி கேட்ட கேள்விகளுக்குப் பொறுமையாய் பதில் சொல்லிக்கொண்டே வந்தான் சந்தீப்.

கடைசியாய் அந்த முதல் பெண் புன்னகைத்தாள்.

"மிஸ்டர் சந்தீப், உங்களை எங்க மூணுபேருக்குமே ரொம்ப பிடிச்சிருச்சு. உங்களுக்கு வீடு வாடகைக்குத் தர்றதுல எங்களுக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை."

சந்தீப் உதட்டில் புன்னகையை நீந்தவிட்டுக் கொண்டே சொன்னான்.

"வீட்டை வாடகைக்கு தர்றதுல உங்களுக்கு ஆட்சேபணையில்லைதான். பட், உங்க வீட்டுக்கு குடி வரலாமா வேண்டாமான்னு வீட்டைப் பார்த்த பின்னாடிதானே நான் தீர்மானிக்க முடியும்."

"ஷ்யூர். வாங்க வீட்டைப் பார்க்கலாம்."

அவர்கள் மூன்று பேரும் எழுந்தார்கள்.

"அந்த வீடு கண்டிப்பா உங்களுக்குப் பிடிக்கும்."

அவர்கள் இருந்த வீட்டைவிட்டு வெளியே வந்தார்கள். வலது பக்கம் நடந்தார்கள்.

"இன்டர்வ்யூத்தனமா மூணு பேரும் மாறி மாறி கேள்வி கேட்டு என்னைப் பத்தின எல்லா டீடெய்ல்ஸும் தெரிஞ்சுகிட்டீங்க. உங்க மூணு பேரையும் பத்தி நான் தெரிஞ்சிக்கலாமா?"

"தாராளமா. என் பேர் மேனகா. சாந்தம் என்டர்ப்ரைஸஸ்ல டைப்பிஸ்ட். கண்ணாடி போட்டிருக்கறவ சுப்ரபா. அடுத்தது வினயா."

"வீட்ல ஜென்ட்ஸ் யாரும் இல்லையா?"

"இல்லை. நான் ஒரு அநாதைப் பொண்ணு. சுப்ரபா விதவை. வினயாவோட புருஷன் யாரோடோ ஓடிப் போயிட்டான்."



அதே காம்பவுண்டுக்குள் வலது பக்கம் இருந்த போர்ஷனுக்கு சந்தீப்பைக் கூட்டிப் போனார்கள். உள்ளே நுழைய அந்தச் சின்னவீடு கண்ணில் விரிந்தது. பத்துக்கு ஒன்பதில் ஓர் அறை. அந்த அறை தவிர சின்ன கிச்சன். அட்டாச்சி பாத்ரூம். லெட்ரின்.

"வீடு பிடிச்சிருக்கா.. மிஸ்டர் சந்தீப்?"

சந்தீப் உற்சாகமாய்த் தலையசைத்தான்.

"ரொம்பவே பிடிச்சிருக்கு!"

"எப்ப இங்கே குடி வர்றீங்க?"

"இன்னிக்கே!"

அங்கே குடிவரப் போவதால் ஏற்படப் போகிற ஆபத்துக்களைப் பற்றி அப்போது சந்தீப் அறிந்திருக்க நியாயமில்லை!

## 3

ஜீப்பை லாரிக்குப் பக்கத்தில் நிறுத்திவிட்டு, உள்ளேயிருந்து தொப்தொப்பென்று குதித்தார்கள் ஜெயேந்திரனும், குருதேவ்வும். அவர்களின் காக்கி யூனிபார்மைக் கண்களில் வாங்கி வேடிக்கை பார்க்கிற ஜனக்கும்பல் புகை மாதிரி கலைந்தது.

லாரி கேபின் அருகே நின்றிருந்த ரத்தினமும், தங்கராஜும் நெருங்கி வருகிற இன்ஸ்பெக்டர்கள் இரண்டு பேருக்கும் 'வணக்கம்' சொன்னார்கள். ஜெயேந்திரன் கம்பீரமான குரலை வீசினார்.

"லாரி ட்ரைவர் யாரு?"

"நான்தான் ஸார்."

ரத்னம் முன்னால் வந்தான்.

"நீதான் போன் பண்ணினியா?"

"ஆமா ஸார்."

"எங்கிருந்து போன் செஞ்சே?"

"மெயின்ரோட்ல ஒரு பப்ளிக் பூத் இருக்கு. அங்கிருந்துதான்."

"உன் பேர் என்ன சொன்னே, ரத்னமா?"

"ஆமா ஸார்."

"இது?" தங்கராஜை சுட்டிக் காட்டிக் கேட்டார்.

"கூட வேலை பார்க்கறான் ஸார்."

"டாங்க் குழாயைத் திற."

லாரிக்குப் பின்னால் வந்து வால்வைத் திருப்ப டேப் வழியே செவேலென்று ரத்தம் கலந்த தண்ணீர் விழ ஆரம்பித்தது.

"டாங்க் மூடியைத் திறந்து உள்ளே பார்த்தியா?"

"திறந்து பார்த்தேங்க. உள்ளே இருட்டா இருக்கு. எதுவும் தெரியலை."

"குருதேவ், பக்கத்துல யார்கிட்டேயாவது டார்ச் லைட் இருந்தா வாங்குங்க."

குருதேவ் அதே வாசகங்களை ஒரு கான்ஸ்டபிளிடம் கொட்ட, அவர் அருகாமை வீடுகளின் கதவைத் தட்டி சில நிமிஷக் கழியலுக்குப் பின் ஒரு டார்ச்லைட்டை சம்பாதித்துக் கொண்டு வந்தார். ஜெயேந்திரன் பேன்ட்டை இடுப்பில் உயர்த்திவிட்டுக் கொண்டு ஒரு சின்னப் பையனின் லாவகத்தோடு டாங்க் மேலே தாவினார்.

குருதேவ்வும் டார்ச்லைட் சகிதமாய் மேலே வந்தார்.

மூடி திறக்கப்பட்டது.



குருதேவ் டார்ச்சை உயிர்ப்பித்து வெளிச்சக் கோட்டை டாங்கினுள் பாய்ச்சினார். நீர்ப்பரப்பு சிவப்பாய் அசைந்து கொண்டிருந்தது.

"ஏதாவது தெரியுதா குருதேவ்?"

"ப்ளட் கலந்த தண்ணிதான் ஸார் தெரியுது."

"வாட்டரை கம்ப்ளீட்டா ட்ரெய்ன் பண்ணிடலாமா?"

"அப்படித்தான் செய்யணும் ஸார்."

"அந்த ஆள் யாரு தங்கராஜா? கூப்பிட்டுக் குழாயை முழுசா திறந்து விட்டுடச் சொல்லுங்க."

மீண்டும் குழாய் வால்வ் திறந்து விடப்பட்ட சிவப்புத் திரவம் அருவி மாதிரி தரையில் கொட்ட ஆரம்பித்தது. கால்வாசி டாங்க் தீர்ந்திருந்தபோது ஜெயேந்திரனையும் குருதேவ்வையும் திடுக்கிடல் கொத்தாய் அள்ளியது.

குழாய் வழியே சிவப்பு நீருக்கிடையே விரல்கள், உள்ளங்கை என்று விதவிதமான சைஸில் நொதநொதவென் றிருந்த சதைத் துண்டங்கள் வெளிப்பட ஆரம்பித்தன.

## 4

ஏதோ ஒரு வேன் வந்து நிற்கும் சத்தம். கூடவே பேச்சுக் குரல்கள். அவள் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து, "எக்ஸ்க்யூஸ்மீ!"

குரல் கேட்டு நிமிர்ந்தான் சந்தீப். படித்துக் கொண் டிருந்த புத்தகத்தைப் பட்டென மூடினான். கதவருகே மேனகா.

"வாங்க."

"உள்ளே வரலாமா?"

"தாராளமா..."

உள்ளே வந்த மேனகா கண்களை அறை பூராவும் சுற்றுலா அனுப்பிக் கொண்டே அவனுக்கு எதிரில் அமர்ந்தாள். அறையில் கடைப்பிடிக்கப்பட்டிருந்த சுத்தம் அவளுக்கும் பிடித்திருந்தது.

"வீடு சௌகரியமா இருக்கா?"

"நான் எதிர்பார்த்ததைவிட வசதியா இருக்கு."

"எப்ப பார்த்தாலும் வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்கறீங்களே. வெளியே போற பழக்கமெல்லாம் கிடையாதா?"

"சும்மா வெளியே போய்ட்டு வர்றதுல என்ன இருக்கு."

"நீங்க ஓர் அபூர்வப் பிறவி! சைட் அடிக்கத் தெரியாதா?"

கண்ணாடி டம்ளரைக் கீழே போட்ட மாதிரி 'க்வீர்' ரென்று சிரித்தாள் மேனகா.

அதே விநாடி -

வினயா எட்டிப் பார்த்தாள். பளிச்சென்று புடவைக்குள் நிரம்பியிருந்தாள்.

"மேனகா, டயமாச்சு. கிளம்பலியா?"

"பறக்காதே. மணி அஞ்சுதான் ஆச்சு."

"உன் ஓட்டை வாட்சை வித்துட்டுப் பேரிச்சம்பழம் வாங்கிச் சாப்பிடு. இப்ப மணி அஞ்சு முப்பது."

"ஷோ சிக்ஸ் தர்ட்டிக்குத்தான்."

"படம் இன்னிக்குத்தான் ரிலீஸ்டி. கூட்டம் வழியப் போறது."

"என் கற்பையே வேணாலும் பெட் கட்டறேன். தியேட்டரில் காத்து வாங்கிட்டிருக்கும்! அந்த அருமை



யான ஹிந்திப் படத்துல இருக்கற கற்பூர வாசனை இந்த ஊர்க்கழுதைகளுக்கு நிச்சயம் தெரியாது."

"என்ன படம்?"

குரலை குறுக்கே நீட்டினான் சந்தீப். அவனிடம் திரும்பிய வினயா பதில் சொன்னாள்.

"அவுரத் கி ஆஜாத்."

"ஃபர்ஸ்ட் க்ளாஸ் மூவி!"

"நீங்களும் வர்றீங்களா சந்தீப்?"

"நானா?" கேட்டுவிட்டு சந்தீப் உடனடியாய் மறுத்தான். "நீங்க மூணுபேரும் போய்ட்டு வாங்க. விமன்ஸ் லிபரேஷன் பத்தின படம். உங்களுக்கெல்லாம் ரொம்பப் பிடிக்கும்."

"விமன்ஸ் லிப் பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க சந்தீப்?"

சந்தீப் புன்னகையோடு சொன்னான்.

"பெரும்பாலான பெண்களுக்கு ரோஜா மாதிரி சிவப்பான அழகான 'லிப்'."

"குட் ஜோக்! நான் கேட்டது லிப்ஸைப் பத்தி அல்ல. லிபரேஷன் பத்தி."

"பெண்களுக்குத் தரப்பட வேண்டிய சுதந்திரம் பத்தி?"

"யெஸ்."

"இப்போதைய பெண்கள் அளவுக்கு அதிகமாகவே சுதந்திரமா இருக்காங்கங்கறது என்னோட ஒபீனியன்."

மேனகா கோபமான பார்வையில் அவனை மூழ்கடித்தாள்.

"அஃப்கோர்ஸ் நீங்க ஒரு ஆம்பளைதானே! அப்படித்தான் சொல்லுவீங்க."

"உடனே என்னைத் தப்பா புரிஞ்சுகிட்டுக் கோபம் படாதீங்க மேனகா. சுதந்திரம்னு கேட்டா அவங்களுக்கு நிறைய தரப்பட்டிருக்குன்னுதான் சொல்லணும். ஆனா இன்னமும் சமுதாயத்துல பெண்களுக்கு எதிரா இழைக்கப் படற அநியாயங்கள், கொடுமைகளை நானும் வெறுக் கறேன்."

மேனகா பளிச்சென்று புன்னகைத்தாள்.

"அப்ப நீங்க எங்க கட்சிதான்! இனி நான் உங்களை விடமாட்டேன். கட்டாயம் எங்ககூட இப்ப நீங்க சினிமா வுக்கு வர்றீங்க!"

மேனகாவின் பிடிவாதத்தில் சந்தீப்பின் மறுப்பு உடை பட்டுப் போனது. அடுத்த பத்தாவது நிமிஷம் நான்கு பேருமாகப் புறப்பட்டு வீட்டினின்றும் வெளிப்பட்டார்கள். விக்யான் மெயின் ரோட்டுக்கு வந்து இரண்டு ஆட்டோக்கள் அமர்த்தினார்கள்.

ஒன்றில் சுப்ரபா, வினயா, இன்னொன்றில் மேனகா வும், சந்தீப்பும். ஆட்டோக்கள் நிர்மான் தியேட்டரை இலக்காய் வைத்துக்கொண்டு சாலைகளைக் குடித்தது. தியேட்டர் போர்டிகோவில் சரிந்தார்கள். பிரம்மாண்ட மான பேனர்களில் சினி ஆர்ட்ஸ் கலரில் ஜிதேந்திராவைக் குழைந்திருந்தது.

மேனகா சொன்ன மாதிரி தியேட்டர் துடைத்த மாதிரி கூட்டமேயில்லாமல் இருந்தது. டிக்கட் கவுண்டரை நோக்கி சந்தீப் நடையைத் திருப்ப மேனகா கூப்பிட்டாள்.

"சந்தீப் ஒரு நிமிஷம்!"

"என்ன?"

"இவ்வளவு நேரத்திலேயே டிக்கட் வாங்கிட்டு, ஆடிட்டோரியத்துக்குள்ள உட்காந்துகிட்டுப் போரடிக் கணுமா?"



"என்ன செய்யலாம்னு சொல்றீங்க?"

"வாங்க அந்த கடையில போய் ஒரு காபி சாப்பிடலாம்."

சுப்ரபாவிடமிருந்தும் வினயாவிடமிருந்தும் ஆமோதிப்புக் கதிர் வெளியேற ஒருமனதாக அந்த 'நாஸே ஸ்டாலை நோக்கி நகர்ந்தார்கள். லெதர்பேக்கை சுக்கத்தில் பிடித்திருந்த ஓர் உயரமான ஆசாமி ஆவி பறக்கிற காபியை உறிஞ்சிக் கொண்டிருந்தார்.

'மானே உன்னைத்தானே

நானே அழைத்தேனே..'

என்று ஸ்டீரியோ ஸ்பீக்கர்கள் மனோவைச் சிந்திக் கொண்டிருந்தது.

காபிக்கு ஆர்டர் செய்த சில நிமிஷங்களில் ஆளுக் கொரு டம்ளர்களைக் கைகளில் தாங்கினார்கள். அந்த விநாடி சொற்ப தொலைவில் நின்றிருந்த கான்ஸ்டபிள் ஒருத்தர் சந்தீப்பையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்த சந்தீப் சட்டென தவிப்புப் பள்ளத்தாக்கில் சரிந்தான்.

அவஸ்தையோடு காபி டம்ளரை வைத்துவிட்டு, போலீஸ் கான்ஸ்டபிளுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு நின்றான்.

"எக்ஸ்க்யூஸ் மீ மேனகா.. நான் இப்ப வந்துடறேன்.." சொல்லிவிட்டு அவசரமான நடையில் மின்னலாய் எங்கேயோ சென்று மறைந்தான்.

## 5

மீன்நகர் வாசிகளின் நாசிகளைக் கெட்ட நாற்றம் ட்ரில்லிங் மெஷின் மாதிரி துளைக்க ஆரம்பித்தது. ஜெயேந்திரன், குருதேவ்வின் முகங்களில் சீரியஸ்னெஸ் புகை மாதிரி பரவிக் கொள்ள ஆரம்பித்து, சிவப்பு நீரும் சதைத் துண்டுகளும் கொட்டுகிற குழாயையே பார்த்தார்கள். நீர் விழும் வேகம் குறைக்கப்பட்டு, கீழே விழுகிற ஒவ்வொரு சதைப்பகுதியும் போலீஸ் கான்ஸ்டபிள்களால் சேகரிக்கப்பட ஆரம்பித்தது.

"குருவே... இது பெரிய தலைவலி பிடிச்ச கேஸ் போலிருக்கு."

"ஆமா ஸார்... கொத்துக்கறி போடற மாதிரி இப்படி டெட்பாடியைத் துண்டுத் துண்டா நறுக்கி லாரி டாங்க்ல டிஸ்போஸ் பண்ணியிருக்கான்."

"எல்லா பீஸ்ஸும் உள்ளங்கை சைஸுக்குத்தான் இருக்கு. பொறுமையா உக்காந்து வேலை செஞ்சிருக்கான். பாடியை ஐடென்டிஃபைப் பண்றதே இமாலயக் கஷ்டம்."

இரண்டு பேரும் கவலைப் பிரதேசத்தில் நழுவிக் கொண்டிருந்தபோது தண்ணீர் முழுதாக ட்ரெய்ன் ஆகியிருந்தது.

"கான்ஸ்டபிள்..."

"ஸார்...?"

"நீயும், த்ரீ நாட் டூவும் டார்ச் லைட்டோட டாங்க்குக்குள்ளே இறங்குங்க. டாங்க்லயே தங்கிப் போயிட்ட ஃபினிஷ் பீஸ்ஸை கலெக்ட் பண்ணுங்க."



"ஓகே. ஸார்."

அந்த இரண்டு கான்ஸ்டபிள்களும் டாங்க்கின் வட்ட மூடி வழியாக உள்ளே இறங்கினார்கள். லாரிக்குப் பக்கத்தில் துணியை விரித்துக் குவிக்கப்பட்டிருந்த சதைத் துண்டங்களைக் கொத்துகிற ஆசையோடு அனைத்துண்ணிப் பறவைகள் 'கா...கா' என்ற கோஷ்டி இரைச்சலோடு அந்தப் பிரதேசத்தை வட்டமிடத் தொடங்கியிருந்தன.

"கேஸை எப்படி அணுகறதுன்னே புரியலையே குருதேவ்."

"ஸார்... இந்த லாரி ராத்திரி எங்கே ஹால்ட் ஆகியிருந்ததுன்னு டிரைவரை விசாரிக்கணும். எக்ஸாக்டா அதே இடத்தில் லாரியைக் கொண்டு போய் நிறுத்திட்டு, அந்த இடத்திலிருந்து இன்வெஸ்டிகேஷனை ஆரம்பிக்கிறது பெட்டர் ஸார்."

"குட்... அப்படியே செய்யலாம்..."

கலெக்ட் செய்யப்பட்ட சதைத் துணுக்குகள் மூட்டையாய்க் கட்டப்பட்டது. மண்டை பாகத்தைக்கூட விடாமல் துணுக்குத் துணுக்காய் அறுத்துப் போட்டிருந்தான் கொலைகாரன். சதை மூட்டை லாரியில் ஏற்றப்பட்டது. தங்கராஜும் ரத்னமும் அழைக்கப்பட்டார்கள்.

லாரி குடிநீர் வாரியத்தை நோக்கி ஓட ஆரம்பிக்க, ஜீப் லாரி சக்கரங்கள் உருள்கிற பாதையை அடியொற்றியது. இரண்டு வாகனங்களும் ஊர்வலம் மாதிரி பதினெட்டு நிமிஷங்கள் ஓடி, குடிநீர் வாரியப் பூங்காவுக்குள் நுழைந்தது. ஜீப்பை விட்டு இறங்கிய ஜெயேந்திரன் லாரி ஓட்டுனர் இருக்கையில் உட்கார்ந்திருக்கிற ரத்னத்திடம் வந்தார்.

"ரத்னம்... ராத்திரி பூராவும் லாரி எந்த இடத்தில் நின்னிட்டிருந்ததோ... அதே இடத்துல லாரியை நிறுத்தி வை."

"சரி ஸார்..."

தலையாட்டிக் கொண்டே ரத்னம் ரிவர்ஸ் கியர் போட்டான். லாரியை நிறுத்திவிட்டு இறங்கி வந்தான்.

பூங்கா மரங்களுக்கு மத்தியில் தெரிந்த தூரத்து கட்டடத்தைச் சுட்டிக் காட்டி ஜெயேந்திரன் கேட்டார்.

"ரத்னம் அங்கே ஒரு பில்டிங் தெரியுதே... அது என்ன?"

"வாட்டர்போர்டு ஆஃபீஸ் ஸார்..."

"இந்தக் கேம்பஸ"க்கு வாட்ச்மேன் யாரும் இல்லையா?"

"வரதன்னு ஒருத்தன் இருக்கான் ஸார்..."

"அவனைக் கொஞ்சம் கூட்டிட்டு வா..."

"சரி ஸார்..."

"குருதேவ்... அடுத்த மூவ் என்ன?"

"பூத்ல போய் ஃபோன் பண்ணிட்டு வந்திருக்கேன். போலீஸ் டாக் கொஞ்ச நேரத்துல வந்துரும்."

குருதேவ் சொல்லிக் கொண்டிருந்தபோது, போன ரத்னம் திரும்பி வந்தான். காக்கிய நிற காட்டன் சர்ட் பேண்ட் போட்டிருந்த ஆசாமியைக் கூட அழைத்து வந்திருந்தான்.

"நீதான் வாட்ச்மேன் வரதனா?"

"இல்லை ஸார். நான் ஆஃபீஸ் ப்யூன்."

"வரதன் எங்கே?"

"வரதன் நாலு நாளா லீவ் ஸார். உடம்பு சரியில்லாம படுத்திருக்கான்."



"அப்படின்னா அவனுக்குப் பதிலா நைட் வாட்ச்மேனா இருக்கிறது யாரு?"

"அவனுக்குப் பதிலா யாரும் இல்லை ஸார்."

"குருதேவ், மர்டரருக்கு வாட்ச்மேன் இல்லாதது ரொம்ப வசதியாய் போச்சு."

"இந்த சௌகரியத்தையெல்லாம் தெரிஞ்சுகிட்டுத்தான் கொலையாளி இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்கான்னு தோணுது ஸார்."

அந்த விநாடி - புழுதி கிளப்பிக் கொண்டு இன்னொரு ஜீப் அங்கே வந்து நின்றது. வெள்ளை டீசர்ட்டும் அதே நிற ஆஃப் பேண்ட்டோடும் இருந்த ட்ரெய்னரோடு போலீஸ் நாய் (வாணி) உற்சாகமாய் ஜீப்பை விட்டுத் தாவியது. எக்ஸார்ஸிஸ்ட் சிறுமி மாதிரி நீளமாய் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு துருதுருவென்ற பார்வையால் சுற்றுப்புறத்தை வருடியது.

வேறெதோ திசையில் ட்ரெய்னரை இழுக்க, அவர் அதட்டினார்.

"ஏய்... ஜானி. கம் திஸ் சைட்."

அவர் பேச்சுக்குக் கட்டுப்பட்டது.

ஐந்து நிமிஷம் ஜெயேந்திரனிடம் பேசிய ட்ரெய்னர் ஜானியை செயல்பட வைத்தார். அது தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு அந்தப் பகுதியில் அங்குமிங்கும் அலைந்தது. நாலைந்து தரம் லாரியை பிரதட்சணம் செய்துவிட்டு, நேராக அருகாமையிலிருந்த வாதநாராயணா மரத்துக்குக் கீழே ஓடிப் போய் நின்றது.

பின்னாலேயே சென்ற ஜெயேந்திரனும், குருதேவ்வும் புருவங்களைச் சுருக்கினார்கள். அந்த இடத்து மண்தரை பூராவும் செங்கல்நிறத்தில் ரத்தம் ஊறிப் போய்க் கிடந்தது.

"குருதேவ்.. இங்கே வச்சுதான் கொலைகாரன் டெட் பாடியை அறுத்துத் துண்டு போட்டிருக்கணும்."

"ஆமா ஸார்."

"இவ்வளவு சின்னச் சின்னத் துண்டா அறுக்கறதுக்கு என்ன ஆயுதத்தை உபயோகப்படுத்திருப்பான்? ஃப்ளெஷ் பீஸ்யை லேபுக்கு அனுப்பினா தெரிஞ்சிடும்."

அந்த வாதநாராயணா மரத்தை விட்டு மறுபடியும் வலது திசையில் ஓடியது ஜானி. மேலும் ஜானியைத் தொடர்ந்தார்கள். நின்று நின்று போன ஜானி காம்பவுண்ட் சுவரோரமாக ஓடிப்போய் ஓட்டத்தை நிறுத்தியது. அந்த இடத்து மண்ணைப் பரபரவென்று பறிக்க ஆரம்பித்தது.

"த்ரீ நாட் டூ.."

"எஸ் ஸார்.."

"இந்த இடத்தைத் தோண்டுங்க."

வாட்டர் போர்டு ப்யூனை அனுப்பி கடப்பாரை கொண்டு வர ஏற்பாடு செய்தார்கள். அடுத்த சில நிமிஷங்களில் -

'ச்சத்..'

'ச்சத்..'

அந்த இடத்துத் தரை தோல் கைப்பட ஆரம்பித்தது.

# 6

**சுனில்** என்ஜினீயரிங் (பி) லிமிடெட்.

ரிஸப்ஷனிஸ்ட்டுக்கு ஸ்நேக சிரிப்பைக் கொட்டி விட்டு ரிஸப்ஷன் ஹாலைக் கடந்து சென்றாள் ரேவதி.



மொட மொடக்கிற காட்டன் ஸாரி வெண்ணிறப் பின்னணியில் தேன் வர்ண டிசைனைப் பெற்றிருந்தது. முகப் பிரதேசத்தில் சூரிய வெளிச்சம் கொடி கட்டிப் பறந்தது. அப்பா இல்லாத குடும்பத்தில் மூத்த பெண்ணாகப் பிறந்து விட்டதன் விளைவு நாலு தங்கைகளைக் கரை சேர்க்க வேண்டிய பாரம் இரும்பால் அவளை அழுத்திக் கொண்டிருக்கிறது. அத்தனை கவலைகளையும் மறந்து சிரிப்பாள். அதுதான் ரேவதியின் ஸ்பெஷாலிடி.

ஷாப் ஃப்ளோர் அட்மினிஸ்ட்ரேஷன் என்று இரண்டு அம்புக்குறிகள் இரண்டு திசையில் பிரித்து வரையப்பட்டிருக்க அட்மினிஸ்ட்ரேஷன் இருந்த பக்கம் நடையைத் திருப்பினாள் ரேவதி. செக்ஷனில் நுழைந்தாள்.

சில இருக்கைகளுக்கு அலுவலர்கள் வந்திருக்க ஏகதேசம் நாற்காலிகள் காலியாகவே இருந்தன.

"குட்மார்னிங் ரேவதி.."

"சொன்ன குரல்களுக்குப் பதில் "குட்மார்னிங்" கை புன்னகையோடு இணைப்போடு தந்தாள்.

அவளுடைய இருக்கையைத் தொட்டாள்.

முன்சீட் பெண் திரும்பிப் பார்த்தாள்.

"என்ன ரேவதி.. நேத்து ஓவர்டைம் உட்கார்ந்துட்டே போலிருக்கு?"

"ஆமா, நிறைய லெட்டர்ஸ் டைப் பண்ண வேண்டியிருக்கு இருந்து முடிச்சுட்டுப் போயிடுன்னு டி.எம். சொன்னார்."

"நீ சரியான இளிச்சவாய். என்னையோ, கோமதியையோ ஓவர்டைம் இருன்னு டி.எம். குரங்கு வாயைத் திறந்து ஒரு தரமாவது சொல்றாரா?"

"நீங்க இருக்க மாட்டீங்கன்னு அவருக்குத் தெரியும்."

"அந்த பயம் உன்கிட்டேயும் இருக்கணும்படி. நீன்னா இளக்காரமா? நீ மட்டும் ஏன் கஷ்டப்படணும்?"

"நான் கம்பெனிக்கு உழைக்கணுமேன்னு ஓவர்டைம் இருந்து பாடுபடலைடி. என் குடும்ப நிலைமைக்காக கஷ்டப்படறேன். ஓவர்டைம் செய்யறது மூலமா வர்ற வருமானம் மாசக்கடைசியில் வர்ற இழுபறி செலவுகளைத் தாக்குப் பிடிக்கும். அரிசிக் கடையிலும், மளிகைக் கடையிலும் ஒண்ணாம் தேதி பணம் தந்துடறேன் இப்ப கடனா கொடுங்கன்னு வழிய வேண்டியிருக்காது."

"ஸாரிடி. உன் நிலைமை தெரியாம பேசிட்டேன்."

ரேவதி நிமிர்ந்து பளிச்சென்று புன்னகை உதட்டில் கட்டித் தொங்கவிட்டாள்.

"ஸோ வாட்? அப்புறம். நேத்து உன் உட்ஹப்பியோட சத்யா போகணும்னு லஞ்ச்லர்ந்தே பரபரத்துட்டிருந்தியே போனியா?"

கலகலப்பாய்ப் பேசிக்கொண்டே டைப்ரைட்டர் உறையை விரித்தாள்.

நேற்றைக்குப் பாக்கி வைத்துவிட்டுப் போன இரண்டொரு லெட்டர்களை டைப் தட்ட ஆரம்பித்தாள். டைப் மெஷின் இயக்கத்தை முடித்துபின் சொருகியிருந்த பேப்பரை உருவினாள். நேற்றைக்கு அடித்த லெட்டர் தாள்களோடு இதையும் சேர்த்து எடுத்துக்கொண்டு செக்ஷனை விட்டுவெளியே வந்தாள். வராந்தாவின் மத்தியிலிருந்த டெபுடி மேனேஜரின் அறைக் கதவைத் தட்டினாள்.

'டொக். டொக்.'

"கமின்..."

டி.எம். கண்ணனின் குரல் கதவிடுக்கு வழியே வெளிப்பட- கதவைத் தள்ளினாள்.



ரோலிங் சேரில் முப்பது வயது கண்ணன். மீசை, தாடிப் பிராந்தியங்களை ரெஹமான் மாதிரி ரேஸரால் வழித்துத் துடைத்தெறிந்தான். பெண்களைக் கவர்வதற்கென்றே ஒரு தனிக் கதிர் அவன் கண்களை விட்டுப் பிறிட்டுக் கொண்டிருந்தது.

அவன் அந்த அறையை ஒரு ஆபீஸ் அறை மாதிரியே வைத்திருக்கவில்லை. இன்ட்டீரியர்ல டெக்கரேஷனில் தனிச் சிரத்தைக் கையாளப்பட்டிருந்தது. நளினமான போஸ்களில் தந்த உடம்போடு இரண்டு பெண் சிலைகள் அவனுடைய பரந்த மேஜையின் இரண்டு பக்கமும் நின்று கொண்டிருந்தன. நாலு சுவர்களிலும் அப்பிக் கிடந்த வால் பேப்பர்கள் இயற்கை ஸீனரிகளின் உதவியோடு மனசை அள்ளிக் கொண்டிருந்தன.

"அந்த லெட்டர்ஸ் எல்லாத்தையும் டைப் பண்ணி முடிச்சுட்டியா ரேவதி?"

"முடிச்சுட்டேன் ஸார்."

லெட்டர்களால் கர்ப்பமாயிருந்த அந்த ஃபைலை அவனுக்கு எதிரே வைத்தாள்.

"இன்னிக்கு நோ ப்ராப்ளம், நீ ரொட்டீன் வொர்க்கைப் பார்க்கலாம்."

"ஓகே ஸார்."

ரேவதி திரும்பி நடக்க ஆரம்பித்தாள்.

கதவருகே போன போது சட்டென கண்ணனின் குரல் காற்றில் மிதந்து வந்து ரேவதியை நிற்க வைத்தது.

"ரேவதி ஒரு நிமிஷம்"

"ஸார்?"

"ஒரு சின்னக் கேள்வி."

"கேளுங்க ஸார்."

"மத்த டைப்பிஸ்ட்டெல்லாம் ஓவர்டைம் இருக்க மறுக்கும்போது, நீ மட்டும் ஓவர்டைம்னதும் சரின்னு தலையாட்டிடறியே? காரணத்தை நான் தெரிஞ்சுக்கலாமா?"

ரேவதியின் முகத்தைத் தயக்கப் படலம் சூழ்ந்து கொண்டது.

"பி. ஃப்ராங்க். எதுவா இருந்தாலும் சங்கோஜப்படாம சொல்லு."

சங்கோஜம் சங்கமமாகியிருந்த குரலில் பதில் சொன்னாள்.

"ஸார்.. என் குடும்ப சூழ்நிலைதான் ஸார் காரணம்... அப்பா இல்லாத எங்க குடும்ப ட்ராக் என்னாலதான் கஷ்டப்பட்டு ஓடிட்டிருக்கு."

"ஸோ அந்த எக்ஸ்ட்ரா பணத்துக்காகத்தான் ராத்திரி எட்டு ஒன்பது மணி வரைக்கும் ஓவர்டைம் செய்றியா?"

"ஆமா ஸார்."

"ஓவர்டைம்ல வர்ற பணத்தைப் போல மூணு மடங்கு அதிகமா தர்றேன்.. ராத்திரி ஒன்பதுமணிக்கு மேல உன்னால ஓவர்டைம் பார்க்க முடியுமா?"

"ஸார்."

திடுக்கிட்டு ரேவதி நிமிர்ந்தபோது அவனின் பார்வைக் கோடு தப்புத் தப்பான இடங்களை வருடிக் கொண்டிருப்பதை உணர்ந்தான். அவன் அவளைப் பார்த்துக் கொண்டே தொடர்ந்தான்.

"பச்சையா சொல்றேன், ராத்திரி ஒன்பது மணிக்கு மேல் நீ ஓவர்டைம் பார்க்க வேண்டிய இடம் ஆஃபிஸ் அல்ல! என் வீட்டு பெட்ரூம்."



# 7

ஒன்னரை அடி ஆழத்துக்குக் குழி தோண்டப்பட்டபோது மண் துகள்கள் அப்பிக் கிடந்த அந்த சுருட்டி வைக்கப்பட்டிருந்த துணிக்குவியல் பார்வைக்கு வந்தது. கான்ஸ்டபிள் துணிக் குவியலை வெளியே எடுத்துப் போட்டார்.

துணி இருந்த இடத்துக்குக் கீழே கறுப்பாய் என்னவோ தெரிய, இன்னும் கொஞ்சம் தோண்டிப் பார்க்க ஆரம்பித்தார்கள்.

குருதேவ்வும், ஜெயேந்திரனும் துணிக்குவியலுக்குப் பக்கத்தில் குனிந்து - அதைப் பிரித்துப் பார்க்க ஆரம்பித்தார்கள். பாம்பே டையிங் க்ளாத்தில் தைக்கப்பட்ட சர்ட், பேண்ட்! ஆஷ் நிற கட்டங்களோடு இருந்தது சர்ட்.

குருதேவ் கொஞ்சம் நிம்மதிப்பூ பூத்த முகத்தோடு ஜெயேந்திரனிடம் வார்த்தைகளைத் தெளித்தார்.

"ஸார்.. இப்பத்தான் கொஞ்சம் நிம்மதி. அட்லீஸ்ட் செத்துப் போயிருக்கிற ஆள் யாருன்னாவது கண்டு பிடிச்சிடலாம்."

"எப்படி?"

"இந்த சர்ட், பேண்ட்டை வச்சு விசாரிச்சா தெரிஞ்சுடும் ஸார்."

"எங்கே போய் விசாரிப்பீங்க?"

"அந்த வாட்டர்போர்டு ஆஃபிஸ்ல."

ஜெயேந்திரனின் முகப்பரப்பில் புன்னகை சுழன்றது.

"செத்துப் போயிருக்கிறது வாட்டர் போர்டு ஆஃபிஸைச் சேர்ந்தவர்னா நீங்க சொல்றது சரி. இந்த ஏரியாவுக்கே சம்பந்தமில்லாத ஆளா இருந்தா?"

"அப்பவும் ப்ராப்ளமில்லை ஸார். இந்த சர்ட்ல அழகா டெய்லர்ஸ் பேட்ச் தச்சிருக்கு. ந்யூ மகேஷ் டெய்லர் காஸ்மாசிடி - 1."

அதே விநாடி கான்ஸ்டபிள்கள் தோண்டுவதை நிறுத்தியிருந்தார்கள்.

"ஸார்."

ஒரு கான்ஸ்டபிள் இருவரையும் அழைக்க - இன்னொருத்தர் குழிக்குள்ளேயிருந்த அதை வெளியே உருவி எடுத்தார்.

நீளமான ரம்பம். ரம்பத்தின் பற்களில் ரத்தக்கறை மண் படியலோடு இருந்தது.

"குருதேவ்.. இதை உபயோகிச்சுத்தான் கொலையாளி டெட்பாடியை துண்டுத் துண்டா நறுக்கிப் போட்டிருக்கான்.."

"ஆமா சார்.."

"சார்?"

"இந்த 'ஹெண்ட் சா'வையும் ஃப்ளெஷ் பீஸைக் கட்டி வெச்சிருக்கிற மூட்டையையும் லெபரேட்டரிக்கு அனுப்பி வையுங்க."

"ஓகே சார்."

ஜெயேந்திரன் மீண்டும் குருதேவ்விடமே திரும்பினார்.

"குருதேவ்.. இப்ப நாம இந்த சர்ட் பேண்ட்டைக் காட்டி, அந்த ஆஃபிஸ்ல விசாரிச்சுப் பார்த்திடலாம்."

குருதேவ் ஜெயேந்திரனோடு நடக்க ஆரம்பித்தார்.

"பாக்கெட்ல ஏதாவது உருப்படியான பொருள் இருக்கான்னு பாருங்க."

நடந்து கொண்டே அந்த சர்ட், பேண்ட் பாக்கெட்களை சோதனையிட்ட குருதேவ் உதடுகளைப் பிதுக்கினார்.



"சில்லறைக் காசும், கொஞ்சம் பணமும்தான் சார் இருக்கு."

அந்த மரத்தினடியில் நின்றிருந்த வெள்ளை யுனிபார்ம் ப்யூனை ஜெயேந்திரன் கைதட்டிக் கூப்பிட்டார். கைத் தட்டல் சத்தம் காற்றில் மிதந்து போய் ப்யூனின் காதைத் தொட்டதும் - திரும்பிப் பார்த்த அவன் அவசரமாக ஓடி வந்தான்.

"என்ன சார்?"

"இந்த பேண்ட் சர்ட்டை உபயோகிக்கறது யாருன்னு தெரியுமா உனக்கு?"

குருதேவ் சர்ட்டை விரித்துக் காட்டினார்.

ரத்தக்கறை திட்டுத் திட்டாய் அப்பியிருந்த அந்த சர்ட்டைக் கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்த ப்யூன் சட்டெனக் கத்தினான்.

"சார்.. இது அக்கவுண்ட்ஸ் மானேஜர் ராமகிருஷ்ணனோட ட்ரஸ் சார்."

ப்யூனின் பதில் இரண்டு பேரின் மேலும் சந்தோஷக் காற்றை வீசியது. ஆஃபீஸ் படிகளைத் தொட்டு உள்ளே நுழைந்தார்கள். கரகரவென்று பேசைகள். ஆஃபீஸ் நேரம் தொடங்கியிருக்க, அலுவலர்கள் இருக்கைகளை ஆக்ரமித்திருந்தார்கள். நாற்பது சதவீதம் பெண் அலுவலர்களும் இடத்தை அடைந்திருந்தார்கள்.

ப்யூனின் உதவியோடு, அக்கவுண்ட் செக்ஷனைத் தொட்டார்கள்.

பிரதான இருக்கையில் இருந்த அலுவலரை அடைந்தார்கள். இன்ஸ்பெக்டர்களைப் பார்த்ததும் கண்களில் திகைப்பு ஊர்வலம் போக, எழுந்தார். அந்த அலுவலருக்கு எதிரே உட்கார்ந்தார்கள் இரண்டு பேரும்.

"இந்த கேம்பஸுக்குள்ளே ஒரு மர்டர் நடந்திருக்கிற விஷயம் தெரியுமா?"

அவர் தலையின் பாலைவனப் பிரதேசத்தைத் தடவிக் கொண்டே பதிலளித்தார்.

"ஜஸ்ட் இப்பதான் நான் சீட்ல வந்து உட்கார்ந்தேன். வந்ததுமே சொன்னாங்க. மானேஜர் வந்த பிறகு அவர் கிட்டே சொல்லிட்டு அங்கே வந்து என்ன நடந்ததுன்னு விசாரிக்கலாம்னு நினைச்சிட்டிருந்தேன்."

"மானேஜர்னு நீங்க குறிப்பிடறது அக்கவுண்ட்ஸ் மானேஜர் ராமகிருஷ்ணனையா?"

"ஆமா..."

"அவர் இன்னும் வரலையா?"

"வரலை."

"அவரோட சீட் எது?"

"அந்த ரூம் அவரோடதுதான்."

அந்த அலுவலர் காட்டிய திசையில் கண்ணாடிகளால் சூழப்பட்ட அந்த அறை தெரிந்தது. கண்ணாடியின் மேல் ஸ்டென்சில் எழுத்துக்கள் 'பளிச்'சென்று ப்ரிஸ்ட் செய்யப் பட்டிருந்தன.

உள்ளே தெரிந்த வெள்ளை நிற பாலிமர் சுழல் நாற்காலி காலியாய்க் கிடந்தது. அந்த அலுவலரிடமும் அந்த சர்ட் பேன்ட்டைக் காட்டி உறுதி செய்து கொண்டார் குருதேவ்.

"இந்த ட்ரஸ் ராமகிருஷ்ணனோடதா?"

ரத்தம் தோய்ந்து கிடந்த அந்த ஆடைகளைப் பார்த்ததும் அலுவலரின் முகத்தில் திடும்மென திடுக்கிடல் நதி சளசளத்தது.



"இது- மானேஜர் ராமகிருஷ்ணனோடதுதான் இன்ஸ்பெக்டர். நேத்திக்கு அவர் இதைத்தான் போட்டுக்கிட்டு வந்தார்."

"ராமகிருஷ்ணன் எந்த மாதிரி ஆள்?"

"வெரிகைன்ட் ஃபெல்லோ. ஆனா வேலை விஷயத்துல கெட்டி. எல்லார்கிட்டேயும் திறமையா வேலை வாங்கிடுவார்..."

"இந்த ஆஃபிஸ்ல அவரைப் பிடிக்காதவங்க யாராவது இருக்காங்களா?"

"பிடிக்காதவங்கன்னா?"

"சமீபத்துல யாராவது அவரோட பெரிசா சண்டை போட்டுக்கிட்டாங்களா?"

யோசிப்புப் புரளியில் கொஞ்ச நேரம் ஓடிய அலுவலர் மெல்லச் சொன்னார்.

"ரெண்டு வாரம் முன்னாடி ஒரு சின்ன விவகாரத்தால மானேஜர் எல்லார்கிட்டேயும் கெட்ட பெயர் சம்பாதிச்சுட்டார்."

ஆர்வத்தோடு வாக்கியங்களைத் தொடர்கிற அவரை ஏறிட்டார்கள் ஜெயேந்திரனும், குருதேவ்வும்.

"என்ன விவகாரம்?"

"சாரதான்னு ஒரு பொண்ணு இங்கே கிளார்க்கா வேலை பார்த்திட்டிருக்கு. அதுகிட்டே அவர் கொஞ்சம் தப்பிதமா பேசினார்னு பேசிக்கறாங்க."

"பேசிக்கறாங்கன்னு சொல்றீங்க... உங்களுக்கு நேரிடையா விஷயம் தெரியாதா?"

"நேரிடையா இந்த விவகாரம் யாருக்குமே தெரியாது."

"அந்த சாரதா இன்னும் இங்கே வேலை பார்க்குதா?"

"அதோ அந்த கார்னர் சீட் பொண்ணுதான் சார்."

அவர் சொன்ன திசையில் திரும்பிப் பார்த்தார்கள். சுமார் அழகோடு ஒரு பெண் லெட்ஜரில் குனிந்திருந்தாள். குனிந்த தலையின்மேல் ஒரு மஞ்சள் ரோஜா பதவியாக உட்கார்ந்திருந்தது.

"அது போக ரவிங்கற அக்கவுண்ட்டன்டுக்கும் மானேஜருக்கும் இடையே நாலைஞ்சு நாளா ஏதோ புகைச்சல்..! கண்ணாடி அறைக்குள்ளே ரெண்டு பேரும் காரசாரமா பேசிக்கறதைப் பார்த்திருக்கேன். அவங்க என்ன பேசிக்கிட்டாங்கன்னு தெரியலை."

"ரவியோட சீட் எது?"

அலுவலர் திரும்பிப் பார்த்தார்.

ரவியின் இருக்கையில் காற்று மட்டும் உட்கார்ந்திருந் திருந்தது.

# 8

சரோமா கார்டன், திரும்பின பக்கமெல்லாம் சுரப்பைக் கொட்டின மாதிரி புல்வெளி படுத்துக் கிடந்தது. ஜோடி ஜோடியாய் ஆண்களும் பெண்களும் தற்காலிகமாய் உலகத்தை மறந்துவிட்டுக் கைகோர்த்தபடி நடந்து கொண் டிருந்தார்கள். சில செடி மறைவுகள் ஜோக் அடிப்பதும் சிரிப்பதுமாயிருந்தன. சூர்யக் கதிர் மஞ்சளாய்ப் பாய்ந்து கொண்டிருந்த அந்த சிமெண்ட் பெஞ்சில் சந்தீப்பும், மேனகாவும்.

"சந்தீப் உங்களை இங்கே வரச் சொன்னது எதுக்காகத் தெரியுமா?"

"சொல்லுங்க."



"மனசுவிட்டுப் பேசறதுக்காக."

கேள்விக்குறி நெளிகிற பார்வையில் அவளையே பார்த்தான்.

"என்ன பேசணும்ன்னு நீங்க கேக்கலியா?"

"என்ன பேசணும்?"

"என்கிட்டே நீங்க சில நிஜங்களை ஒளிக்காம பேசணும்."

"நீங்க கேக்கறது எனக்குப் புரியலை."

"நேரடியாகவே விஷயத்துக்கு வர்றேன். அன்னிக்கு நர்ஸோல பாதி காபி குடிக்கக் குடிக்க திடீர்னு எங்கே போனீங்க?"

சந்தீப்பின் முகத்தில் ராத்திரி நிறம் பதவி வகிக்க ஆரம்பித்தது.

"அது... வந்து... திடீர்னு கம்பெனி விஷயம் ஒண்ணு ஞாபகத்துக்கு வந்தது. அதான் அவசரமா கம்பெனிக்கு ஓடிப் போனேன்."

"நீங்க அந்தக் கம்பெனில எத்தனை வருஷமா வேலை பார்க்கறதா என்கிட்டே சொன்னீங்க?"

"நாலு வருஷமா..."

"இது நிஜம்தானா?"

"நி...ஜ...ம்...தான்..."

"பொய்ன்னு என்னால நிரூபிக்க முடியும்."

"மேனகா?"

"நான் உங்க கம்பெனிக்கே நேரடியா போய் விசாரிச்சுப் பார்த்துட்டேன். நீங்க அங்கே வேலை சேர்ந்து இன்னும் முழுசா ஒரு மாதம்கூட ஆகலை."

"மே...ன...கா?"

"அது மட்டுமில்லே... அன்னிக்கு நாஸே ஸ்டால்ல உங்களை நான் நல்லா வாட்ச் பண்ணினேன்... நீங்க ஒரு போலீஸ் கான்ஸ்டபிளைப் பார்த்துப் பயந்து போய்த்தான் திடீர்னு அந்த இடத்தைவிட்டு நழுவினீங்க... ஐ எம் கரெக்ட்..."

தூள் தூளாய் உதிர்ந்து போய் மேனகாவைப் பார்த்தான்.

"என்னோட அஸ்ஸெம்ஸன்படி நீங்க என்னவோ தப்பு பண்ணிட்டு எங்க வீட்ல அடைக்கலமாயிருக்கீங்க... யு மே பி எ க்ரிமினல். அதான் போலீஸைப் பார்த்ததும் உங்க கண்ணுல அத்தனை பயம்... கம்பெனியை விட்டா வீடு, வீட்டை கம்பெனின்னு நீங்க இருக்கறதுக்கு காரணமே வெளியுலகத்தோட பார்வையில் அனாவசியமா படக்கூடாதுங்கற பயம்தான்."

வெளிறிப் போன முகத்தோடு கொஞ்சம் உரத்த குரலைக் காற்றில் தூவினான்.

"நோ...! நீங்க என்னென்னவோ சொல்றீங்க மேனகா. வீட்டைக் காலி பண்ணிடுன்னு சொல்லுங்க... நான் காலி பண்ணிட்டுப் போயிடறேன். இந்த மாதிரி அனாவசிய பழியையெல்லாம் என் மேல போடாதீங்க..."

"நீங்க தப்பு எதுவும் பண்ணலை?"

"பண்ணலை."

"அப்புறம் ஏன் இத்தனை படபடப்பு? மூஞ்சி பூராவும் வியர்வை?"

"வீண் பழியை நான் தாங்கிக்க மாட்டேன்."

"நீங்க தப்பே செய்யலைங்கறதை நான் ஒத்துக்கறேன். ஆனா நீங்க இப்ப என்னோட - எனக்குத் தெரிஞ்ச போலீஸ் இன்ஸ்பெக்டர் வீட்டுக்கு வரணும். வருவீங்களா?"



பேச்சிழந்து அவளைப் பார்த்தான்.

"ஏன் அமைதியாயிட்டீங்க...? சந்தீப் என்னை உங்க டியர்மோஸ்ட் ஃப்ரெண்டா நினைச்சு உங்களைப் பத்தின நிஜங்களைச் சொல்லுங்க. நான் உங்களை நிச்சயம் காட்டிக் கொடுக்க மாட்டேன். ஆனா நீங்க நிஜத்தை என்கிட்டே மறைக்கிற பட்சத்துல அதைத் தெரிஞ்சுக் கணும்ங்கற ஆர்வத்தை என்னால தடுக்க முடியாது நான் சொன்னேனே போலீஸ் இன்ஸ்பெக்டர்... அவர் நம்ம வீட்டுக்கு வந்து உங்களோட பேசிப் பார்ப்பார்."

"வே... வேண்டாம். மேனகா!"

"அப்ப உண்மைகளைச் சொல்லுங்க."

தயக்கம் நீராவிப் பூராவும் புகை மாதிரி அவனைச் சூழ்ந்தது.

"தயங்காம சொல்லுங்க... நான் உங்களைக் காட்டித் தரமாட்டேன்..."

"நான் ஒரு கொலையைப் பண்ணிட்டுத் தலைமறைவாகியிருக்கேன்... போலீஸால தேடப்படற கொலைக்காரன் நான்...!"

சாவகாசமான புன்னகை மேனகாவின் உதடுகளில் தத்தியது. மலர்ச்சியோடு சொன்னாள்.

"வெரிகுட்! கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி நீங்க எங்ககிட்டே வந்து மாட்டியிருக்கீங்க... உங்களை மாதிரி ஓர் ஆளைத்தான் எங்க இயக்கத்துக்காக ரொம்ப நாளா நாங்க தேடிட்டிருக்கோம்..."

# 9

**சா**ரதா ஜெயேந்திரனையும், குருதேவ்வையும் கலக்கமான பார்வையால் ஏறிட்டாள்.

"மானேஜர் ராமகிருஷ்ணன் கொலையாயிட்டாரா?"

"எஸ்."

லெட்ஜர் விளிம்பைக் கீறிக் கொண்டு சாரதா அவஸ்தையாய் கேட்டாள்.

"அதுக்காக என்கிட்டே என்ன கேக்கணும்?"

"உங்களுக்கும் மானேஜருக்கும் இடையில் கொஞ்ச நாளா ஏதோ பிரச்சனை புகைஞ்சிட்டிருந்ததா சொல்றாங்க?"

தயக்கத்தோடு தலையசைத்தாள்.

"ஆமா."

"என்ன பிரச்சனை?"

"ராமகிருஷ்ணன் எனக்கு லவ் அப்ளிகேஷன் போட்டார்... அதான் பிரச்சனை. உங்களை எனக்குப் பிடிக்கலைன்னு ஒரே வார்த்தைல முற்றுப்புள்ளி வெச்சுட்டேன். ஆனா அவர் தொடர்ந்து என்னைத் தொந்தரவு பண்ணிட்டே இருந்தார். எனக்குக் கோபம் வந்து க்ளாஸ் ரூமுக்குள்ளே மானம் போற மாதிரி கத்திட்டு வந்துட்டேன்."

"நீங்க அவரை விரும்பலை?"

"நான் என்னோட மாமா பையன் ப்ரகாஷுக்குத் தான்னு முடிவாகி ரொம்ப நாள் ஆச்சு சார். ப்ரகாஷ் கிட்டே இந்த விஷயத்தைச் சொன்னப்போ அவன் கொதிச்சுப் போயிட்டான்."



"கல்யாணம் பண்ணிக்கப் போறவரை அவன் இவன்ங்கறீங்க?"

"பக்கத்து பக்கத்து வீடு. சின்னதுலேர்ந்தே பழக்கம். மொதல்ல வாடா போடான்னு கூப்பிட்டிருந்தேன். அம்மா, அப்பா திட்டித் திட்டி இப்ப இந்த அளவுக்கு மரியாதை உசந்திருக்கு!"

"ப்ரகாஷை நேத்து நீங்க பார்த்தீங்களா?"

"இல்லை."

"ப்ரகாஷோட அட்ரஸ் கொடுங்க."

"ஓம், மஞ்சரி ஸ்ட்ரீட், த்ர்ட் அவென்யு, காஸ்மப் சிடி."

"தாங்க்யு."

"தொட்ட மாதிரி ரைட் சைட் வீடு எங்க வீடுதான்."

"அக்கவுண்ட்டன்ட் ரவிகூட எந்த அளவுக்குப் பழக்கம்?"

"அவரோட அதிகமா பழக்கம் இல்லை. ஏன்னா ஏன்ங்கறதோட சரி."

"நேத்திக்கு அவர் ஆஃபிஸ் வந்திருந்தாரா?"

"வந்திருந்தார்."

"அவருக்கும் மானேஜர் ராமகிருஷ்ணனுக்கும் இடையில்கூட ஏதோ தகராறுனுன்னு சொன்னாங்க?"

"ஆமா இன்ஸ்பெக்டர் சார்..."

"எதனால தகராறுன்னு தெரியுமா?"

"தெரியலை. ஆனா ஒரு வாரமா மானேஜர் மேல ரவிக்கு என்னவோ பயங்கரமான கோபம்!"

சாரதாவிடம் விசாரணையை முடித்துக் கொண்டு, அக்கவுண்ட்டன்ட் ரவியின் முகவரியை வாங்கிச்

சொன்னபடியே, ஜெயேந்திரனும் குருதேவ்வும் மரத்தினடியில் இருந்த ஜீப்புக்கு வந்தார்கள். ரவியின் முகவரியைத் தேடி இருபது நிமிஷம் சாலைகளை விழுங்கினார்கள்.

பெரிய ஓட்டு வீடு. முன்பக்கம் வரிசையான தூண்களோடு ஒரு திண்ணை. தேக்கு மரக்கதவை ஆட்காட்டி விரலால் உசுப்பி 'டொக்டொக்'கென்று சத்தம் போட வைத்தார்கள்.

இளமை வட்டத்தில் இருந்த பெண் கதவைத் திறந்தாள்.

"யாரு வேணும்?"

முன்னால் விழுந்த முடிக்கற்றையை ஒதுக்கி காதோரம் அடக்கி வைக்க முயன்றாள்.

"வாட்டர்போர்டு ஆஃபிஸ்ல அக்கவுண்ட்டன்ட்டா இருக்கற ரவியோட வீடுதானே இது?"

"ஆமா."

"அவரை நாங்க பார்க்கணும்..."

"அவர் வீட்ல இல்லையே..."

"எங்கே போயிருக்கார்?"

"தெரியலை..."

"எப்ப போனார்?"

"நேத்திக்கு சாயந்தரம்..."

"நேத்திக்குச் சாயந்தரம் போனவர் ராத்திரியெல்லாம் வீடு திரும்பலையா?"

"ம்ஹூம்..."

"நீங்க?"

"நான் அவரோட ஒய்ஃப்.. எதுக்காக அவரை விசாரிக்கறீங்க?"



"மிஸஸ் ரவி.. உங்க கணவர் நேத்திக்கு சாயந்தரம் வீட்டை விட்டுப் போய் இன்னும் திரும்பலைங்கறது உங்களுக்கு விபரீதமா படலையா?"

"இதிலென்ன விபரீதம்.. அவருக்கு ஃப்ரெண்ட்ஸ் ஜாஸ்தி. திடீர்னு திடீர்னு ஃப்ரெண்ட் வீட்டுக்குப் போனார்னா சீட்டு அது இதுன்னு கும்மாளமடிச்சுட்டு ரெண்டு நாள் கழிச்சுகூட வருவார்..."

"அஸ் எ ஒய்ப் நீங்க அவரைக் கண்டிக்கலையா?"

"நான் படிச்சவ! ஃப்ரெண்ட்ஸ் வீட்டுக்கு அவர் போறது வர்றதைத் தடுக்கறது அவரோட சுதந்திரத்துல குறுக்கிடற மாதிரின்னு நினைக்கறேன்! எதுக்காக அவரை விசாரிக்கறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"அவருடைய மானேஜர் நேத்து ராத்திரி கொலை செய்யப்பட்டிருந்தார். உங்க கணவர் ரவியை நாங்க சந்தேகப்படறோம்..."

திடுக்கிடல் ஒன்று நெத்தியடியாய் மோத நிமிர்ந்தாள்.

"இன்ஸ்பெக்டர்?"

"அவர் வழக்கமா போற இடங்களோட அட்ரெஸ்லாம் சொல்றீங்களா?"

அதிர்ச்சியின் பிடியிலிருந்து மீளாமல், சில இடங்களைச் சொன்னாள்.

"சரி நாங்க புறப்படறோம். தேவைப்பட்டா திரும்ப வர்றோம்."

நடக்க ஆரம்பித்தார்கள்.

வாசல்படி இறங்குகிறபோது சட்டென நின்றார் குருதேவ்.

"சார்..."

"என்ன குருதேவ் நின்னுட்டீங்க?"

"சார் ஒரு சத்தம் உங்க காதில் விழுகுதா?"

"என்ன சத்தம்?"

கேட்டபடியே காதைத் தீட்டிய ஜெயேந்திரனின் காது மடல்களும் அந்தச் சத்தத்தை உணர்ந்தது.

"ர்ர்ர்ர்...வெய்ங்ங்ங்..."

"மிஸஸ் ரவி..."

கதவருகே நின்றிருந்த அவளை மறுபடியும் கூப்பிட்டார்கள்.

"என்ன இன்ஸ்பெக்டர்?"

"உங்க வீட்டுக்குப் பின்னாலிருந்து என்னவோ சத்தம் வருதே?"

"பின்னாடி சின்ன மில் ஒன்று இருக்கு. அங்கிருந்து வர்ற சத்தம்தான்."

"அந்த மில்லை நாங்க பார்க்கலாமா?"

"ஷ்யூர்..."

அவள் பின்பக்கம் கூட்டிப் போனாள்.

அங்கே -

மர அறுவை மில்.

மெஷின்களின் மூலமாகவும், தொழிலாளர்கள் மூலமாகவும் பெரிய பெரிய ரம்பங்களின் உதவியோடு மர பிளாக்குகள் துண்டுத் துண்டாய் அறுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. வாட்டர் போர்டு காம்பவுண்டில் மண்ணுக்கடியில் கிடைத்த ரம்பம் ஜெயேந்திரன், குருதேவ்வின் மூளைப் பிரதேசங்களை ரப்பெனத் தாக்கியது.



# 10

மேனகா, சுப்ரபா, வினயா மூன்று பேருக்கும் மத்தியில் அவஸ்தையோடு உட்கார்ந்திருந்தான் சந்தீப். அந்த மூன்று பெண்களும் அவன் பார்வைக்கு மூன்று அழகான ஆபத்துக்களாய்த் தெரிந்தார்கள். மேனகா காற்றுப் பல்லக்கில் வார்த்தைகளைப் பவனிவிட ஆரம்பித்தாள்.

"சந்தீப் உங்களைப் பத்தின எல்லா உண்மைகளும் இப்ப எங்களுக்குத் தெரிஞ்சாச்சு. நாங்க மூணு பேரும் நிச்சயமா உங்களைக் காட்டிக் கொடுக்க மாட்டோம். ஆனா எங்களுக்கு நீங்க சில உதவிகளை செஞ்சு தரணும். செய்வீர்களா?"

"வேற வழியில்லாம - செய்யறேன்."

"இப்படி ஈடுபாடு இல்லாம பேசாதீங்க. எங்களோட நல்ல மனசைப் புரிஞ்சுகிட்டு, முழு மனசோடு எங்ககூட நீங்க ஒத்துழைக்கணும்."

"என்னவோ இயக்கம் அது இதுன்னீங்களே?"

"எஸ்... பெண்களுக்கு எதிரா சமூகத்தில் நடக்கிற சில மறைமுக அநியாயங்களை எதிர்க்கிற இயக்கம்."

"உங்க இயக்கத்துக்குப் பேர் இருக்கா?"

"இதுவரைக்கும் இல்லை... நீங்க வேணா ஏதாவது சூட்டுங்க..."

"ரொம்ப பெரிய இயக்கமா? நிறைய மெம்பர்ஸ் இதுல இருக்கீங்களா?"

"நோ...நோ... நாம நாலுபேர்தான் மெம்பர்ஸ்."

"நாலு பேர் சேர்ந்து சமுதாயத்தை சீர்திருத்தலாங்க நீங்களா? அதெல்லாம் நடக்காதுங்க. ஆயிரம் பேர் சேர்ந்து

உண்ணாவிரதம் இருக்கற போராட்டமெல்லாம் புஸ்ஸ"ன்னு போயிடுது."

"அது அஹிம்சை - காந்தி வழி. நம் வழிகாட்டி அதோ அந்த போட்டோல மீசையை முறுக்கிட்டு தீயா முறைச்சிட்டு இருக்காரே... அவர்தான்."

"யாரு?"

திரும்பிப் பார்த்தான்.

"ரௌத்திரம் பழகுன்னு சொன்ன பாரதியார்!"

"ரௌத்திரமா?"

"கோபப்பட்டு பழகு. பொங்கியெழு..."

"அவர் எதை மனசுல வெச்சிட்டு அப்படி சொன்னாரோ... பாரதியார் பேரைக் கெடுத்துராதீங்க..."

"சந்திப்... பெண்களுக்கு எதிரா எந்தெந்த வகையிலெல்லாம் கொடுமை நடந்திட்டிருக்கு..."

"வரதட்சணை கொடுமை! அதனால எத்தனையோ பெண்கள் கல்யாணமாகமா தவிச்சிட்டிருக்காங்க..."

"கல்யாணம் ஆகாம தவிக்கறதுதான் உங்களுக்கு முதல் கொடுமையா தெரியுமா? சரி அப்புறம்..."

"கல்யாணம் ஆனபிறகு மாமியார் வீட்டுக் கொடுமைகள்... ஸ்டவ் வெடிக்கறது... தீக்குளியல் எக்ஸ்ட்ரா."

"அப்புறம்...?"

"ஈவ்டீஸிங்... ரோட்ல போற பொண்ணுங்களை வரையறையே இல்லாம சில பேர் கேலி பண்றாங்க..."

"அப்புறம்?"

"இன்னும் நிறைய இருக்கு. அதெல்லாமே சட்டத்தோட பார்வைக்கு, போலீஸோட பார்வைக்கு ஓரளவு வந்துடுத்து. ஆனா நாலு சுவத்துக்குள்ளேயே அடங்கிப் போயிடற சில அநியாயம் பத்தி உங்களுக்குத் தெரியுமா?"



கேட்ட மேனகாவையே சந்திப் பார்த்துக் கொண்டிருக்க, அவள் வாக்கியங்களைத் தொடர்ந்தாள்.

"குடும்ப சூழ்நிலைக்காக - வாழ வேண்டிய நிர்ப்பந்தத்துக்காக - வேலைக்குப் போய் சம்பாதிச்சாதான் லைஃப்ங்கற கட்டாய சூழ்நிலையோட வேலைக்குப் போற பெண்கள் எத்தனையோ பேர் இருக்காங்க! அந்தப் பெண்களோட ஏழ்மை நிலையைப் பயன்படுத்தி அவங்களை தன்னோட ஆசைக்கு உடன்பட வைக்க நினைக்கிற அப்பிரியர்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கீங்களா?"

"ம்..."

"இதனால கெட்டுப் போன எத்தனையோ பெண்களை எனக்குத் தெரியும் சந்திப்... இதனாலே தற்கொலையே பண்ணிக்கிட்ட நிறைய பேரை எனக்குத் தெரியும். இந்த அநியாயத்துல மானப் பிரச்சனையும் அடங்கியிருக்கறதால போலீஸ் வரைக்கும் பெரும்பாலும் விஷயம் போறதேயில்லை...! அந்த மாதிரி சுப்பீரியர்கள் நாலு பேருக்கு நாம தண்டனை தரணும்... பகிரங்கமா இந்தக் காரணத்துக்காகத்தான் அவங்களுக்கு இந்தத் தண்டனைன்னு அறிவிக்கணும். அடுத்தவன் இதே தப்பைச் செய்ய யோசிப்பான்..."

"தண்டனைன்னா?"

"அந்த மாதிரி சுப்பீரியர்ளை நார் நாரா கிழிச்சுப் போடணும்... துண்டுத் துண்டா வெட்டிப் போடணும்..."

சொல்கிறபோது மேனகாவின் கண்கள் தக்காளி நிறமாய்ச் சிவந்து கிடந்தது. மார்புகள் ஆவேசமாய் ஏறித் தாழ்ந்து கொண்டிருந்தன.

"இந்த விஷயத்துல உங்களுக்கு இவ்வளவு கோபமும் வேகமும் இருக்கும்னு நான் நினைக்கலை."

"நான் பாதிக்கப்பட்டவ சந்திப்... கொச்சின்ல ஒரு மானேஜரால கறை படிஞ்சிட்டவ... ஒவர்டைம் இருக்கச்

சொல்லி என்கிட்டே ஓவரா விளையாடிட்டான் அந்த அயோக்கியன்..."

கண்களில் திகைப்புச் சக்கரம் சுழல - மேனகாவைப் பார்த்தான்.

"நான் மட்டுமில்லை. இந்த ரூம்ல இருக்கிற வினயா சுப்ரபா எல்லாருமே இந்தக் கொடுமையால பாதிக்கப்பட்ட வங்கதான். நாங்க மூணு பேரும் சேர்ந்து எடுத்த முடிவுதான் இந்த மறைமுகமான சின்ன இயக்கம்! ஓரளவுக்கு எங்க ளோட ஒத்துப் போற மாதிரியான ஆளைத் தேடிட்டிருந் தோம். விதி மாதிரி நீங்க வந்து சேர்ந்தீங்க..."

"நான் என்ன செய்யணும்?"

"இனிமே நான், நீன்னு பிரிச்சுப் பேசாதீங்க... நாம!"

"நாம என்ன செய்யணும்?"

"இந்த அநியாயத்தை எதிர்த்து சத்தமில்லாம ஒரு பூகம்பத்தைத் தொடங்கணும்."

"எப்படி?"

"நிதானமா யோசிச்சு திட்டம் போட்டு, முதல் குறியைத் தீர்க்கணும்."

"யாரது?"

"நம்ப முதல் குறி - என் ஃப்ரெண்ட் ரேவதியோட மானேஜர் கண்ணன்..."

## 11

திரையிசை முடிந்திருக்க - அந்த ஒட்டை ட்ரான்ஸிஸ்டரில் சிலோனைத் தேடிக் கொண்டிருந்தான் குணசேகரன். ஷார்ட்ஸ் மட்டும் போட்டுக் கொண்டு



உடம்பு பூராவும் எண்ணெய் தேய்த்த மாதிரி வியர்வை மின்ன, பாம்பு மாதிரி மூச்சு விட்டுக் கொண்டு தண்டால் எடுக்கிற ராஜன் கத்தினான்.

"குணசேகர்... அதை ஆஃப் பண்ணிட்டு மொதல்ல நீ போய்க் குளி... நான் பாத்ரூமுக்குள்ளே நுழைய வர்றப்ப தகராறு பண்ணிட்டு நிக்காதே..."

"ஒரே நிமிஷம்... சிலோன் கிடைக்கவே மாட்டேங்குது"

"நான் இப்ப விடுதலைப் புலியா மாறப் போறேன்... உம் மேல பாயப் போறேன்..."

ட்ரான்ஸிஸ்டரோடு போராடுகிற குணசேகரன் பட்டென்று ஆஃப் பண்ணிவிட்டு பாத்ரூமை நோக்கிப் போனபோது -

கதவு தட்டல்.

"யாருன்னு பாரு..."

கதவைத் திறந்தான். ஜெயேந்திரன், குருதேவ்.

"என்ன வேணும் இன்ஸ்பெக்டர்?"

"மிஸ்டர் ராஜன் தங்கியிருக்கிற ரூம்தானே இது?"

"ஆமா..."

"நீங்க?"

"நான் ராஜனுடைய ரூம்மேட் குணசேகரன்."

"ராஜன் இப்ப இருக்காரா?"

"இருக்கார் உள்ளே வாங்க..."

அவர்கள் உள்ளே நுழைந்தார்கள். சுவர் போஸ்டரில் நாக்பூரின் கதாநாயகி வெள்ளை மேலாடையோடு அருவி நீரில் ஈரமாகிக் கொண்டிருந்தாள். நைலான் கயிறு கசகசவென்று துணிகளின் தொங்கலோடு குறுக்கே ஓடிக் கொண்டிருந்தது. ஜன்னல் வழியே பக்கத்துக் காம்பவுண்ட் பத்மாவதி மயிர் கோதிக் கொண்டு தெரிந்தாள்.

டவலால் வியர்வையை ஒற்றிக்கொண்டே, ராஜன் வந்தான். ஷார்ட்ஸுக்கு மேல் லுங்கி கொடுத்திருந்தான்.

"நீங்கதான் ராஜனா?"

"ஆமா இன்ஸ்பெக்டர்.. எதுக்காக என்னைத் தேடி வந்திருக்கீங்க?"

"வாட்டர் போர்டு அக்கவுண்ட்டண்ட்டா இருக்கிற ரவி உங்களோட ஃப்ரெண்ட்தானே?"

"ஆமா.."

"அவரைக் கடைசியா நீங்க எப்ப பார்த்தீங்க?"

"முந்தா நாள், ஏன் அவனுக்கு என்ன ஆச்சு?"

"அவரை நாங்க தேடிட்டிருக்கோம்."

"ரவியை நீங்க தேடறீங்களா எதுக்கு?"

"அவர் ஒரு கொலை செஞ்சிட்டுத் தலைமறைவா யிருக்கார்.."

"கொ.. கொலையா?"

அவன் கண்களில் அதிர்ச்சி மேடை போட்டுக் கொண்டது.

திரும்பி ரூம் மேட்டை ஒருதரம் பார்த்துக் கொண் டான்.

குணசேகரன் கேட்டான்.

"ரவி யாரைக் கொலை பண்ணினான்?"

"அவருடைய மானேஜர் ராமகிருஷ்ணனை.."

"மை குட்னஸ்.."

"நேத்திக்கெல்லாம் அவர் இங்கே நிச்சயமா வரலை."

"வரலை இன்ஸ்பெக்டர்.."

"உங்ககிட்டே ரவி மானேஜர் சம்பந்தமா ஏதாவது சொல்லியிருக்காரா?"



"ம்ஹூம்.."

ராஜன் மறுத்துக் கொண்டிருக்க, குணசேகரன் என்னவோ யோசிக்கிற மாதிரி நின்றான்.

"இன்ஸ்பெக்டர்.."

அவசரமாய்க் கூப்பிட்டான்.

"எஸ்.."

"எனக்கு இப்ப ஞாபகம் வருது. நாலுநாள் முன்னாடி என்னோட மானேஜரைப் பத்தி பேச்சு வந்தது. அப்ப ரவி ஒண்ணு சொன்னான்."

"என்ன சொன்னார்?"

"அப்ப நான் அவன் சொன்னதை கேஷுவலா எடுத்துக் கிட்டேன். இப்பதான் அந்த வாக்கியத்தோட விபரீத அர்த்தம் புரியுது. கூடிய சீக்கிரத்துல என்னோட மானேஜரை வெளியே நடமாட முடியாதபடி செய்யப் போறேன்னு சொன்னார்."

## 12

**வி**னயா டீ தயாரித்துக் கொண்டு வந்து கோப்பை களை மூன்று பேரின் எதிரிலும் வைத்தாள். சந்தீப் குரலைக் காற்றில் செதுக்க ஆரம்பித்தான்.

"மேனகா முதல் குறியா கண்ணனைத் தீர்த்துட லாம்ன்னு ரொம்ப சுலபமா சொல்றீங்க. கொலை பண்றது அத்தனை ஈஸி இல்லை. ஏற்கெனவே ஒரு மர்டர் பண்ணின அநுபவத்தை வச்சு சொல்றேன்."

"என்ன சந்தீப் இப்படிச் சொல்றீங்க? உங்க அநுபவத் தைத்தான் நம்ம பலமா நினைச்சுட்டிருக்கேன். மனசுல

நம்பிக்கை இருந்தா என்னைப் பொறுத்தவரை எல்லாமே சுலபம்தான். நாம குற்றம் செய்யலை சந்தீப்.. குற்றம் செய்யறவனுக்குத் தண்டனை தர்றோம்.."

"சரி.. உங்க ப்ளான் என்ன?"

"ஃபர்ஸ்ட் ஆஃப் ஆல்.. நாம நாலு பேரும் இந்தக் காரியத்தைப் பெரிய பாரமா நினைக்கறதை மறக்கணும்.. காபி குடிக்கற மாதிரி, டி.வி. பார்க்கிற மாதிரி, ஒரு சாதாரண - இயல்பான வேலையா இதை நினைக்கப் பழகணும்.. நம்ம இயக்கத்தோட வெற்றி அதில்தான் இருக்கு."

சுப்ரபா குறுக்கே வந்தாள்.

"நாம மூணு பேரும் அப்படித்தான் நினைக்கிறோம். சந்தீப்தான் மாறணும்."

"கம்ப்ளைண்ட் பார்த்திங்களா? எங்களோட ஒருத்தரா மாறி வாங்க சந்தீப்."

"வந்தேன்.."

"குட்.. என்னோட ப்ளான் என்ன தெரியுமா? ஒரு நீளமான வெள்ளை பேப்பரை எடுக்கறோம். அழகான கையெழுத்துல கமிஷனருக்கு ஒரு லெட்டர்.. என்னென்ன காரணத்துக்காக நாம கண்ணனைக் கொலை செஞ்சோம்."

"இன்னும் செய்யலை.."

"கண்ணனைக் கொலையான பிறகுதான் இந்த லெட்டர் கமிஷனர் கைக்குப் போகும்."

"கண்ணனை எப்படி தீர்க்கறது?"

"நாளைக்குச் சாயந்தரம் நான் போன் பண்ணுவேன்.."

"கண்ணனுக்கா?"

"ஆமா.. சாயந்தரம் ஏழு மணிக்கு டோப்பியாரா கார்டனுக்கு வாங்க.. உங்களோட பேசறதுக்காக ஏக்கத்தோட காத்திருக்கிட்டிருக்கேன்னு போன்ல சொல்லுவேன்.. அவன் பொம்பளை விஷயத்துல படு வீக்.. நான் யாருன்னு தெரிஞ்சுக்கறதுக்காக கண்டிப்பா டோப்பியாரா கார்டன் வருவான்.. தைரியமா லெட்டரை போஸ்ட் பண்ணிட்டு நாம நாலு பேரும் கார்டன் போறோம்.. அங்கே எந்த செடி மறைவுல வச்சு கண்ணனை எப்படித் தீர்க்கறதுன்னு அப்புறம் விபரமா பேசலாம்."



## 13

"ஸார், நாம இப்போ எங்கே போறோம்?" ஸ்டியரிங்கை வளைத்துக்கொண்டே கேட்டார் குருதேவ்.

" 'மக்கள்' பத்திரிகை ஆபிஸ்க்கு.."

"அங்கே போயி?"

"ரவியோட போட்டோ கொடுத்து விளம்பரம் போடச் சொல்லணும்.. ரவியைப் பத்தி தகவல் சொல்றவங்களுக்குப் பரிசுன்னு அறிவுப்புப் போடணும்.."

"ரவிதான் கொலையாளிங்கற முடிவுக்கே வந்துட்டீங்களா ஸார்?"

"இதுவரைக்கும் நடந்த இன்வெஸ்டிகேஷன் ரவியைத்தான் கை காமிக்குது.. ரவிக்கும், மானேஜர் ராமகிருஷ்ணனுக்கும் இடையில் தகராறு! சம்பவத்தைத் தொடர்ந்து ரவி தலைமறைவாயிட்டான். டெட்பாடியை அறுக்கப் பயன்பட்ட ஆயுதம் ஹேண்ட் ஸா.. ரவியோட வீட்டுக்குப் பின்னால ஒரு ஸா மில்.. போதாக்குறைக்கு ரவி, ஃப்ரெண்ட் குணசேகரன் கிட்டே - கூடிய சீக்கிரம் மானேஜர் ராமகிருஷ்ணனை வெளியே நடமாட முடியாதபடி செய்யப்

169380/602 78.37
வட்டார நூலகம்
அசோக் நகர், சென்னை



போறேன்னு வேற சொல்லியிருக்கான். இவ்வளவு ஆதாரம் பத்தாதா?"

"சாரதாவோட மாமா பையன் ப்ரகாஷை நாம சரியா விசாரிக்கலை ஸார்."

"விசாரிச்ச வரை போதும் குருதேவ்.. அவன் வெறும் கொலைக்கற நாய்.."

"இந்தக் கேஸைப் பொறுத்தவரை இன்னும் நாம செய்ய வேண்டியது என்னென்ன?"

"ரவி எங்கிருக்கான்னு கண்டுபிடிக்கணும்.. அவனுக்கும் மானேஜர் ராமகிருஷ்ணனுக்கும் என்ன தகராறுன்னு தெரியணும். இந்த ரெண்டு விஷயமும் தெரிஞ்சிட்டா ஃபைலைச் சாத்திட்டு போயிட்டே இருக்கலாம்."

ஜீப் சரோவர் பாதையில் மூக்கை நுழைத்து - நீளமாய் நீந்த ஆரம்பித்தது.

"ஊர்ல இருக்கற லாட்ஜ் பூராவும் ஒண்ணு விடாம அலசிப் பார்த்துட்டீங்களா?"

"பார்த்தாச்சு சார்!"

"ரவியோட வெளியூர் ரிலேடிவ்ஸ் வீடு?"

"அதையும் அலசியாச்சு.. நார்த் பக்கம் நழுவிப் போயிருந்தான்னா தேடறது சிரமம்தான்.."

"போக மாட்டான் குருதேவ்.."

"எப்படிச் சொல்றீங்க?"

"ஒய்ஃப் இங்கே இருக்கா! ஒய்ஃபைப் பார்க்கறதுக்காக வராம போக மாட்டான்."

"அதையும் நான் யோசிச்சேன் ஸார். ரவியோட வீட்டைக் கண்காணிக்க - மஃப்டி காப்ஸ் போட்டிருக்கேன்! அந்த ரவி ரொம்ப ஜாக்கிரதையான ஆளாய்த்தான்



இருக்கணும்.. இல்லைன்னா நாம விரிச்சு வெச்சிருக்கற விஸ்தாரமான வலைல இந்நேரம் எப்படியும் விழுந்திருக்கணும்.."

அந்தப் பெரிய காவிநிறக் கட்டடத்தில் ஜீப் நுழைந்தது. 'மக்கள்' என்ற பெரிய பெரிய எழுத்துக்கள் எடுப்பாக சுவரை விட்டுத் துருத்திக் கொண்டிருந்தன. நிறைய பேர் உள்ளே போவதும், வருவதும் வாகனங்களைக் கிளப்புவதுமாய் பரபரப்பை ஸ்ருஷ்டித்துக் கொண்டிருந்தார்கள்.

"ஜெ..வா..? ஜா..வா..? எது நிக்கும்ங்கறே?"

விவாதித்துக் கொண்டிருந்த மூன்று பேர் அடங்கிய கும்பலைக் கடந்தார்கள். படிகளில் தத்தி - ரிஸப்ஷனைக் கடந்தார்கள். டெலி பிரிண்டர் டப்டப்பென்று திக்கிக் கொண்டிருந்தது. அட்வெர்டைசிங் செக்ஷனை அடைந்தார்கள்.

"மூணாவது காலத்துல ஒம்போது இஞ்சல இத போட்டுருண்டேன்..." உரையாடலில் ஈடுபட்டிருந்த க்ளார்க்கின் மேஜையைத் தொட்டார்கள்.

"வாங்க ஸார்" அந்த க்ளார்க் இரண்டு பேரையும் பரிச்சயமாக வரவேற்றான்.

ரவியின் போட்டோவைக் கொடுத்து விபரம் சொன்னார்கள்.

ரவியின் போட்டோவையே சில விநாடிகள் உற்றுப் பார்த்த கிளார்க் அவசர ஸ்வரத்தைச் சிந்தினான்.

"ஸார் இவனைத்தான் தேடறீங்களா?"

"ஆமா.."

"எங்க வீட்டுக்குப் பக்கத்துல புதுசா குடிவந்த ஆள் ஒருத்தன் பார்த்தா கிட்டத்தட்ட இவன் ஜாடையில் இருக்கான்."

## 14

மேகா ஃபவுண்டரீஸின் சேல்ஸ் என்ஜினியரோடு வியாபாரம் பேசி அனுப்பிவிட்டு மார்வத் லிமிடெட் எம்.டியை பெங்களூரிலிருந்து வந்த லைட்னிங் காலில் சந்தித்துவிட்டு நிமிர்ந்த போது ரேவதி அறைக்குள் வந்தாள். ரிஸிவரைச் சாத்திய கண்ணனின் உதட்டில் காந்தமான புன்னகை பதவி வகித்தது.

"வா.. ரேவதி.."

"எதுக்கு சார் என்னை வரச் சொன்னீங்க?"

"நாலு நாளா நான் கேக்கற கேள்விக்குப் பதில் சொல்லாம நழுவிட்டே இருக்கியே?"

மனசுக்குள் கோபம் எரிமலையாய் பீறிட்டாலும், முகம் வரை வந்து விடாமல் விலங்கு போட்டுத் தடுத்தாள்.

பெட்ரூமுக்கு வர்றியா என்று பச்சையாய் கேட்கிற இவனை ஸ்லிப்பராலேயே வறுத்தெடுக்க வேண்டாமா? எது என்னைத் தடுக்கிறது? பாழாய்ப் போன குடும்ப சூழ்நிலை, இந்த விநாடி இவன் வேலையை விட்டுத் துரத்தி விட்டால் கடைசி தங்கைக்கு ரெக்கார்டு நோட் வாங்கித் தருவது எப்படி? சீதாவுக்கு எல்லா தாவணியும் கிழிந்து போய் விட்டதாம். 'நாளைக்குத்தான் காலேஜ் ஃபீஸ் கட்ட கடைசி தேதிக்கா' காதைக் கடிக்கிற ரமாவுக்கு என்ன பதில்?

அட்ஜஸ்ட் செய்து கொள் ரேவதி. அவர்களுக்காக ஆத்திரப்படாமல் பதில் சொல்.

"சார் என்னை அந்த மாதிரி பொண்ணா நினைக்காதீங்க சார்.. நான் நல்ல குடும்பத்துல பிறந்தவ."



கண்ணன் கண்ணடித்தான்.

"அந்த மாதிரி பொண்ணுன்னு தனியா பொறக்கறாங்களா என்ன? சூழ்நிலைதான் ஒவ்வொருத்தரையும் மாத்துது. உன்னோட வறுமையான சூழ்நிலைக்கு நீ மாறிடறதுதான் புத்திசாலித்தனம். நான் அவசரமே படலை. நல்லா யோசிச்சு நிதானமா பதில் சொல்லு. ஆனா நெகடிவ்வா மட்டும் சொல்லிடாதே. அப்புறம் பின்னாடி வருத்தப்படுவே."

அடர்த்தியான குழப்பம் ரேவதியைத் தத்து எடுத்துக் கொண்டது. அவஸ்தையோடு கதவை நோக்கி நடந்தாள்.

அவள் போகப் போக டெலிபோன் ரிஸிவரை எடுத்தான்.

"ஹலோ, கண்ணன் ஹியர்.."

"ஹாய் கண்ணன்.. எத்தனை நாளுக்கப்புறம் போன் பண்றேன்!"

அடுத்த பக்கமிருந்து ரம் நிரம்பிய சில்க் ஸ்மிதாதனமான குழைவான பெண்குரல் அவன் காதை நிரப்பியது.

"யாரு நீ?"

"என்ன கண்ணன் இப்படி கேக்கறீங்க? என்னோட குரல் உங்களுக்கு ஞாபகம் இல்லையா?" சில விநாடிகள் கண்ணன் யோசிப்பு சாரட்டில் ஓடினான்.

"ஞாபகம் இல்லையே.."

"ச்சை! உங்களைப் பார்க்கணும், பேசணும்னு எத்தனை ஆசையா இருந்தேன். ஒரே வார்த்தையில் ஞாபகம் இல்லைன்னு சொல்லிட்டிங்களே அவ்வளவுதான் உங்க ப்ரியமா! பரவாயில்லை.. கண்ணன் நான் ரிஸிவரை வெச்சுடறேன்.."

"ஏய்.ஏய்.. வெச்சுராதே ஒரு நிமிஷம்! நீ யாருன்னு சொல்லு. என்னை பார்க்கணும்னா நேரா ஆஃபீஸ் வர வேண்டியதுதானே!"

"உங்களுக்குத்தான் என்னை ஞாபகமே இல்லை. நான் அங்கே வந்து நேரிடையா அவமானப்படணுமா! வேண்டாம் நான் உங்களைப் பார்க்கலை."

"இல்லை.. நான் உன்னைப் பார்க்கணும்... இப்ப ஆஃபீஸ் வா.."

"நான் அங்கே வரலை."

"அப்போ எங்கே வர்றே?"

"இன்னிக்கு சாயந்தரம் ஏழு மணிக்கு டோப்பியரா கார்டன்ல மயில் சிலைக்கு பக்கத்துல காத்திருக்கேன் நீங்க வருவீங்களா?"

"ஷ்யூர்! கண்டிப்பா வர்றேன்.."

## 15

நம்பிக்கை வளையம் ஜெயேந்திரனையும், குருதேவ்வையும் உடனடியாய் சூழ்ந்து கொள்ள மலர்ச்சியோடு அந்த கிளார்க்கைப் பார்த்தார்கள்.

"உங்களுக்குப் பக்கத்து வீடா?"

"ஆமா சார்.."

"எப்படி குடி வந்தான்?"

"ஒரு வாரம்தான் இருக்கும்.."

"இப்ப நீங்க எங்களோட வர முடியுமா?"

"ஒரு நிமிஷம் உக்காருங்க சார்... எடிட்டர்கிட்டே பர்மிஷன் வாங்கிட்டு வர்றேன்.."

இரண்டு நாற்காலிகளுக்கு சுமை கொடுத்தார்கள். க்ளார்க் அலுவலக மேஜைகளிடையே நடந்து தூரத்து



அறையில் அஸ்தமித்தான். சில நிமிஷங்களைச் சாகடித்து விட்டுத் திரும்பி வந்தான்.

"வாங்க சார் போகலாம்.." ஜீப்பில் நிரம்பினார்கள். ஜீப் சாலை போக்குவரத்தோடு சங்கமமானது.

"நீங்க அவனோட பேசியிருக்கீங்களா!" க்ளார்க்கிடம் திரும்பிக் கேட்டார் ஜெயேந்திரன்.

"இல்லை சார் ரொம்ப நாளா பூட்டியிருந்த அந்த சைட் போர்ஷன் ஒரு வாரம் முன்னோடி திறந்து கிடந்தது. யாரோ குடிவந்துட்டாங்க போலிருக்குன்னு அப்பதான் கவனிச்சேன்.. ரெண்டு மூணு தடவை ஆஃபீஸ் புறப்பட்டு வர்றப்ப அவனைப் பார்த்திருக்கேன்.. அவ்வளவுதான்.."

க்ளார்க் சொன்ன பாதைகளில் வளைந்து நெளிந்தது ஜீப்... பனிரெண்டு நிமிஷங்கள்.. க்ளார்க்கின் வீட்டின் முன்னால் உதிர்ந்தார்கள்.

"எந்த வீடு?"

"அதோ அந்த போர்ஷன்தான் ஸார்.." பக்கத்து வீட்டின் காம்பவுண்டுக்குள் அழைத்துப் போனார்.

கனகாம்பரச் செடிகளுக்கு நடுவே நடந்து சைட் போர்ஷனை அடைந்தார்கள்.

கதவில் 'டொக்'கென்று ஒரு சப்தம் எழுப்பியபோதே திறந்தது. எட்டிப் பார்த்த இளைஞனின் சதுர முகம் ஜெயேந்திரன், குருதேவ்வின் யூனிபார்ம்களால் பாதிக்கப் பட்டுப் புருவத்தைச் சுருக்கியது.

"யார் வேணும்?"

"மிஸ்டர் ரவி.."

"ரவியா?"

அவன் குழப்பம் வர, கேள்வி கேட்கிறபோது, குருதேவ் தன் கையிலிருந்த ரவியின் போட்டோவோடு அந்த இளைஞனை ஒப்பிட்டுப் பார்க்க ஆரம்பித்தார். ஏமாற்றம்

ரவியின் சாயல் லேசாக அவனிடம் இருந்தாலும், அவன் ரவி அல்ல என்பது குருதேவ்வுக்குப் பளிச்சென்று புரிந்தது.

## 16

ஆறரை மணி.

சுற்றுப்புற வெளிச்சம் கெட்டுப் போய் மசமச இருட்டு.. எல்லாப் பக்கமும் திட்டுத் திட்டாய் படிய ஆரம்பித்தது. டோப்பியாரா கார்டனில் ஜன நடமாட்டம் கணிசமாகக் குறைந்து போயிருந்தது. அந்த விநாடிதான் அந்த மயில்சிலை அருகே சந்திப், மேனகா, சுப்ரபா, வினயா நான்கு பேரும் வந்து சேர்ந்தார்கள்.

"இதான் கண்ணனை நீ வரச் சொன்ன இடமா மேனகா?"

"ஆமா.."

"நல்ல இடத்தைத்தான் தேர்ந்தெடுத்திருக்கே... இந்த இடத்தில கொலையே நடந்தாலும் யாருக்கும் தெரியாது போலிருக்கு.."

"கொலைதானே இப்ப நடக்கப் போகுது!"

"சந்திப், நீங்க, வினயா, சுப்ரபா மூணு பேரும் இந்த மயில்சிலைக்குப் பின்பக்கமா போயிடுங்க.."

"நைலான் ரோப் யார்கிட்டே இருக்கு.."

"என்கிட்டேதான்..."

சுப்ரபா அந்த நைலான் கயிறை நீட்டினாள்.

"அதை சந்திப்கிட்டே கொடு. சந்திப் வாங்கிக்கங்க.." கயிறு கை மாறியது.



"நான் சைகை காட்டியதும், நீங்க மூணு பேரும் வெளியே வரணும்.. சத்தம் எதுவும் வராம கண்ணனோட முகத்தைப் பொத்த வேண்டியது சுப்ரபாவோட வேலை. கண்ணனோட கையும், காலும் ஆடாம நானும் வினயாவும் பார்த்துக்கறோம்.. நைலான் கயிறால கழுத்தை இறுக்கி எவ்வளவு சீக்கிரமா அவன் உயிரை போக்கடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமா அவன் உயிரை மேல அனுப்ப வேண்டியது சந்திப்போட வேலை. இதுல யாருக்கும் எந்த கன்ஃப்யூஷனும் இல்லையே?" மூன்று பேரும் தலையசைத் தார்கள்.

"இப்ப மணி எத்தினி?"

"ஆறு நாற்பது.. இன்னும் நேரமிருக்கு.."

ஃபில்டரில் இறங்குகிற நீர் மாதிரி விநாடிகள் துளித் துளியாக நழுவி விழுந்து கொண்டிருக்க -

7.00 மணிக்காக ஏற்பாடுகளோடு காத்திருக்க ஆரம்பித் தார்கள்.

## 18

**(அவசரப்பட்டு தலையை நீட்டிவிட்ட 18வது சேப்டரை மன்னித்துவிட்டுப் படித்துவிடுங்கள்)**

டெபுடி கமிஷனர் லேசாய் தங்கப் பதக்கம் சௌத்ரியின் சாயலை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். ஃபேன் காற்றில் நரை கலந்த தலைமுடி படபடத்துக் கொண்டிருந்தது. வெண்கலக் குரலை டெலிபோன் ரிஸிவரில் கரைத்துக் கொண்டிருந்தார்.

"லேபர்ஸ் காலனி மர்டர் கேஸ் என்னய்யா ஆச்சு?"

"...... ......"

"தடயம் எதுவும் கிடைக்கலியா? போலீஸ்காரன் பேசற பேச்சா இது? கொலை பண்றவன் தடயம் விடறதுக்காகவா கொலை பண்ணுவான்? நாமதான் கண்டுபிடிக்கணும்... செத்தவன் கட்சிக்காரன்ய்யா! நாளன்னிக்கு சட்டசபைல கேக்கப் போறாங்களாம்!"

"...... ..."

"நீ என்ன செய்வியோ தெரியாது! ரெண்டு நாள்ல எவனோ ஒருத்தனை அரெஸ்ட் பண்ணலைன்னா என்னை ஒவ்வொருத்தனும் கிழிச்சிருவான்..."

'டொக்'கென்று வேகத்தோடு ரிஸீவரை வைத்தார் டி.ஸி. நிமிர்ந்தபோது ஒரு கிளார்க் ஒரு கத்தை லெட்டர்களோடு வந்து நின்றார்.

"என்னய்யா?"

"லெட்டர்ஸ் சார்..."

"முக்கியமான லெட்டர்ஸை மட்டும் முன்னால வை."

மினிஸ்டரியிலிருந்து வந்த இரண்டொரு லெட்டர்களை அவருக்கு முன்னால் வைத்தான்.

"சார், மொட்டைக் கடிதம் மாதிரி ஒரு லெட்டர் வந்திருக்கு. அத ஸீரியஸா எடுத்துக்கறதான்னு தெரியலை."

"லெட்டரைக் காமி..."

அந்தத் தாளை அவர் பார்வை எல்லைக்குள் வைத்தான்.

"மதிப்பு மிகு டி.ஸி. அவர்களுக்கு,

வணக்கம்...

'டோப்பியாரா கார்டனின் மயில்சிலைக்குப் பக்கத்தில் பிணம் கிடப்பதைப் பற்றி இந்த நிமிஷம் உங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கலாம். அப்படி ஒருவேளை தகவல் கிடைத்திருக்காத



பட்சத்தில் தயவுசெய்து பிணம் அழுகிப் போய் விடுவதற்கு முன்னால் கைப்பற்றிக் கொள்ள வேண்டுகிறோம்.

பிணத்தை அடையாளம் தெரிந்து கொள்ள வேண்டிய சிரமங்கள் உங்களுக்கு வேண்டவே வேண்டாம். கொலையாகிக் கிடப்பவர் சுனில் என்ஜினிரிங் (பி) லிமிடெட்டின் டெபுடி மானேஜர் உயர்திரு. கண்ணன்!

தனக்குக் கீழே வேலை செய்கிற பெண்களை பெண்களாக நடத்த தெரியாத மேலதிகாரிகளுக்கு இதுதான் தண்டனை."

இப்படிக்கு என்று எழுதி புஷ்டியான பாரதியின் மீசை மட்டும் வரையப்பட்டு இருந்தது.

"இப்படிக்குக் கீழே என்னய்யா கறுப்பா?"

"மீசை சார்... பாரதியார் மீசை!"

"அந்த சுனில் என்ஜினியரிங் லிமிடெட்டுக்கு போன் பண்ணி அந்தக் கண்ணனைப் பத்தி விசாரிக்க கூடவே யாரையாவது டோப்பியாரா கார்டன் ஆஃபீஸ்க்கு போன் பண்ணி விஷயத்தைக் கேக்கச் சொல்லு."

"ஓகே. சார்."

## 17

**கண்ணன்** ஆறு இருபதுக்கெல்லாம் கம்பெனியை விட்டுக் கிளம்பி தன்னுடைய மினி பங்களாவைத் தொட்டு ஷவருக்குக் கீழே ஒரு நிறைவான குளியலை எடுத்து முடித்திருந்தான். மனசில் ஒவ்வொரு சதுரத்தையும்

டெலிபோன் பெண்ணின் குரல் இதமாய் ஏற்றியெடுத்துக் கொண்டிருந்தது.

குரலா அது? ஸ்காட்ச்? ரம்?

ட்ரஸ் மாறினான்.

மிரருக்கு முன்னால் பத்து நிமிஷங்கள் செலவழித்து விட்டுப் போர்டிகோவுக்கு வந்தான். காரின் இக்கினீஷியனை உசுப்ப - அது வீதிகளை வருக ஆரம்பித்தது.

கண்கள் டிஜிட்டல் வாட்சின் முகத்தைப் பார்க்க - செவன் செக்பண்ட் டிஸ்பிளே 6:51:26 என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

வாந்தியா வீதியையும், மத்தியப் பாதையையும் கடந்து டோப்பியாரா கார்டனின் வாசலுக்கு வந்து எஞ்சினை அணைத்தான். மனசு பூராவும் அவளைப் பார்க்கப் போகிற புது ஆர்வம் நிரம்பிக் கிடக்க கதவுகளை இறக்கை விரித்தான். காருக்கு வெளியே வந்து கதவை அறைந்து பூட்டினான்.

கார்டனின் பிரவேச வாயிலை நோக்கி நடக்க ஆரம்பித்த விநாடி, ஹெட்லைட் வெளிச்சம் வெள்ளம் அவன் மேல் கொட்டியது. தொடர்ந்து அந்த அம்பாஸிடர் அவனை வழிமறித்த மாதிரி உரசி நின்றது. ஏ. ஆர். லிமிடெட்டின் எம். டி. ராஜசேகர் ஜன்னல் சட்டம் வழியே எட்டிப் பார்த்தார்.

"ஹலோ மிஸ்டர் கண்ணன்."

"ஹலோ..."

"உங்க காரை பார்த்ததும் திருப்பிட்டு வர்றேன்! எங்கே இந்தப் பக்கம்?"

"வந்து போரடிச்சது ஒரு சேஞ்ச்சுக்காக கார்டன் பக்கம் வரலாமேன்னு வந்தேன்."



"ஒரு புது ப்ராடக்ட் பத்தி உங்ககூட பேசணும் பேசணும்னு நினைச்சுட்டிருந்தேன் நேரமே அமையலை! இன்னிக்குத் கிடைச்சீங்க.. வாங்க என் வீட்டுக்குப் போக லாம்..."

"மிஸ்டர் ராஜசேகர் பங்களா. ஏஸி. ரூம் அலுத்துப் போய்த்தான் இங்கே வந்தேன்."

"ஓ.கே. காரைப் பார்க் பண்ணிட்டு வர்றேன். இங்கேயே உட்கார்ந்து பேசலாமா?"

"கொஞ்ச நேரத்துக்குப் பிஸினெஸ், கம்பெனி எல்லாத்தையும் மறக்கணும்னு நினைக்கறேன். இப்ப ப்ராடக்ட் பத்தி பேசறதுக்கு நான் தயாராயில்லை ப்ளீஸ் தப்பா நினைக்காதீங்க..."

"நோ.. நோ.. இருபத்திநாலு மணி நேரமும் கம்பெனி கம்பெனின்னு அலையறோம். இடையில இந்த மாதிரி ரிலாக்ஸ் பண்ணிக்கறது அவசியம்தான். நான் உங்களுக்கு கம்பெனி தர்றேன்.. ரெண்டு பேரும் பொதுவா எதையாவது பேசிக்கிட்டிருப்போம்."

சொல்லிக் கொண்டே காரை நிறுத்திவிட்டு வந்து -

அட்டைப்பூச்சியாய் அவனோடு ஒட்டிக் கொண்டார் ராஜசேகர்.

நேரம் 7.10-ஐப் புறக்கணித்துக் கொண்டிருந்தது!

## 19

மேனகா சேரில் இருந்தாள். சுப்ரபாவும், வினயாவும் சோபாவுக்கு சுமையாய் இருந்தார்கள். சந்தீப் ஜன்னலோரம் கைகட்டி நின்றிருந்தான். நான்கு பேரிடமுமே மின்சாரம் பாய்ந்த மாதிரி திக் பிரமை பரவிக் கிடந்தது.

"இப்ப என்ன செய்யறது வினயா? இந்நேரம் போலீஸ் கைக்கு நேத்திக்கு நாம போஸ்ட் பண்ணின லெட்டர் போய் சேர்ந்திருக்கும்."

மேனகா தவிப்பு கலந்த குரலில் சொன்னாள்.

"கண்ணன் இப்படி வராம போயிடுவான்னு நான் நினைக்கவேயில்லை. சந்தீப் எப்படியும் ஏழு மணிக்குக் கார்டனுக்கு வந்துருவான். நாம அவனைத் தீர்த்துட லாம்ங்கற நம்பிக்கையோடதான் லெட்டரை மத்தியானமே போஸ்ட் பண்ணினேன்."

"நம்ம செயல்கள்ல ஓவர் கான்ஃபிடன்ஸ் வச்சுட்டே எதிர்பார்க்காத விதமா கண்ணன் வராம போனா என்ன செய்யலாம்கறதையும் நீ யோசிச்சுப் பார்த்திருக்கணும்."

"லெட்டர் கிடைச்ச மாத்திரத்துல போலீஸால என்ன செய்துட முடியும்?"

"கண்ணனைக் கொலை பண்ண முயற்சி நடந்திருக்கு அப்படிங்கறதைத் தவிர அவங்களால வேற எதையும் யூகம் பண்ண முடியாது."

"என்னோட வருத்தமெல்லாம் நம்ம முதல் முயற்சியே இப்படி தோல்வியில் முடிஞ்சிருச்சேங்கறதுதான்."

வினயா சொல்ல -

இறுக்கமான முகத்தோடு மேனகா மறுத்தாள்.

"நோ! நாம் இன்னும் தோத்துப் போகலை வினயா! அடுத்த ரவுண்டில் இறங்குவோம். இதே கண்ணனை போலீஸுக்கு அறிவிச்சுட்டே நாம தீர்த்துக் கட்டலாம்... அறிவிச்சுட்டே கொலை பண்ற அளவுக்கு நமக்குச் சாமர்த்தியம் இருக்குங்கறதை காட்டினோம்னா கண்ணன் மாதிரி தப்பு செய்யற ஆசாமிங்க நம்ம இயக்கத்து மேல இன்னும் பயபக்தி வெப்பாங்க! கண்ணனை வெற்றிகரமா



தீர்க்கறதுலதான் நம்ம இயக்கத்தோட எதிர்காலம் வெற்றி, தோல்வி எல்லாமே அடங்கியிருக்கு!"

# 20

ஆஃபீஸ் அறையில் இருந்த கண்ணன் திடுக்கிட்டுப் போய் ஜெயேந்திரனையும் குருதேவ்வையும் பார்த்தான்.

"என்ன சார் சொல்றீங்க?"

"உங்களைக் கொலை பண்ண நேத்து முயற்சி நடந் திருக்கு."

"என்னைக் கொலை பண்ண முயற்சியா? யாரு? எதுக்காக?"

"இந்த லெட்டரை படிச்சுப் பாருங்க."

குருதேவ் நீட்டிய லெட்டரைப் பார்வையில் ஒற்றிய கண்ணன் மில்லிமீட்டர் மீட்டராய் அதிர்ச்சியில் நழுவினான்.

"நேத்து நீங்க டோப்பியாரா கார்டன் போனீங்களா?"

"போனேன்..."

"எதுக்குப் போனீங்க?"

"கார்டன்ல ஒரு பொண்ணு என்னை அங்கே வரச் சொல்லி ஃபோன் பண்ணியிருந்தா... அவளை மீட் பண்றதுக்காகப் போயிருந்தேன்..."

"யாரந்தப் பொண்ணு?"

"அது எனக்கே தெரியலை... போன் பண்ணின பொண்ணு யாருன்னு தெரிஞ்சுக்கறதுக்காகத்தான் நான் கார்டன் போனேன், அங்கே மயில் சிலைக்குப் பக்கத்துல ஏழு மணிக்கு வரச் சொல்லியிருந்தா..."

"அந்தப் பொண்ணை நீங்க சந்திச்சீங்களா?"

"இல்லை இன்ஸ்பெக்டர் ராஜசேகர்னு ஒருத்தர் இடையில் வந்து என்னைப் பிடிச்சுக்கிட்டார். அவரோட பேசிட்டிருந்ததுல - அந்த மயில் சிலை பக்கமே நான் போகலை."

"உங்க தலைவிதி நல்லா இருக்கு மிஸ்டர் கண்ணன்! அந்தப் பொண்ணை நீங்க சந்திச்சிருந்தீங்கன்னா இந்நேரம் எங்ககூடப் பேசிட்டிருப்பீங்களாங்கறது சந்தேகம்தான்! அந்த கேங் அல்லது தனி நபர் ரொம்ப கொடூரமான ஆட்கள்ங்கறது எங்களோட யூகம்!"

"அவங்களை யார்னு கண்டுபிடிச்சிட்டீங்களா இன்ஸ்பெக்டர்?"

"இன்னும் இல்லை... வாட்டர் போர்டு காம்பஸ்ல நடந்த மர்டர் பத்தி கேள்விப்பட்டிருப்பீங்களே?"

"பேப்பர்ல படிச்சேன்..."

"அந்த கேஸையும் இந்த கேஸையும் கம்பைன் பண்ணி இன்வெஸ்டிகேட் பண்ணச் சொல்லி எங்களுக்கு மேலிடத்திலிருந்து உத்தரவு வந்திருக்கு."

"அந்த கேஸுக்கும் என்னைக் கொலை பண்ண நடந்த முயற்சிக்கும் என்ன சார் சம்பந்தம்?"

"அங்கே கொலையானதும் ஒரு மானேஜர். நீங்களும் ஒரு மானேஜர்... அவரும் கீழே வேலை பார்க்கிற பொண்ணுகிட்டே கொஞ்சம் தப்பா பேசியிருக்கார்... இந்த லெட்டர்ல உங்களையும் அப்படி குறிப்பிட்டிருக்கு... மிஸ்டர் கண்ணன் நிஜமாவே நீங்க லேடி ஸ்டாஃப் யார்கிட்டேயாவது வெறுப்பை சம்பாதிச்சிருக்கீங்களா?"

மெலிசாய்த் தயங்கிவிட்டு மறுத்தான்.



"அப்படி எதுவும் இல்லை இன்ஸ்பெக்டர். எல்லா ஸ்டாஃபையும் என் குடும்பத்தில் ஒருத்தரா ட்ரீட் பண்றேன்."

"உங்க ஸ்டாஃப் மெம்பர்ஸை நாங்க என்கொயரி பண்ணனும்."

"பண்ணுங்க இன்ஸ்பெக்டர்... நான் எல்லா செக்ஷனுக்கும் இன்டர்காம் பண்ணி சொல்லிடறேன்..."

"இன்னும் ஒரு வாரத்துக்கு நீங்க வீடு கம்பெனியைத் தவிர அநாவசியமா எங்கேயும் போக வேண்டாம்."

கண்ணன் தலையசைத்தான்.

இன்ஸ்பெக்டர் அறையை விட்டு வெளியேறினார்கள்.

ஸ்டாஃப் மெம்பர்களிடம் விசாரணையை முடித்துக் கொண்டு அவர்கள் ஜீப்பை கிளப்பிக் கொண்டு போன இரண்டாவது நிமிஷம் -

ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்... டெலிபோன்.

ரிஸிவரை எடுத்தான்.

நேற்றுப் பேசிய அதே பெண் குரல்! தேன் குரல்!

"கண்ணன் உன்னோட அதிர்ஷ்டம் நேத்திக்கு உயிர் பிழைச்சுட்டே. நாங்க ஒரு தடவை குறி வச்சா வச்சதுதான். உன்னைத் தீர்க்காம எங்க கொலை தாகம் அடங்கப் போறதில்லை. போலீஸ்கிட்டே போனாலும் சொல்லிடு! இன்னிலர்ந்து எண்ணி ஏழு நாளுக்குள்ளே என்னிக்கு வேணாலும் கிளம்பற மாதிரி உன் இறுதி ஊர்வலத்துக்கான ஏற்பாடுகளையெல்லாம் க்ராண்டா பண்ணிடு!"

## 21

நியூ வியூ டிடெக்டிவ் ஏஜென்ஸி.

உள்ளே நுழைந்த அசோக் கண்களில் பதிவானதுமே குப்தனும், மோனிஷாவும் ஒரு சேர அலறினார்கள்.

"அசோக்! என்ன இது திடீர்க் கோலம்?"

"ஏன் சார்?"

"என்னாச்சு உன்னோட அழகான மீசை? இப்படி தரை மாதிரி வழிச்சுத் தள்ளியிருக்கே?"

"எல்லாம் என் இதய ராணிக்காக! மீசையை எடுத்த பின்னாடி கமல் எத்தனை அழகா இருக்கார்! இந்த ஆம்பளைங்ககிட்டே எனக்குப் பிடிக்காத விஷயம் மீசை ஒண்ணுதான் அப்படின்னு சொன்னா! காதலுக்காக உயிரைத்தான் தியாகம் பண்ண முடியலை. அட்லீஸ்ட் மீசையையாவது!"

"மோனிஷா, இவன் முன்னாடி எதையாவது உளறித் தொலைச்சியா?"

"சினிமா வீக்லே கமல் படத்தைப் பார்த்துட்டு, மீசை இல்லாத கமல் நல்லா இருக்கார்னு காமெண்ட் பண்ணினேன்! அதையெல்லாம் இவர் வேதவாக்கியமா எடுத்துப்பார்ன்னு நான் நினைக்கவேயில்லை. ஒண்ணை மட்டும் உறுதியா அசோக்குக்கு சொல்லிடுங்க. மொட்டையே அடிச்சிட்டு வந்து நின்னாலும் நான் அவரை லவ் பண்ண மாட்டேன்..."

"அப்படிச் சொல்லாதே மோனிஷா! 'கண்மணி நில்லடி உன் மனம் கல்லடி'ன்னு நான் கவிதை எழுத ஆரம்பிச்சுடுவேன்."



"தாராளமா எழுதுங்க கல்லடி உங்களுக்காகத்தான் கிடைக்கும்!"

"சைலன்ஸ்! சைலன்ஸ்!! சைலன்ஸ்!!!"

மேசையைத் தட்டினான் குப்தன்.

"இதென்ன ஆஃபீஸா? சட்டசபையா? மோனிஷா நீ சரஸ்வால் ரிப்போர்ட்டை டைப் பண்றியா? அசோக் நீ ஹோட்டல் தாராவுக்குப் போன் பண்ணி சாந்திகுமார் வந்துட்டாரான்னு விசாரி."

டிடெக்டிவ் ஏஜென்சி மாமூல் நிலைமைக்குத் திரும்பிய விநாடி - அறை வாசலில் நிழலாடியது குப்தன் நிமிர - உள்ளே பிரவேசமாகிக் கொண்டிருக்கிற கண்ணன் கண்ணில் விழுந்தான்.

"மிஸ்டர் குப்தன்..."

"நான்தான்! உட்காருங்க அஞ்சு நிமிஷம் முன்னால வந்திருந்தா மானம் போயிருக்கும்."

"என்ன?"

"ஒண்ணுமில்ல சார்.. நீங்க வந்த விஷயத்தைச் சொல் லுங்க..."

"என் ஃப்ரெண்ட் மூலமா உங்க ஏஜென்சி பத்திக் கேள்விப்பட்டிருக்கேன். இப்ப நான் ஒரு சிக்கல்ல மாட்டி யிருக்கேன். நீங்கதான் என்னைக் காப்பாத்தணும்."

"என்ன சிக்கல்?"

"என்னைக் கொலை செய்ய யாரோ முயற்சி பண்ணறாங்க..."

"யார் அந்த யாரோ? ஆணா? பொண்ணா?"

"அதை நீங்கதான் கண்டுபிடிக்கணும்."

"கொலை பண்ண முயற்சி நடக்குதுன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"காலைல கமிஷனர் ஆஃபீசுக்கு ஒரு லெட்டர் வந்தது" என்று ஆரம்பித்து, நேற்றைக்கு வந்த போன்கால் முதல் - இன்று இன்ஸ்பெக்டர் ஜெயேந்திரன், குருதேவ் வந்தது - அவர்கள் சென்றபிறகு வந்த போன்கால் வரை சொல்லி முடித்தான்.

"கடைசியா வந்த போன்காலைப் பத்தி நீங்க இன்ஸ்பெக்டருக்குத் தெரிவிக்கலையா?"

"இல்லை. அந்த போன்கால் வந்ததும் நான் நேரா இங்கே வர்றேன். போலீஸைவிட நீங்க வேகமா செயல்படு வீங்கன்னு நான் நம்பறேன்."

"அப்படி நினைக்காதீங்க மிஸ்டர் கண்ணன். எங்களைவிட போலீஸ் ரொம்பவே திறமையானவங்க... எங்களைவிட ஃபெசிலிடிஸ் அவங்களுக்கு அதிகமா இருக்கு."

"நீங்க சொல்றது வாஸ்தவம்தான். ஆனா அவங்க வேற ஏதோ கேஸ்கூட கம்பைன் பண்ணி இதை விசாரிச்சிட் டிருக்காங்க. அதனாலதான் நான் உங்ககிட்டே வர்றேன்... அதுபோக அவங்ககிட்டே எல்லா விஷயத்தையும் வெளிப்படையா என்னால சொல்ல முடியலை."

"ஏன்?"

"ஏதாவது லேடி ஸ்டாஃப்புடைய வெறுப்பை சம்பாதிச் சிருங்களான்னு இன்ஸ்பெக்டர் கேட்டார். அந்தக் கேள்விக்கு வெளிப்படையா பதில் சொல்ல எனக்குத் தயக்கம்! இப்ப உங்ககிட்டே சொல்றேன் நிஜமாகவே ரேவதிங்கற டைப்பிஸ்ட் பொண்ணை என்னோட விருப்பத்துக்கு ஒத்துழைக்கச் சொல்லி கிட்டத்தட்ட மிரட்டிட்டு இருக்கேன்."

"இது தப்பில்லையா?"



"தப்பா, தப்பில்லையான்னு தீர்மானிக்கிற மனநிலை யில் நான் அப்ப இல்லை!"

"அந்த ரேவதி எந்த மாதிரி?"

"ரொம்ப நல்ல பொண்ணு."

"அந்தப் பொண்ணு இந்த முயற்சியில் இறங்கறதுக் கான சாத்தியம் இருக்கா?"

"எனக்குத் தெரிஞ்ச வரை நோ சான்ஸ். குடும்ப கஷ்டத்தைப் பத்தி யோசிக்கவே அதுக்கு நேரம் சரியா இருக்கும்!"

"நீங்க யாரை சந்தேகப்படறீங்க?"

"கௌசல்யாங்கற பொண்ணை பெட்ரூம் வரைக்கும் கூட்டிட்டுப் போயிருக்கேன்... அந்தப் பொண்ணு மேல எனக்கு சந்தேகம் இருக்கு."

"போன்ல கேட்ட குரல் கௌசல்யாவை உங்களுக்கு ஞாபகம் படுத்தலியா?"

"அது கௌசல்யாவோட குரலான்னு என்றால் தீர்மானிக்க முடியலை."

"அந்தக் கௌசல்யா இப்ப எங்க இருக்கா?"

"ரிசைன் பண்ணிட்டுப் போய் மூணு மாதம் ஆகுது! எங்கே போனான்னு எனக்குத் தெரியலை."

"கம்பெனி ஸ்டாஃப்ஸுக்கு பர்சனல் ஃபைல் மெயின் ட்டெய்ன் பண்றீங்களா?"

"ம்."

"அதுல கௌசல்யாவோட வீட்டு அட்ரஸ் இருக்குமா?"

"இருக்கு"

"அசோக்..."

அசோக் திரும்பிப் பார்த்தான்.

"நீ ஸார்கூட போய் கௌசல்யா, ரேவதி இவங்களோட அட்ரஸை கலெக்ட் பண்ணிட்டு வா... முடிஞ்சா அந்தக் கௌசல்யா வீட்டைத் தட்டிப் பார்த்துட்டு வந்துடு..."

"மோனிஷா இங்கே டைப் மெஷினைப் பார்த்துக்கிட்டு சும்மாதான் உக்காந்திருக்கா... வாங்கற சம்பளத்துக்கு நல்லா வேலை வாங்குங்க ஸார்... என்கூட அனுப்பி வையுங்க..."

"அசோக்..."

காரமாய் குப்தன் கத்த கன்னத்தில் தப்பு போட்டுக் கொண்டு கண்ணனோடு வெளியே போனான்.

"மோனிஷா கேஸைக் கேட்டியா?"

"ஷார்ப் ஹேண்டா பேப்பர்ல நீட்டிட்டேன்! இந்தாங்க பிடிங்க..."

"உனக்கு ஏதாவது தோணுதா?"

"ரேவதியைச் சந்தேகப்பட வேண்டிய அவசியமில்லைன்னு கண்ணன் சொல்றான்... நாம சந்தேகப்பட்டுக் கிளறினா என்ன?"

குப்தன் புன்னகைத்தான்.

"கண்ணன் சொன்னதுக்காக நான் ரேவதியை விட்டுடப் போறதில்லை..."

சொல்லிக் கொண்டே டெலிபோன் டயலைச் சுழற்றினான்.

"ஹலோ, எஃப் டு போலீஸ் ஸ்டேஷனா? ஐ'ம் குப்தன் ப்ரம் ந்யூ வ்யூ! வாட்டர் போர்டு கொலை கேஸ் பத்தின விபரங்கள் கிடைக்குமா?"



## 22

"சந்திப் எங்கே?"

கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த மேனகாவிடம் லேசான பரபரப்பு இருந்தது.

"இன்னும் கம்பெனிலேர்ந்து வரலை... ஏன்?"

"உடனே அவரைப் பார்த்தாகணும்... அவரை சில கேள்விகள் கேக்கணும்..."

"கொஞ்சம் புரியற மாதிரி சொல்லு மேனகா."

மேனகா தன் கையிலிருந்த பழைய செய்தித் தாளை விரித்தாள்.

குறிப்பிட்ட செய்தியையும் -

அந்த செய்திக்கான போட்டோ ப்ரிண்ட்களையும் தொட்டுக் காட்டினாள்.

வாட்டர் போர்டு காம்பவுண்டில் நடந்த கொலை பற்றிய செய்தி.

"இந்த ந்யூஸ் பத்தி சந்திப்கிட்டே என்ன கேக்கணும்?"

குழப்பமாய்க் கேட்ட சுப்ரபாவும், வினயாவும் - மேனகா விவரிக்க விவரிக்க - திகைப்பு தேசக் கைதியானார்கள்.

## 23

**மீ**ட்ஷுபிஷி காரில் பிரயாணித்துக் கொண்டிருந்தார்கள் குப்தனும், அசோக்கும்.

"அசோக்... கௌசல்யா வீட்டுக்குப் போனியே என்னாச்சு?"

"புண்ணியவதி கௌசல்யா கண்ணனோட கம்பெனியை விட்டு ரிசைன் பண்ணின கையோட ஃபாரின் மாப்பிள்ளைக்குக் கழுத்தை நீட்டிட்டு, ஸ்டேட்ஸ்ல போய் அக்கடான்னு செட்டில் ஆயிட்டா. மோனிஷா 'ம்'னு ஒரு வார்த்தை சொல்லட்டுன்னு எத்தனை நாளா காத்திருக்கேன். நான் எப்போ புண்ணியவான் ஆவேனோ!"

"அப்புறம்... ரேவதியைக் கம்பெனில பார்த்தியா?"

"இல்லை."

"ஏன்?"

"அந்தப் பொண்ணு இன்னிக்கு லீவ்! உடம்பு சரியில்லைன்னு அந்தப் பொண்ணே பலஹீனக் குரல்லே டெலிபோன்ல சொல்லிச்சாம். லீவ் கிளார்க் சொன்னார்."

"இப்ப அந்த ரேவதியோட வீட்டுக்குத்தானே காரை ஓட்டிட்டு இருக்கே?"

"ஆமா சார்..."

ரேவதியின் வீட்டைத் தொட்டார்கள்.

ரொம்ப சின்ன வீடு. வதவதவென்று தாவணியிலும், புடவையிலும் மாறி மாறிப் பெண்கள் தெரிந்தார்கள். கமலாகாமேஷ் சாயலில் ஒரு அம்மா அசோக்கையும் குப்தனையும் பார்த்து -

"யாரு வேணும்?" என்றாள்.

"மிஸ் ரேவதியைப் பார்க்கணும்."

"நீங்க யாரு?"

அவளின் அநாவசியக் கேள்விகளைத் தவிர்ப்பதற்காக-



"ரேவதியோட ஆஃபீஸ்லர்ந்து வர்றோம்..." என்றான் குப்தன்.

காய்ச்சலோடு இருந்த ரேவதி கூட்டி வரப்பட்டாள். ரேவதியிடம் விஷயத்தைச் சொன்னபோது லேசாய்க் கலவரமானாள் அவள். பயலாஜி ரெக்கார்டு எழுதிக் கொண்டிருக்கிற கடைசித் தங்கை இவர்கள் பேச்சை ஒட்டுக் கேட்பதை உணர்ந்து -

"வெளியே போய் பேசலாமா?" என்றான்.

"வாங்க... கார்ல உக்காந்து பேசுவோம்."

கார் சீட்களில் வசதியாக உட்கார்ந்தார்கள்.

"டி.எம்முக்கு மிரட்டல் போன் வந்ததா?"

"ஆமா. யாரோ ஒரு பொண்ணுதான் போன் பண்ணியிருக்கு! அது போக டெபுடி கமிஷனருக்கு ஒரு மொட்டைக் கடிதமும் போயிருக்கு."

"சார் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. பெண்கள் விஷயத்துல எங்க எம்.டி. கொஞ்சம் மோசம். எல்லாப் பொண்ணுங்களையும் தன் வசப்படுத்தணும்னு நினைக்கிறார். என்னைக்கூட அவரோட விருப்பத்துக்கு ஒத்துழைக்கச் சொல்லி வற்புறுத்திட்டிருந்தார். என்னால அவர் மேல கோபப்படக்கூட முடியலை. என் குடும்ப சூழ்நிலை அப்படி! அவருக்குப் பிடி தராம நழுவி நழுவி போயிட்டிருக்கேன்! எல்லாருமே இப்படி அட்ஜஸ்ட் பண்ணிப் போகணும்னு நினைக்க மாட்டாங்க. சட்னு கோபப்பட்டவங்ககூட இருக்கலாம்!"

"உங்க ஆஃபீஸ்ல இருக்கற யார் மேலாவது நீங்க சந்தேகப்படறீங்களா?"

"எனக்கு யார் மேலேயும் சந்தேகம் தோணலை."

"அவசரமில்லை. நிதானமா யோசியுங்க. டி.எம். கண்ணன் மேல் ரொம்ப கோபப்பட்டு யாராவது பேசினாங்களா?"

ரேவதி யோசிப்புத் தோணியில் மிதக்க ஆரம்பித்தாள்.

## 24

அறைக்குள் நுழைந்தபோது சூழ்நிலை கொஞ்சம் வித்தியாசமிருப்பதை உணர்ந்தான். சந்தீப் மூலைக்கு மூலை உட்கார்ந்திருந்த மேனகா, வினயா, சுப்ரபா மூன்று பேரையும் பார்த்துப் புன்னகையோடு கேட்டான்.

"என்ன இன்னிக்கு ரொம்ப சைலண்ட்டா எல்லாரும் உட்கார்ந்திருக்கீங்க?"

மேனகா குரலைத் திறந்தாள்.

"உங்களோட பேசணும் சந்தீப்."

"பேசுங்க."

"வினயா அந்தக் கதவைத் தாள் போடு."

வினயா கதவைத் தாளிட்டாள்.

"சந்தீப், அன்னிக்கு நீங்க எங்ககிட்டே உங்களைப் பத்தின எல்லா நிஜங்களையும் சொல்லிட்டதா நாங்க நினைச்சிட்டிருந்தோம். ஆனா ஒரு முக்கியமான விஷயத்தை நீங்க மறைச்சிருக்கீங்க..."

அவன் குழப்பத்தோடு மேனகாவைப் பார்த்தான்.

"நீங்க என்ன சொல்றீங்க?"

"அன்னிக்கு நீங்க என்ன சொன்னீங்க வாட்டர் போர்டு கொலை வழக்கில் போலீஸ் தேடிட்டிருக்கற அக்கவுண்ட்டன்ட் ராசிதான் நான்னு எங்ககிட்டே சொன்னீங்க..."



"ஆமா..."

"அது பொய். நீங்க மானேஜர் ராமகிருஷ்ணன் கொலையாகிட்டதா போலீஸ் நினைச்சுட்டிருக்கற ராமகிருஷ்ணன் நீங்கதான். ஆக்சுவலா அங்கே கொலையானது அக்கவுண்ட்டன்ட் ரவி. ஏம் ஐ கரெக்ட்...?"

"மேனகா..."

"இந்தப் பேப்பர்ல வெளியாகியிருக்கிற ராமகிருஷ்ணனோட போட்டோ அதாவது உங்க போட்டோ, அதை ஊர்ஜிதம் படுத்துது. இதை நீங்க மறுக்க முடியாது தாடி. மீசையால உங்க முகத்தை மறைச்சிருந்தா மத்தவங்களுக்கு வேணா உங்களை அடையாளம் தெரியாம போகலாம். கூடவே இருக்கற எங்களுக்குமா தெரியாது?"

சில விநாடி மவுனத்துக்குப்பின், மெல்லத் தலை அசைத்தான்.

"யெஸ்... நான்தான் ராமகிருஷ்ணன்... இப்ப அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்றீங்க?"

"எதுக்காக அக்கவுண்ட்டன்ட் ரவியைக் கொலை பண்ணினீங்க?"

"அந்த ஆஃபீஸ்ல நான்தான் சீஃப் அக்கவுண்ட்ஸ் மானேஜர்... எல்லா வரவு செலவு கணக்கும் என் கைக்கு வந்து அப்புறம்தான் கவர்மெண்ட்டுக்குப் போகும். இதை சாதகமா எடுத்துக்கிட்டு நான் கணக்கு வழக்குல கொஞ்சம் தில்லுமுல்லு பண்ணி பணம் சேர்க்க ஆரம்பிச்சேன். இந்த விஷயம் அக்கவுண்ட்டன்ட் ரவிக்குத் தெரிஞ்சு போச்சு... என்னை வெளியே நடமாட முடியாதபடி இந்த விஷயத்தை எல்லார்கிட்டேயும் பரப்பப் போறேன்னு என்னை மிரட்ட ஆரம்பிச்சான்.

அவனோட எய்ம் எனக்குப் புரிஞ்சுது. நான் அடிக்கிற மோசடிப் பணத்துல அவனுக்கும் கணிசமான பங்கு தேவை!

அவனோட பேரம் பேச ஆரம்பிச்சேன்.. தினமும் ராத்திரி வாட்டர் போர்டு காம்பஸ்ல சந்திச்சு ரெண்டு பேரும் பேரம் பேசினோம்.

அவன் கேட்கற தொகையை நான் தரத் தயாரா இல்லை. நான் சொல்ற பங்கை அவனும் ஏத்துக்கலை. இப்படி தினமும் வந்து உங்களோட வாயாடிட்டிருக்க முடியாது.. இந்தப் பண மோசடியை நாளைக்குக் காலையில் பகிரங்கப்படுத்தப் போறேன்னு சொன்னான்.

அவன் சொன்ன தோரணை - திமிரான பேச்சு எல்லாமே என்னை ரொம்ப ஆத்திரமடைய வச்சிருச்சு... கட்டுப்படுத்த முடியாம அவன் கழுத்துல கைய வச்சுட்டேன். அந்த நிமிஷத்து ஆவேசத்துல என்னை அறியாம அவன் கழுத்தை நெறிச்சுக் கொன்னே போட்டேன். அவன் செத்து விழுந்த பின்னாடிதான் விபரீதம் புரிஞ்சுது... வேர்த்துப் போயிட்டேன்..

கொலைகாரன்ங்கற பட்டத்தை சுமக்க நான் தயாரா இல்லை. ரவியோட பிணத்தை ஓரமா ஒதுக்கிப் போட்டுட்டு வீட்டுக்கு ஓடிப் போனேன். பக்கத்துலதான் என் வீடு இருக்கு. வீட்ல பழைய ரம்பம் ஒண்ணு உபயோகம் இல்லாம ரொம்ப நாளா பரண் மேல இருக்கு! அதை எடுத்துட்டு வந்தேன். ரவியோட ட்ரஸ்ஸை நான் மாட்டிக்கிட்டேன்... அவனோட டெட்பாடியைப் பொறுமையா உட்கார்ந்து ரம்பத்தோட உதவியோட சின்னச் சின்னத் துண்டா நறுக்கினேன்.. நறுக்கின சதைத் துண்டுகளைப் பக்கத்துல இருந்த லாரி டாங்க்ல கொட்டிட்டேன்... போலீஸை நான்தான் செத்தேன்னு நம்ப வெக்கறதுக்காக காம்பவுண்ட் ஓரமா என்னோட சர்ட்-பேண்ட் அந்த ரம்பம் எல்லாத்தையும் புதைச்சு வெச்சுட்டேன்."

"அபாரமா வேலை செஞ்சிருக்கீங்க சந்தீப்.. ஸாரி ராமகிருஷ்ணன். ஆனா இந்த வீட்ல வந்து மாட்டிகிட்டீங்களே!"



"விதி.."

"எங்களுக்கு இன்னொரு சந்தேகம்."

"என்ன?"

"பேப்பர்ல ராமகிருஷ்ணனோட சம்பந்தப்படுத்தி சாரதாங்கற பொண்ணோட விவகாரத்தை வெளியிட்டிருக்காங்களே என்ன அது?"

ராமகிருஷ்ணன் (எ) சந்தீப். நிமிர்ந்தான்.

"உங்களுக்குக் கீழே வேலை பார்க்கிற அந்தப் பொண்ணுகிட்டே தப்பா பேசினீங்களா? நாங்க தண்டனை தர வேண்டிய சுப்பீரியர்ஸ் லிஸ்ட்ல நீங்களும் வர்றீங்களே ராமகிருஷ்ணன்?"

"மேனகா?"

"கண்ணன் விஷயத்தில் நாங்க கொஞ்சம் ஏமாந்துட்டோம். ஸோ, எங்க இயக்கத்துக்கு முதல் பலியா உங்களைக் கொடுத்தா என்னன்னு யோசிக்கறோம்."

"பாழாய்ப் போன இயக்கம்! அதெல்லாம் வேண்டாம் மேனகா. நீங்க மூணு பேருமே வாழ வேண்டிய சின்ன வயசுப் பொண்ணுங்க. சமுதாயத்து மேலிருக்கற கோபத்தைத் துடைச்சுட்டு ஒரு புது வாழ்க்கையை ஆரம்பியுங்க ப்ளீஸ்."

"சுப்பீரியர் அந்தஸ்து திரும்பினதுமே அட்வைஸ் எல்லாம் பலமா இருக்கு? நாங்க மூணு பேருமே வாழ்ந்து முடிச்சுட்டவங்க! நாங்க எதுக்கும் பயப்படப் போறதில்லை. உங்களை மாதிரி அயோக்யன்களை ஒழிச்சுக் கட்டறதுதான் எங்க வாழ்க்கை லட்சியம்!"

"மேனகா, வெட்டிப் பேச்சு எதுக்கு. சீக்கிரமாக நைலான் கயிறை எடு.. நம்ம முதல் பலியைத் தொடங்கலாம்."

"வே.. வேண்டாம்.."

ராமகிருஷ்ணன் அலற.. அலற..

மேனகா நைலான் கயிறை உருவினாள்.

மூன்று பேரும் வியூகம் போட்ட மாதிரி மூன்று பக்கமிருந்தும் அவனை நெருங்க ஆரம்பித்தார்கள். நடு நடுங்கி அவசர கால யோசிப்புகளில் தடதடத்தான் அவன். சட்டென அந்த யோசனை உற்பத்தியானது. மேனகாவுக்கும் சுப்ரபாவுக்கும் நடுவே இருக்கிற இடைவெளி.

குபீரென -

மின்னலாய் அந்த இடுக்கில் பாய்ந்து கதவுத்தாளைத் தொட்டான்.

எமர்ஜென்சி வேகத்தில் ரத்தவோட்டம் இயங்க -

விநாடிகளில் கதவுத்தாளை விடுவித்தான்.

"மேனகா அவனை மடக்கு.."

மூன்று பெண்களும் திடீர்க் குழப்பத்தோடு, ராமகிருஷ்ணன் வெளியே பாய்ந்த கதவில் தாவி வெளிப் பட்டார்கள்.

மரண பயத்தோடு -

வாசலை நோக்கி தடதடத்து ஓடினான் அவன். காம்பவுண்ட் கேட்டை ஒரே ஜம்ப்பில் தாண்டி வலது பக்க ரோட்டில் கண்மண் தெரியாமல் ஓட ஆரம்பித்து பத்தடி நகர்ந்திருக்க மாட்டான். கண்ணெதிரே ஹெட்லைட் வெளிச்சமும் ஒரு மிட்ஷுபிஷி காரின் முகமும் எங்கு அருகாமையில் உதயமாகி விட்டிருந்தது.

சுதாரித்து விலகுவதற்குள் -

"தட்ட்ட்ட்ட்.."

காரின் முன்புறம் அவனை ஆக்ரோஷமாய்த் தாக்கி ரத்தச் சிதறலாய்த் தூக்கியெறிந்தது.



# 25

ஜி.ஹெச்.

இன்ஸ்பெக்டர்கள் ஜெயேந்திரன், குருதேவ், அசோக் குப்தன் ஆகியோருக்கு எதிரே மனசுக்குள் இருந்த பயத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நின்றிருந்தார்கள் மேனகாவும், சுப்ரபாவும், வினயாவும்.

"ரேவதி உங்க ஃப்ரெண்டா?"

மேனகாவைப் பார்த்துக் குப்தன் கேட்டான்.

"ஆமா.."

"ரேவதி வொர்க் பண்ற கனில் என்ஜினீரிங் லிமிடெட் டோட ஸிஸ்டர் கன்சர்ன்லதான் நீங்க ஒர்க் பண்றீங்களா?"

வீட்டார் நூலகம்
அசோக் நகர், சென்னை-83

"ஆமா.."

"ரேவதி உங்ககிட்டே தன்னோட எம்.டி. கண்ணனைப் பத்திச் சொல்லியிருக்காங்களா?"

"ஆமா.."

"கண்ணனைப் பத்தி நீங்க என்ன நினைச்சீங்க?"

"பெரிய மனுஷங்க மனசுக்குள் இப்படிப்பட்ட வக்கிரமெல்லாம் இருக்கேன்னு வருத்தப்பட்டேன்!"

"ரேவதி விசாரணைக்கிடையில் உங்களைப் பத்திச் சொன்னாங்க.. புதுமையான சிந்தனைகள் உங்ககிட்டே ஜாஸ்தின்னு சொன்னாங்க! கண்ணனோட ஸிஸ்டர் கன்சர்ன்ல இருக்கறதால உங்களையும் விசாரிச்சுடலாமேங்கிற எண்ணத்துலதான் உங்க அட்ரஸை வாங்கிட்டு வந்தேன். வீட்டுவாசல்ல காரை நிறுத்தறதுக்குள்ளே அந்த விபரீதம். உங்க வீட்டுக்குள்ளேயிருந்து வேகமா ஓடி வந்த

அந்த ஆள் தானாகவே வந்து கார் மேல மோதிகிட்டான் யார் அவன்?"

"தெரியலை. ஏதோ திருடன் போலிருக்கு. வீட்டுக்குள்ளேயே நுழைஞ்சிட்டான்... சத்தம் போட்டு நாங்க துரத்திட்டு வந்தோம். வாசலுக்கு வந்த உங்க கார்ல விழுந்துட்டான்!"

"ஒண்ணுமே தெரியாத செல்லத் தங்கங்களாய் மேனகா, சுப்ரபா, வினயா மூன்று பேரும் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இன்டென்சிவ் கேர் யுனிட்டில், ராமகிருஷ்ணன் என்ற சந்திப் துளித் துளியாய் செத்துக் கொண்டிருந்தான்.

# 26

## சத்யராஜ்குமார் பேசறேன்...

போன அத்தியாயத்தின் இறுதியிலேயே 'முற்றும்' என்று எழுத பேனாவைத் தாளில் வைத்தேன்.

பக்கத்து வீட்டுப் பார்த்திபனும், எதிர் வீட்டு எமிலியும் அவசர அவசரமாய் ஓடி வந்தார்கள்.

"என்ன இது அநியாயம்? மேனகா கோஷ்டி இயக்கம் அது. இதுன்னு சொன்னாங்க! கண்ணனை தீர்த்தே தீருவோம்னு சபதம் போட்டாங்க... அதையெல்லாம் அந்தரத்தில் விட்டுட்டு 'முற்றும்' போடப் போறீங்களே?"

"காரணம் இருக்கு எமிலி! மேனகா, சுப்ரபா, வினயா மூன்று பேரையும் லாக்கப்ல தள்ளிட்டோம்னா நச்சுக் கிருமி மாதிரி பரவிக் கிடக்கற எத்தனையோ கண்ணன்களும், ராமகிருஷ்ணன்களும் தைரியமா தப்பை தொடர்ந்துட்டே இருப்பாங்க! அவங்க மூணு பேரால



கண்ணன்களுக்கு வெற்றிகரமா தண்டனை தர முடியுதோ இல்லையோ அட்லீஸ்ட் அவங்களைப் பயமுறுத்தி வைக்கவாவது முடியுது!

அதனாலதான் போலீஸோட பார்வையில் மேனகா, சுப்ரபா, வினயா மூன்று பேரும் விழறதுக்கு முன்னாடியே கதையை முடிக்க நினைக்கறேன். இப்ப சொல்லுங்க 'முற்றும்' போட்டுரலாமா?"

பார்த்திபன், எமிலியின் முகத்தில் சம்மத ஸ்லைடு விழுகிறது. உங்களுக்கும் சம்மதம்தானே வாசகரே?...

●●●●●

# ஊஞ்சலாடும் உறவுகள்

## 1

"மாயா... இன்னும் ரெடியாகலியா? கிருபா வர்ற டயமாச்சே? சீக்கிரம் சீக்கிரம் சீக்கிரம்..."

நாகராஜன் மாயாவை அவசரப்படுத்தினான்.

"கிருபாவுக்குப் பிடிக்குமேன்னு இன்னிக்கு பாதாம் அல்வா பண்ணினேன்... அது பதம் வர்றதுக்குள்ளே என்னைப் 'பதம்' பார்த்துடுத்து அப்பாடா... ஒருவழியா அது அல்வான்னு கிருபா ஒத்துக்கிட்டா சரி."

நாகராஜன் சிரித்தான்.

"சரி சரி சீக்கிரம் டிரஸ் பண்ணிக்கோ... கிருபா வந்தவுடனே டிபன் சாப்பிட்டு சினிமா கிளம்பணும் ஓகே?"

நாகராஜன் சொல்லி முடிப்பதற்கும் வாசல் கேட் திறப்பதற்கும் சரியாக இருந்தது.

"அதோ... கிருபா வந்தாச்சு..."

நாகராஜன் மகிழ்ச்சியுடன் கூறினான்.

மாயா டிரஸ் பண்ணிக்கொள்ள அவசரமாக உள்ளே போனாள். கிருபா என்கிற அந்த கிருபாகரன் - நாகராஜனின் அன்பு நண்பன் - உள்ளே நுழைந்தான்.



"ஸாரி நாகராஜன்... கொஞ்சம் லேட்டாயிடுச்சு... வீட்டுக்குக் கிளம்பறச்சே ஆபிஸிலே ஏதோ வேலை... இந்த லெட்டரை டிராப்ட் பண்ணு... அதைப் பண்ணுன்னு லேட்டாயிடுச்சு... கோபமில்லையே?"

"எனக்கொண்ணும் கோபமில்லை... மாயா தான் உனக்காகப் பாதாம் அல்வா பண்ணி வைச்சுட்டு ஆறிப் போயிடுத்தேன்னு கவலைப்பட்டுட்டு இருக்கா!" நாகராஜன் சிரித்தபடி கூறினான்.

"பாதாம் அல்வாவா... ஹை..."

கிருபாகரன் சிறுகுழந்தை மாதிரி ஆர்ப்பரித்தான்.

"இரு ஷூவைக் கழட்டிட்டு ஒரு நிமிஷத்துல வந்துடறேன் நேரே சமையல் ரூம்லே போய் பாத்திரத்தோட... ஒரு பிடி பிடிக்கறேன்."

"அதான் நடக்காதுன்னேன்... ஆளுக்கு ஒரு கிண்ணம் பங்கு போட்டு வைச்சுட்டேன்... இந்தாங்க..." என்றபடி வந்தாள்.

முகம் கழுவி பொட்டு வைத்து, வேறு புடவை மாற்றிக் கொண்டு நொடிப்பொழுதில் தன்னை எளிமையாக, ஆனால் அழகாக அலங்கரித்துக் கொண்டு எதிரில் வந்து நின்ற மாயாவை நாகராஜன் வியப்புடன் பார்த்தான்.

என்ன பெண் இவள்! வேலை செய்த களைப்பே இல்லாமல் எப்போதும் சிரித்த முகம்! நான் கூப்பிட்ட போதெல்லாம் சிணுங்காமல் என்னை மகிழ்விக்கும் சாதுர்யம்!

இவளை நான் மனைவியாக அடைவதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். கிருபாகரன் மாயாவைப் பார்த்தான்.

'என்ன பெண் இவள்! இத்தனை அழகு, திறமை, சாமர்த்தியம், சிரித்த முகம்! காரியப் பாங்கு அனைவரிடமும்

அன்பு காட்டும் இதயம், பரிவுடன் நடந்து கொள்ளும் பண்பும், நாகராஜன் கொடுத்து வைத்தவன்... எனக்கும் இந்த மாயா மாதிரி ஒரு நல்ல மனைவி கிடைத்துவிட்டால் நானும் பாக்கியசாலிதான். நாகராஜனைப் போன்ற ஒரு இனிய நண்பனையும், மாயாவைப் போன்ற தாயுள்ளம் கொண்ட ஒரு நல்ல நண்பனின் மனைவியையும் அடைந்தது என் பாக்கியம்தான்!"

"என்னடா, பாதாம் அல்வாவிலே ஃப்ளாஷ் பேக் பாக்கறியா?" நாகராஜன் கேலி பண்ணினான்.

"இல்லை பாதாம் அல்வாவிலே பரமபதம் சோபானப் படம் விளையாடிப் பாக்கறேன். ஆளைப் பார்! சரி சரி... அந்தப் ப்ளேட்டை இப்படித் தள்ளுங்க... எந்த ப்ளேட்டிலே கொஞ்சம் குவாண்டிடி அதிகம் இருக்கோ அதை இந்தப் பக்கம் தள்ளுங்க..." என்று சிரித்த கிருபாகரன் -

"ஹூம் எல்லாம் ஒரே அளவு... அதெப்படி தராசு நிறுத்துப் போட்டீங்களா?" என்றான்.

"சரி சரி... பச்சைக் குழந்தை மாதிரி அடம்பிடிக்காதீங்க. என் ஷேர்லே பாதி தரேன்..." என்ற மாயா தன் ப்ளேட்டில் இருந்து அல்வாவில் பாதியை எடுத்து கிருபாகரன் தட்டிலே போட, கிருபாகரன் நண்பனுக்கு 'கொக்காணி' காட்டிவிட்டுச் சாப்பிட... மாயா சிரித்தாள்.

நாகராஜனுக்குச் சிரித்துப் 'புரை' ஏறிக் கொண்டு விட்டது.

"மெள்ள... மெள்ள... இப்படித்தான் காணாததைக் கண்டது மாதிரி அள்ளி அள்ளிப் போட்டுக்கக் கூடாது" என்ற கிருபாகரன் நண்பனுக்குத் தண்ணீர் தந்தான் தலையைத் தடவித் தந்தான்.



"என்னை யாரோ நினைச்சுக்கிறாங்க..." என்றான் நாகராஜன் இருமியபடி...

"சாப்பிடற சமயத்திலே யாரா இருந்தாலும் இப்படி நினைக்கக்கூடாது..."

மாயா சிரித்தபடி சொன்னாள்.

"நீங்களும் சாப்பிட்டுட்டே சிரிக்கிறீங்க... உங்களுக்குப் புரை ஏறிக் கொள்ள..." கிருபாகரன் சொல்லி முடிப்பதற்குள் மாயாவிற்குப் புரை ஏறிக்கொண்டு விட்டது! ஆமாம் அவர்களை யாரோ நினைக்கிறார்கள். அடிக்கடி நினைத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

## 2

"உம் அப்புறம்?" என்றாள் மாயா சாதம் பரிமாறிக் கொண்டே...

"அப்புறம் என்ன விழுப்புரம் ஒரே கலாட்டாதான். கஷ்டப்பட்டு அந்த ஆளுக்கு டிராமா டயலாக் எல்லாம் சொல்லிக் கொடுத்து தினம் ரிகர்சல் பார்த்து... அவனுக்குக் காபி டிபன் வாங்கிக் கொண்டு தண்டம் அழுது, மேக்அப் போட்டு... நாடகத் தன்னிக்கு நடிக்க ஸ்டேஜுக்கு வாடான்னா கை, காலெல்லாம் பதறது... மேடை வந்தான் ஆடியன்ஸைப் பார்த்தானோ இல்லையோ அவசரமா உள்ளே ஓடி வந்துவிட்டான். சரிதான்... ஏதோ ஸ்டேஜ் மெட்டீரியலைத்தான் மறந்து வச்சுட்டுப் போயிட்டான் போலிருக்கு... வருவான் வருவான்னு ஸ்கிரீனைப் போடாம காத்திருந்தா ஆளையே காணோம்."

"என்னாச்சு?"

"ஏண்டா... அவனுக்குப் பேசாம கறுப்புக் கண்ணாடியை மாட்டிவிட்டு நடிக்க வைக்க வேண்டியது தானே?" நாகராஜன் கேட்டான்.

"உன் தலை. அவனே காணோமேன்னு நான் பார்த்துட்டு இருக்கேன். இவன்பாட்டுக்குப் பயத்துலே ஆட்டோ வைச்சுட்டு நேரே வீட்டுக்கே போயிட்டேன்."

"ஐயய்யோ அப்புறம் டிராமா என்னாச்சு?"

"என்ன ஆவறது? நான்தான் ஆபத்பாந்தவன். அனாதரட்சகன் இருக்கேன். உடனே மேக்அப் போட்டுட்டு மேடைக்கு வந்தேன். நடிச்சேன்."

"நான் மிஸ் பண்ணிட்டேனே..." மாயா வருத்தப் பட்டாள்.

'இவன்' நடிப்பை பாக்காததுக்கா வருத்தப்படாதே. ஒரு எக்ஸ்பிரஷனும் வராது. பொம்மை மாதிரி நிப்பான்! இவன் காலேஜ் டேஸ்லே நான்தான் பார்த்திருக்கேனே!" நாகராஜன் கேலி பண்ணினான்.

காலேஜி டேஸ்.. அந்தக் கல்லூரி.. அந்தக் கல்லூரி வாழ்க்கை இனி திரும்புமா? எத்தனை கேலிகள் ராகிங் பயமுறுத்தல்கள், நாகராஜனும் கிருபாகரனும் எத்தனை கொட்டம் அடித்திருக்கிறார்கள்.

அதை எல்லாம் மறக்க முடியுமா?

எப்படி எப்படியோ தடம் புரண்ட வாழ்க்கை எங்கெங்கோ அலைந்து கடைசியில் இப்படி எதிர்பாராத விதமாய் ஒரே ஊரில் ஒரே வீட்டில் இருக்கும்படியான சந்தர்ப்பம்? ஆச்சர்யம்!

இல்லாவிட்டால் வேலைக்காக இந்த ஊர் வந்த கிருபாகரன் வீடு கிடைக்காமல் திண்டாடித் தெருவில் நின்ற போது தற்செயலாக நாகராஜனைத் தன் பழைய கல்லூரித்



தோழனைச் சந்திக்க. இருவரும் வீட்டிற்கு வர.. கிருபா தன் கஷ்டத்தைச் சொல்ல, ஏன் நீ என் வீட்டிலேயே தங்கிக் கொள்ளேன் என்று நாகராஜன் பெரிய மனதுடன் கூற, நாகராஜின் மனைவி மாயா என்ன சொல்லுவாளோ என்று தயங்கியபடி கிருபாகரன் மாயாவைப் பார்க்க -

"எங்க வீட்டுலே நிறைய இடம் இருக்கு நாங்க நிஜமாகவே நல்ல பார்ட்டியா வந்தா வாடகைக்கு விடலாம்னுதான் நினைச்சிருக்கோம். கடைசியிலே நீங்க அவரோட ஃப்ரண்டாகவே வந்தது ரொம்ப சந்தோஷம்." என்று சொல்ல?...

"ஏன் மாயா.. எல்லாருக்கும் வாடகை நூறு ரூபாய்னா இவன்கிட்ட கொஞ்சம் கூடவே கேட்போம். அட்வான்ஸ் ஒரு வருஷம் கேட்போமா? ரெண்டு வருஷம் கேட்போமா?" என்று நாகராஜன் கேலி பேச..

"ஏய்.. ஏய்.. என்ன இது?" என்ற கிருபா பயத்துடன் அலற..

"பின்னே என்னடா இது..? ரொம்ப வருஷத்துக்கு அப்புறமா மீட் பண்றோம். உனக்கு நல்ல வீடு கிடைக்கிற வரை எங்க வீட்டிலே தங்கிக்க.. அப்புறம் உன் இஷ்டம்." என்ற நாகராஜன் பேச்சை முடித்தான்.

மறுநாள் ஹோட்டல் அறையைக் காலி செய்துவிட்டு கிருபா இவர்கள் வீட்டுக்கு வந்துவிட்டான்.

ஆரம்பத்தில் அவன் மாயாவிடம் பேசக் கூச்சப்பட்டதென்னமோ உண்மை.

ஆனால் மாயா ஒரு தாய்க்குரிய கருணையோடு நடந்து கொண்டாள்.

இயல்பாகப் பேசி அவன் கூச்சத்தைப் போக்கடித்தாள். இப்போது மூவரும் அரட்டை அடிக்க ஆரம்பித்தால் பொழுது போவதே தெரியாமல் பேசுவார்கள்.

அக்கம் பக்கத்துக்காரர்களின் தூக்கிய புருவங்களையும் ஏளன சிரிப்பையும் அடக்குவதற்காகவே நாகராஜன் எல்லோரிடமும் சொல்லி வைத்திருந்தான்.

"கிருபாகரன் என்னோட கஸின் பிரதர்."

விவகாரம் தீர்ந்தது எல்லோரும் பேசாமல் வாயை மூடிக் கொண்டு தங்கள் தங்கள் காரியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வேறு வம்பு தேடி அலைந்தார்கள்.

பழசையெல்லாம் எண்ணிப் பார்த்தபடி கிருபாகரன் அமர்ந்திருந்தான்.

'சட்'டென்று கிருபாகரன் நினைவுகள் கலைந்தன.

கிருபாகரன் இங்கு வந்ததிலிருந்து அவர்கள் மிக மிக மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

வேடிக்கையாகவும், சிரிப்பும் கும்மாளமுமாக நாட்கள் நகருகின்றன.

இரவு செகண்ட் ஷோ சினிமா போகிறார்கள்.

இல்லை, கேரம் விளையாடுகிறார்கள்.

விடிய விடிய சீட்டு விளையாடுகிறார்கள்.

முன்பெல்லாம் நாகராஜன் வெளியூர் டூர் போனால் தனிமையில் பயந்து செத்துக் கொண்டிருந்தாள் மாயா.

முகமூடிக் கொள்ளைக்காரன் இந்த வழியாக வருவானோ, அந்த வழியாக வருவானோ என்று!

இப்போது அந்தப் பயமே இல்லை!

கிருபாகரன், மாயாவும் விடிய விடியப் பரமபத சோபானவைப் படம் விளையாடுகிறார்கள். அல்லது பேசிக்கொண்டே இருப்பார்கள்.

அந்த நாட்கள் மகிழ்வின் பன்னீர்த் துளிகள் தெளித்த நாட்கள்.



குளிர் நிலவு வீசிய வசந்த காலங்கள்...

சிரிப்பு... சிரிப்பு... மகிழ்ச்சி மகிழ்ச்சி... வேடிக்கை... விளையாட்டு... நாட்கள் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை.

# 3

**நா**கராஜனின் அக்கா ஊரிலிருந்து வந்திருந்தாள். அவள் மருமகன் அமெரிக்காவில் இருக்கிறான். அமெரிக்காவிற்குப் படிக்கப் போன மகள் அங்கேயே ஒரு ஃபாரினரைக் காதல் செய்ய அது கல்யாணத்தில் முடிந்தது. பெற்ற மகளை வெறுக்க முடியவில்லை. புறப்பட்டுப் போனாள். அக்கா போன கையோடு மகளுக்கு டெலிவரி டயமாக இருந்தது. உதவிக்காகப் போனவள் ஐந்து வருடம் அங்கேயே தங்கிவிட்டாள்.

அவள் நாகராஜனின் கல்யாணத்திற்குக்கூட வரவில்லை. இப்போதுதான் வந்திருக்கிறாள். மாயாவின் அழகைப் பார்த்துச் சந்தோஷப்பட்டாள். அவள் குடித்தனப் பாங்கை ரசித்தாள். ஆனால் அவளால் சகிக்க முடியாதது ஒன்றே ஒன்றுதான்.

அந்த வீட்டில் கிருபாகரனுக்கு இருக்கும் அதிகப்படியான சலுகை! சொந்த அக்காவிடம் நாகராஜனால் பொய் சொல்ல முடியுமா என்ன?

"கஸின் பிரதர்" என்று கிருபாகரன் அறிமுகம் செய்தால், "அது யாருபா கஸின்? எனக்குத் தெரியாத கஸின்?" என்று கேட்க மாட்டாளா?

தன் நண்பன் என்கிற உண்மையை அக்காவிடம் உடைத்துச் சொன்னான் நாகராஜன்.

அக்காக்காரி கண்ணாடியை மாட்டிக் கொண்டு கவனிக்க ஆரம்பித்தாள்.

அது என்ன அப்படி ஒரு சிரிப்பு! ஆர்ப்பாட்டச் சிரிப்பு! மாயா சிரிக்கிறாள்.

அந்நிய புருஷன் இருக்கிறான் என்கிற உணர்வே இல்லையே!

அதென்ன இரவு மணி பத்து வரை சிரிப்பு, கேரம் விளையாட்டு, சீட்டு விளையாட்டு, குடும்பப் பெண் மாதிரியே சிலசமயம் மாயாவைப் பார்த்தால் தோன்ற வில்லையே!

இந்தக் கிருபாகரனுக்குத்தான் இருக்கட்டும் எந்த ஜோக் எது என்கிற விவஸ்தையே இல்லாமல் எல்லாவற் றையும் பட்டவர்த்தனமாகச் சொல்கிறான்.

ஊரே அதிரும்படி மாயா சிரிக்கிறாள்!

என்ன அசிங்கம் இது?

அன்றொரு நாள் இப்படித்தான் கிருபாகரன் வருவ தற்கு லேட்டாகிவிட்டது. பேசாமல் இவர்கள் இருவரும் சாப்பிட்டுத் தூங்க வேண்டியதுதானே?"

கொட்டக் காத்திருக்கிறார்கள் பட்டினியாக.

கேட்டால் அப்படித்தான் பழக்கமாம். இது என்னவோ சரியான பழக்கமாகத் தெரியவில்லை.

அன்றும் இப்படித்தான் மாயாவை வற்புறுத்திப் பாட வைத்தான். மாயாவிற்கு இனிமையான சாரீரம். முறைப்படிக் கற்றுக் கொள்ளாவிட்டாலும் கேள்வி ஞானத்தில் நன்றாகப் பாடுகிறாள்.

இவள் பாட ஆரம்பித்தவுடன் கிருபாகரன் சரியாகச் சொல்லி வைத்தது போல் வந்து விட்டான். ஒவ்வொரு பாட்டையும் அவனைக் கேட்டு இவள் பாடுகிறாள்!



கொண்ட கணவனா தட்டுக் கெட்டுப் போகிறது!

அந்த அசடு வெள்ளைச் சோளமான வெறும் பொம்மையாகப் பார்த்துக் கொண்டிருக்கிறான்!

"எனக்கு சங்கீதம் அவ்வளவாப் போறாது. கிருபாவுக்கு மியூஸிக்லே நல்ல டேஸ்ட்." என்கிறான் பைத்தியக்காரன்.

அட பைத்தியமே! உனக்கு சங்கீதம் மட்டும் போறாது இல்லை. எல்லாமே போறாது!

கிருபாவுக்கு எல்லாவற்றிலும் நல்ல டேஸ்ட்!

'தொட்டுத் தொட்டு பேச வரான் கண்ணன். துடுக்கு தனத்தை அடக்குவார் இல்லையே?" - என்ற பாட்டை இவள் தம்பூரா சுருதியுடன் பாடியபடி கள்ளத்தனமாகச் சிரிக்கிறாள்.

கிருபாவும், சிரிக்க இதெல்லாம் இந்த அசடு பார்த்துக் கொண்டிருக்கிறதே! அக்கா நிறைய யோசித்தாள். வேண்டியது, வேண்டாதது எல்லாவற்றையும் சேர்த்து யோசித்தாள்.

அமெரிக்காவில் மகள் நைட் டிரஸ் போட்டுக் கொண்டு கலர் கலரான பானங்களைக் கையில் வைத்துக் கொண்டு தன் கணவனின் கறுப்பு, வெள்ளை நண்பர்களை எல்லாம் 'ஹாய்...ஹாய்..' என்று அரைகுறை ஆடையில் விளிப்பதைப் பார்த்துப் பெருமைப்பட்ட அதே அக்கா.

'என் பெண் என்னமாக மேலை நாகரிகத்தைக் கற்று கொண்டு இடத்திற்கு ஏற்ற மாதிரி வாழ்கிறாள்' என்று மகிழ்ச்சி அடைந்தே அதே அக்கா..

இன்று என்ன எண்ணத்திற்கோ கவலைப்பட ஆரம்பித்தாள்.

ஆமாம் அமெரிக்காவில் அவள் அம்மா!

இங்கே இவள் நாத்தனார் இல்லையா?

இந்தப் பிள்ளை வேறு வீடு பார்த்துக் கொண்டு போகும் வரைதான் இங்கே இருப்பானாம்!

இவனைப் பார்த்தால் லேசில் வீடு மாற்றுகிற ஆசாமியாகத் தெரியவில்லை.

எல்லோருடைய தலைவிதியையும் மாற்றி விட்டுத்தான் போவான் போலிருக்கிறது.

இதை வளரவிடக் கூடாது. ஆரம்பத்திலிருந்தே இதைத் தடுக்காவிட்டால் விஷவிருட்சம் வேரூன்றிவிடும்! விஷத்தைக் களைய நினைத்த அக்கா நாகராஜன் விஷவித்தைப் பயிரிட ஆரம்பித்தாள்.

அன்று மெல்ல ஆரம்பித்தாள் அக்கா.

கிருபாகரனும் மாயாவும் கோவிலுக்குப் போயிருந்தனர்.

வழக்கமாக சனிக்கிழமை மூவருமே கோவிலுக்குப் போவது வழக்கம். நாகராஜன் வர நேரமாகிவிட்டது. வரும் போதே தலைவலி வேற.

"நீங்கள் இருவரும் போய்விட்டு வாருங்கள். நான் ரெஸ்ட் எடுத்துக் கொள்கிறேன். அக்கா நீ வேண்டுமானால் கூடப் போயேன்" என்றான்.

தம்பியுடன் தனிமையில் பேசக் கிடைத்த அந்த சந்தர்ப்பத்தை அக்கா நன்றாகப் பயன்படுத்திக் கொண்டாள்.

"நாகராஜா இது நல்லதில்லை. அவ்வளவுதான் நான் சொல்வேன். நீ ரொம்ப சாது. உனக்குக் கல்மிஷமே கிடையாது. சின்ன வயதிலே பக்கத்து பெஞ்சுப் பையன் உன் பாக்ஸிலே இருந்து பணத்தைத் திருடிட்டு உங்கிட்டே உறவு கொண்டாடுவான். உனக்கு அவன்தான் திருடன்னு தெரியாம அவன்கிட்டேயே அன்பா இருப்பே! நீ ஆரம்பத்துலே இருந்து ஏமாந்தவன். உன்னைப் பத்தி எனக்கு



நன்றாகத் தெரியும். ஏன்னா நான் பார்க்க நீ வளர்ந்தவன். உன்னோட நல்லதுக்குத்தான் சொல்வேன். இப்படி இவர்களைப் பழகவிடாதே. பஞ்சும் நெருப்பும்பாங்க. இது பெட்ரோலும் நெருப்பும்! குப்புன்னு பத்திக்கும். கடைசியிலே பத்த வைச்சவன் குளிர் காய்ஞ்சுட்டுப் போயிடுவான். நீதான் காப்பாத்தப் போய் தீப்புண்ணோட தவிக்கப் போறே. அவ்வளவுதான் நான் சொல்லுவேன்."

நாகராஜன் ஒவ்வொன்றாக யோசித்தான்.

சீ... இந்த அக்கா ஒரு மக்கு! எதையும் விகல்பமாகப் பார்க்கும் எண்ணம் இவளுக்கு.

"அத்தனை ஒழுங்கான பிள்ளையா இருந்தா வீடு கிடைச்சவுடனே போக வேண்டியதுதானே? இன்னும் ஏன் போகல்லை? வீடு கிடைக்காமலா போகும்? இவன் போக இஷ்டப்படவில்லை! எப்படிப் போவான்?"

நாகராஜன் ஒவ்வொன்றாக யோசித்துப் பார்த்தான்.

போன வாரம்கூட மூவருமாகச் சேர்ந்து ஒரு வீடு பார்த்தார்கள். மாடிப் போர்ஷன். இரண்டாவது மாடி.

"ஒவ்வொரு தடவையும் மாடி ஏறி இறங்கறதுக்குள்ளே கால் பெண்ட் கழண்டுடும்... இந்த இடம் வேண்டாம்..." என்று முதலில் சொன்னவன் மாயா.

விகல்பகமாகச் சொன்னாளா? வேண்டுமென்றே சொன்னாளா?

நாகராஜன் யோசித்தான்.

"இங்கே உங்களுக்கு என்ன குறை? ஏன் போகணும்... போகணும்னு பறக்கறீங்க?" மாயா கேட்டபோது "அதானே..." என்றான் இவனும்! இப்போது இவன் யோசித்தான்.

"ஏன்? அவன் என்ன சின்னக்குழந்தையா? கல்யாணத்து வயசாகலியா? ஏன் இன்னும் பண்ணிக்கல்லை?"

"இல்லைக்கா வேலை பர்மனென்ட் ஆகணும்னு சொன்னான்."

"ஆமாம்... அவனுக்கு அந்த வேலை பர்மனென்ட் ஆறதுக்குள்ளே வேற வேலை பர்மனென்ட் ஆயிடும். எனக்கென்னமோ இதெல்லாம் நல்லதாப் படலை. அப்புறம் உன் இஷ்டம் நான் அடுத்த வாரம் ஊருக்குப் போயிடுவேன். ஆனா ஆயுசுக்கும் அவஸ்தைப்படப் போறது நீதான்."

அந்த வேலை பர்மனென்ட் ஆறதுக்குள்ளே வேற வேலை பர்மனென்ட் ஆயிடும்!

நாகராஜனுக்கு என்னவோ போல் இருந்தது.

அதோ... அதோ வாசலில் மாயாவின் சிரிப்புச் சத்தம்!

அக்கா சொல்வதுபோல் மாயா கொஞ்சம் ஜாஸ்தி சிரிக்கிறாளோ?

இருவரும் கையில் பிரசாதத்துடன் உள்ளே நுழைந்தார்கள்.

அக்கா முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

## 4

**வ**ரும்போதே மாயா துள்ளலுடன் வந்தாள்.

"இந்தாங்க கோயில் பிரசாதம் வாங்கிக்கங்க... அக்கா நீங்களும் வாங்கிக்கங்க..."

நாகராஜன் பிரசாதம் வாங்கிக் கொண்டான்.

"ஒரு குட் நியூஸ் சொல்லப் போறேன்..."

அக்கா பிரசாதத்தை வேண்டா வெறுப்பாக வாங்கிக் கொண்டவள் கொஞ்சம் திரும்பிப் பார்த்தாள்.

"இனிமே இந்த கிருபா நம்ம வீட்டைவிட்டுப் போகப் போறதே இல்லை!"



நாகராஜன் விருட்டென்று எழுந்து உட்கார்ந்தான்.

அக்கா இவனைப் பார்த்தாள். 'பாத்தியா? நான் சொன்னது என்னாச்சு? நீ சுத்த ஏமாளி!'

நாகராஜன் அக்காவைப் பார்த்தான்.

ஒருவேளை அக்கா சொல்வது நிஜம்தானோ? பக்கத்து பெஞ்ச் பையன் திருடின கதை இவனுக்குக்கூட மறந்து விட்டது. அக்கா ஞாபகம் வைத்திருக்கிறார்! அதெல்லாம் நிஜமோ? இவன் ஒரு வெள்ளைச் சோளமோ?

"இதென்ன நான் சொல்றேன்... ரெண்டு பேரும் பேசாம இருந்தா எப்படி ஏன்னு கேட்க மாட்டீங்களா?"

"நீ சொல்றதை எல்லாம் கேட்கத்தானே போகிறோம் சொல்லி முடி..." என்றாள் அக்கா அழுத்தமாக.

"அக்கா நீங்கதான் ஹெல்ப் பண்ணணும்... நீங்க அடுத்த வாரம் ஊருக்குப் போகப் போறீங்க... அதுக்குள்ளே..."

"சீக்கிரம் சொல்லி முடி..." - நாகராஜன் எரிச்சல் பட்டான்.

"அன்னிக்கு ஃப்ரண்ட்ஸ் ரெண்டு பேருமா சேர்ந்து கதை சொல்றேன் பேர்வழின்னு எத்தனை கலாட்டா பண்ணீங்க... நானும் பண்ண வேண்டாமா? அத்தனை சீக்கிரம் சொல்லிவிடுவேனா!"

மாயா நாகராஜனின் எரிச்சலை அதிகப்படுத்த, கிருபாகரன் சொல்லி முடித்தான்.

"ஒண்ணுமில்லை நாகராஜ்... எனக்குப் பெண் கேட்டு வர ஆரம்பிச்சுட்டாங்க... நீயும் உன்னோட ஒய்ஃப்பும்தான் எனக்குப் பெண் தேடி என் கல்யாணத்தை முடிக்கணும்... இதை இவங்ககிட்டே சொன்னப்போ என்ன சொன்னாங்க தெரியுமா?"

நாகராஜன் யோசித்தான். என்ன சொல்லியிருப்பாள்?

'கல்யாணமே செய்து கொள்ள வேண்டாம்.. இங்கே இருந்துவிடு' என்று சொல்லி இருப்பாளோ?

"நான் என்ன சொன்னேன் தெரியுமா? நானும் என் வீட்டுக்காரரும் ஏன் இப்ப அக்கா வந்திருக்காங்க.. நாங்க மூணு பேருமே உங்களுக்காகப் பெண் பாக்கறோம்.. கல்யாண ஏற்பாடு பண்றோம்.. ஆனா கல்யாணத்திற்கு அப்புறமும் இதே வீட்டிலேயே தங்கனும்.. மாடி ரூமோட பக்கத்துலே ஒரு கிச்சன் போடச் சொல்லிடறேன்... நீங்க அங்கேயே ஃபேமிலியோட தங்கிக்கலாம்.. நீங்க ரெண்டு பேரும் சகோதரிகள் மாதிரி ஒண்ணா பேசிச் சிரிச்சு சமையல்களைப் பரிமாறி ஒருத்தர்கொருத்தர் உதவியா சந்தோஷமா இருப்போம்...அப்படின்னேன்..."

நாகராஜன் பெருமூச்சு விட்டான்.

அக்கா தலைகுனிந்து கொண்டாள்.

"என்னக்கா நான் சொல்றது சரிதானே? ஒரு பார்ட்டி கிருபாகிட்டே தினம் போன் பண்ணிக் கேட்டுட்டே இருக்காங்களாம்... பெரியவங்களா நீங்க இருக்கீங்க... நீங்க இருக்கும்போதே இந்த ஜாதகம், சம்பிரதாயம் இதெல்லாம் பார்த்துப் பெண்ணும் பார்த்துட்டா அப்புறம் பாக்கிக் காரியங்கள் எல்லாம் தானே நடக்கும் இல்லையா?"

அக்காவிற்கு என்னவோ போல் இருந்தது.

இவளைக் கத்தரித்துவிட்டால் வந்து ஒட்டிக் கொள் கிறாளே!

"நாளைக்குப் பெண்ணோட அப்பா, அம்மாவை நம்ம வீட்டுக்கு வரச் சொல்லி இருக்கேன். பாவம் கிருபாவுக்குப் பெரியவர்கள் யாருமில்லை. நாமதான் எல்லாத்தையும் முன்னின்று நடத்தித் தரணும்.. என்னங்க சரியா?"

மாயா படபடப்புடன் பேசினாள்.



நாகராஜன் மனம் லேசாக மெல்லச் சிரித்தபடி சொன்னான்.

"உன் சுதந்திரம் எல்லாம் பறிபோகப் போகுது கிருபா ஐ பிட்டி யூ."

சண்டைக்கு வந்தாள் மாயா.

"ஏன் பறி போகணும்? இப்போது உங்க சுதந்திரம் ஏதாவது பறி போய் இருக்கிறதா?"

"இருக்கே.."

"எப்படி...? எப்படி...?"

"நினைச்சப்போ வெளியே போக முடியவில்லை ஆபீஸிலே இருந்து அப்படியே சினிமாவுக்குப் போக முடியல்ல. ஐயோ வீட்டில பத்ரகாளி காத்துட்டு இருப்பாளே.. பாவம்னு தோணுது!"

"பத்ரகாளியா? நானா?"

"சீ சீ.. உன்னைப் போய் சொல்வேனா? சினிமா பேரை சொன்னேன்.."

"பத்ரகாளி காத்துட்டு இருப்பாளீங்களே.."

"அப்படியா உன் காதுலே விழுந்தது? பத்ரகாளி சினிமாவுக்காகக் காத்துட்டு இருப்பான்னேன்.."

"பொய்.. பொய்.. பழைய படத்துக்காக நான் ஒண்ணும் காத்துட்டு இருக்க மாட்டேன்... நீங்களும் எனக்காகக் கவலைப்பட வேண்டாம். இனிமே உங்க இஷ்டம் போல வெளியே போயிக்கலாம். நானும், கிருபாவும் வெளியே போயிக்கறோம். நோ... ப்ராப்ளம்.."

'சட்'டென்று ஒரு நிமிடம் அங்கு விசித்திர மௌனம் நிலவியது.

இது மாதிரி எத்தனையோ தடவைகள் மாயா முன்பு சொல்லி இருக்கிறாள்.

அப்போது நாகராஜன் என்ன சொல்லுவான்?

'போயேன்... தாராளமாகப் போயேன்... சனி விட்டதுன்ன நிம்மதியாகத் தூங்கிடுவேன்! உன் தொந்தரவு இல்லாம நல்லா தூங்கிடுவேன்!

இன்று ஏன் ஒண்ணுமே சொல்லவில்லை?

சனி விடவில்லையா? ஆமாம், சனி மெல்லப் பிடிக்க ஆரம்பித்திருக்கிறதோ?

முகவாயைத் தோளில் இடித்துக் கொண்டு அக்கா உள்ளே எழுந்துபோன போதுதான் அங்குள்ள ஒரு விசித்திர உணர்வை என்னவென்று சொல்ல முடியாத ஒரு மோனகானத்தை அவர்கள் உணர்ந்தார்கள்.

## 5

"தொட்டுத் தொட்டுப் பேச வரான் கண்ணன்... துடுக்குத் தனத்தை அடக்குவார் இல்லையே!" என்று ஸ்வப்னா பாடிக் கொண்டிருந்தாள்.

பெண் பார்க்கும் படலம்!

அக்கா, நாகராஜன், கிருபாகரன், மாயா அனைவரும் சம்பிரதாயமாகப் பெண் பார்க்க வந்தனர்.

பெண்ணுக்குப் பாட தெரியும் என்றவுடன் மாயா தான் பாடச் சொல்லி வற்புறுத்தினாள்.

இரண்டாவது பாட்டே இந்தப் பாட்டாக இருந்த வுடன் மாயாவுக்கு ஒரே இன்ப அதிர்ச்சி!

என்ன ஆச்சர்யம்! இந்தப் பாட்டு என்றால் கிருபாவுக்கு ரொம்பப் பிடிக்கும். இவள் பாடினாலே ரசிப் பான். இப்போது பாடுவதோ வருங்காலப் பெண்டாட்டி! ரசனைக்குக் கேட்கவா வேண்டும்?



கிருபாவை மாயா குறும்பாக பார்க்க.

"இந்தப் பெண் எனக்கு எல்லாவற்றிலும் ஏற்றவள் தானே?" என்ற தினுசாக அவனும் பார்க்க.

நாகராஜன் இவர்களைப் பார்த்தான்.

அக்காவும் தன் தம்பியைப் பார்த்தாள்.

பெண் பார்க்க வரும்போது பாடுகிற பாட்டா இது? உன் பெண்டாட்டிக்குத்தான் விவஸ்தை இல்லை என்றால் வரப் போகிறதும் அப்படியே இருக்கிறதே! என்கிற வாசகம் அவள் முகத்தில் ஒட்டி இருந்தது.

எது எப்படியோ இன்னும் கொஞ்ச நாளில் கிருபா வுக்கு ஸ்வப்னாவுக்கும் திருமணமாகிவிட்டால் அதன்பின் எல்லாம் சரியாகிவிடும். நாளாவட்டத்தில் கிருபாவையே அந்த வீட்டை விட்டுக் காலி பண்ணிக்கொண்டு போக வைத்துவிடுவாள் இந்த ஸ்வப்னா!

இவளைப் பார்த்தால் லேசுப்பட்டவளாகத் தெரிய வில்லை. பார்ப்போம். கல்யாணத்திற்குத்தான் நானும் வருவேனே... அப்போது மெல்ல ஏதாவது ஒரு 'ஹிண்ட்' கொடுத்து இவர்களை அப்புறப்படுத்த வேண்டும்.

அக்கா நினைத்துக் கொண்டாள்.

எல்லாம் ஆகிவிட்டது. டிபன் சாப்பிட்டு காபி சாப்பிட்டு, வாய் நிறையப் பேசி சிரித்து எல்லாம் ஆகி விட்டது.

"எனக்கென்று ஒரே உறவு இந்த நாகராஜனும் அவன் மனைவியும்தான். எல்லாவற்றையும் அவர்களைக் கேட்டு பண்ணுங்க. என்னிடம் கேட்க வேண்டாம்..." என்று கிருபா கூறிவிட்டான்.

"அது சரி பெண் பிடிச்சிருக்கா இல்லையான்னுகூட எங்கிட்டேயா கேட்க முடியும்? அது உங்ககிட்டேதான்

கேட்கணும்! பெண்ணைப் பிடிச்சிருக்கா?'' மாயா கேட்டான்.

"நீங்க எல்லாம் ஓகே சொன்னா எனக்கும் ஓகேதான்" என்றான் கிருபா.

"இந்தக் கதைதானே வேண்டாங்கிறது அப்புறம் உங்களுக்காகத்தான் கல்யாணம் பண்ணிட்டேன்... ஆனை குதிரை இந்தப் பேச்சு வேண்டாம். வீட்டுக்குப் போய் போன் பண்றேன்.. லெட்டர் போடறேன்.. இந்தக் கதையும் வேண்டாம்.. சட்டுன்னு பதில் சொல்லணும்.."

மாயா தனக்குத்தான் ஏதோ ஒரு பெரிய கிரீடம் வைத்த மாதிரி பேசினாள்.

"மாயா.. புருஷர்கள் காரியம்.. அதை அவங்க பார்த்துப்பாங்க.. நீ ஏன் வீணா எல்லாத்துக்கும் தலை கொடுத்துவிட்டுக் கஷ்டப்படறே? நாகராஜா, உன் ஃப்ரண்ட் கிட்டே கேட்டு நீயே சொல்லிடுப்பா.." என்றாள் அக்காகாரி.

மாயாவிற்கு என்னவோ போல் ஆகிவிட்டது! அத்தனை பேர் எதிரிலும் இந்த அக்கா என்ன இப்படி பேசிவிட்டார்! நாளைக்கு அந்தப் பெண்ணுக்கு என்மீது என்ன மதிப்பு இருக்கும்? பரவாயில்லை. அக்காவிற்கு எங்க நட்பு தெரியாது. அக்கா இன்று வந்து நாளை ஊருக்குப் போகிறவள்.. இதைப் பெரிதுப்படுத்தக்கூடாது.

மாயா பேசாமல் இருந்தாள்.

"என்னப்பா இன்னும் எத்தனை பேர் உங்கிட்டே கேக்கணும்? பதில் சொல்லேன்.." என்றான் நாகராஜன் பாதி நிஜமும், பாதி கேலியுமாக.

"எங்கிட்டே கேட்கிறது இருக்கட்டும். அந்தப் பெண் கிட்டே முதல்லே கேளுங்க! அவங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கா?" என்றவன் நாகராஜனின் அக்காவிடம் வந்து..



"அம்மா நீங்கதான் இந்தக் குடும்பத்துக்கு மூத்தவங்க நீங்களே பொண்ணுகிட்டே சம்மதம் கேட்டுட்டு அவங்க சரின்னு சொன்னா நீங்களே என்னோட சம்மதத்தையும் சொல்லிடுங்க... நீங்களே பாக்கு வெத்தலை மாத்திடுங்க.." என்று கிருபா சொன்னபோது அக்காவே ஒருகணம் ஆடிப் போய்விட்டாள்.

"அது வந்து நான் எப்படிக் கேக்கறது? இந்த மாதிரி காரியங்களுக்கு சுமங்கலியைக் கேக்கணும்.. பாக்கு வெத்தலை மாத்தறது எல்லாம் சுமங்கலிப் பொண்டுகள்தான் செய்யணும் நான்தான் வந்து.." என்று திணறினாள்.

"சரி, பெரியவங்களா இருந்து கல்யாணத்தை நடத்தி வைக்கலாம் இல்லையா? உங்க அனுபவம் என்ன? இந்தக் குடும்பத்துலே நீங்க வைச்சிருக்கிற பாசம் என்ன? இந்தக் குடும்பம் செழிக்கணும்னா நீங்கதான் இந்த கல்யாணத்தை முன்நின்று நடத்தித் தரணும்."

அக்கா குழம்பினாள்.

என்ன இவன்! வேண்டுமென்றே என்னிடம் தூபம் போடுகிறானா? ஐஸ் வைப்பது போல் என்னை மட்டம் தட்டுகிறானா? எந்த அர்த்தத்தில் பேசுகிறான்?

இதற்குள் பெண்ணின் அப்பா, உள்ளே இருந்து வெற்றிலைப் பாக்குத் தட்டுடன் வந்தார்.

"என் பெண்ணுக்குப் பரிபூரண சம்மதம். மாப்பிள்ளை சார்பா மிஸ்டர் நாகராஜனும் நீங்களும், உங்கள் மனைவியும் இந்த வெற்றிலை பாக்குத் தட்டை வாங்கிக்கங்க இது நமக்குள்ளே ஒரு ஃபார்மல் நிச்சயத்தார்த்தம். அடுத்த வாரத்துலே ஒரு நல்ல நாளாப் பார்த்து நிச்சயத்தார்த்தத்தை கிராண்டா பண்ணிடலாம், சரிதானா?"

கண்களில் ஆனந்தக் கண்ணீர் நிரம்ப மாயா அந்தத் தட்டை வாங்கிக் கொண்டாள்.

மகிழ்ச்சிப் பெருக்கால் பேச நாவெழாது திணறியபடி நிற்க, கிருபாவுக்கு மனம் போல் மனைவி வாய்த்திருக்கிறாள். அவனுக்கு ஏற்ற மாதிரி அழகும், சிவப்பும், பாட்டும், படிப்புமாக இவர்கள் நன்றாக இருக்க வேண்டும் நன்றாக இருக்க வேண்டும்.

- என்று மனம் வாழ்த்த என்றோ நடக்கப் போகிற இந்தக் கல்யாணத்தை மனத்துள் கண்டுகளித்தவளாய் மாயா நின்று கொண்டிருந்தாள்.

என்றோ நடக்கப் போகிற கல்யாணத்துக்கு முன்னால் நடக்கப் போவதை அவளால் யூகிக்க முடியவில்லை!

## 6

**அ**க்கா ரொம்ப பிஸியாகிவிட்டாள். பலகாரம் பண்ணுவதும், துணிமணிகள் வாங்குவதும் மார்க்கெட்டுக்கு அலைவதும் நகைகள் ஆர்டர் கொடுப்பதுமாக இருந்தாள்.

சிங்கப்பூரில் இருக்கும் அக்காவின் மகன் அம்மாவை வா வா என்று வருந்தி வருந்தி அழைக்கிறான்!

அப்பா இருந்த காலத்திலேயே ஏதோ சொத்துத் தகராறு. அமெரிக்காவில் இருக்கும் தன் பெண்ணுக்கு அதிகமாகத் தந்துவிட்டாள் தன்னை ஏமாற்றிவிட்டாள் என்று அந்தப் பையனுக்குக் கோபம்!

இப்போது அப்பா காலத்திற்குப் பிறகு அமெரிக்காவில் ஐந்து வருடம் இருந்துவிட்டு வந்த தன் அம்மாவைப் பார்க்க மகனுக்குத் திடீரென்று ஆசை பிறந்துவிட்டது.

வேறு ஒன்றுமில்லை. கணவனும், மனைவியும் ஆபீஸ் போகிறவர்கள். சின்ன கைக்குழந்தை வேறு! பேபி விக்டருக்குக் கொடுத்துக் கட்டுப்படியாகவில்லை! அதுதான் திடீரென்று அம்மா பாசம்!



பழைய கோபம், குரோதம் எல்லாம் போன இடம் தெரியவில்லை. மகனுக்குப் பலகாரம் செய்வதும், பேரப் பிள்ளைக்கு டிரஸ் வாங்குவதுமான அக்காவிற்கு நேரம் சரியாக இருந்தது.

"நீ ஏற்பாடு பண்ணின கல்யாணம். அதுக்கு இல்லாம இப்படி திடீரென்று கிளம்பறியே?" என்று நாகராஜன் கூடத் தன் அக்காவைக் கேட்டான்.

கிருபாகரனின் கல்யாணத்திற்கு இன்னும் ஒரு மாதம் தான் இருக்கிறது. தினம் புடவை வாங்க, இன்விடேஷன் டிசைன் பண்ண, இப்படி ஏதாவது ஒரு காரணம் வைத்து பெண்வீட்டுக்காரர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அக்கா இருப்பதால் மாயா அதிகம் இதில் தலையிடுவதில்லை இப்போது இந்தச் சமயம் பார்த்து அக்கா கிளம்புகிறாளே!

"அதனாலே என்ன? எல்லா ஏற்பாடும் பண்ணியாச்சே மத்ததெல்லாம் தானே நடந்திடும். கல்யாணமான கையோட அவங்களை வேற வீடு பார்த்துட்டுப் போகச் சொல்லு அவ்வளவுதான். பெண் வீடும் உள்ளூர்தானே? அதனால சௌகர்யமாகப் போச்சு. வேற வீடு கிடைக்கற வரை கிருபாகரன் அங்கே போய், வந்துட்டு இருந்தான்னா தானே இந்த வீடும் மறந்து போயிடும்."

"அது சரி, மாடியில் கிச்சன் போடுவது பற்றி மாயா ஏதாவது கேட்டால்?"

"அவள் கேட்டபோது பார்த்துக் கொள்ளலாம். நாமாக ஆரம்பிக்க வேண்டாம்."

வழக்கம் போல் அவர்கள் சிரித்தார்கள். பேசினார்கள். வெளியே போனார்கள். ஆனாலும் அவர்களிடையே திடீரென்று ஏதோ ஒரு கனமான மௌனம் சூழ்ந்தது

கிருபாவுக்குக் கல்யாணம் ஆகிவிடப் போகிறதே என்று மாயாவுக்குள் கவலையாக இருக்கும்.

அக்காவை ஏர்போர்டில் கொண்டுவிட அனைவரும் போயிருந்தனர்.

நாகராஜன், மாயா, கிருபாகரன்.

ஏர்போர்டில் கண்ணாடிக் கதவுக்கு இந்தப் பக்கம் நின்று இவர்கள் கையாட்டிக் கொண்டு விடைபெற்றனர்.

மாயா ஒரு பெருமூச்சுவிட்டாள்.

"கிளம்பலாமா?" நாகராஜன் கேட்டான்.

அவனுக்குக்கூட என்னமோ மாதிரி இருந்தது. இத்தனை நாட்கள் அக்காகூட இருந்துவிட்டு இப்போது திடீரென்று கிளம்பியது அவனை அனாதையாக்கிய மாதிரி இருந்தது.

"யெஸ்" என்றான் கிருபா.

"எப்படித் திரும்பிப் போறது?" நாகராஜன் கேட்டான்.

ஏனெனில் ஏர்போர்ட்டுக்கு வரும்போது இவனும் மாயாவும் அக்காவை டாக்ஸியில் அழைத்துக் கொண்டு வந்தார்கள். லக்கேஜ் நிறைய இருந்ததால் டாக்ஸி தேவைப் பட்டது. கிருபாகரன் நேரா ஆஃபீஸிலிருந்து ஸ்கூட்டரில் வந்துவிட்டான். புது ஸ்கூட்டர் என்றோ புக் பண்ணினது சமீபத்தில்தான் வந்தது.

"கிருபா, நீங்க ஸ்கூட்டர்லே தானே வந்திங்க? நாங்க ரெண்டு பேரும் ஸ்கூட்டர்லேயே வரோம் நீங்க?"

"ஓ யெஸ். நீங்க வாங்க. நான் பின்னாலேயே பஸ்ஸி லேயோ அல்லது ஆட்டோவிலேயோ வந்துக்கறேன். என்ஜாய் யுவர் செல்ப்"

கிருபா ஸ்கூட்டர் சாவியை நாகராஜனிடம் தந்தான்.



"கல்யாணம் ஆனப்புறம் ஒய்ஃப்பை வைச்சுட்டு ஊர் சுத்தவே உங்களுக்கு நேரம் சரியா இருக்கும். அதுக்குள்ளே நாங்களும் ஒருதடவை போயிட்டு வரோம்!"

"நோ அப்ஜக்ஷன் மை ஆல் மீன்ஸ் உங்க ரெண்டு பேரோட திருப்பாதம் படவே என்னோட ஸ்கூட்டர் கொடுத்து வைச்சிருக்கணும்."

கிருபா சிரித்தபடி சாவியைக் கொடுத்தான் நாகராஜ னிடம்.

மாயா இப்படிப் பிச்சை கேட்பது நாகராஜனுக்கு ஏனோ பிடிக்கவில்லை.

என்னவோ முன்னே பின்னே ஸ்கூட்டரைப் பார்க் காதவள் மாதிரி ஏனிப்படி கேட்கிறாள்? இருந்தாலும் தன் எண்ணத்தை அவனால் வெளிப்படையாகத் தெரிவிக்க முடியவில்லை.

"என்ன யோசிக்கறீங்க? வாங்க கிளம்பலாம்..." கிளம்பினார்கள்.

ஸ்கூட்டரில் போய் கொண்டே நாகராஜன் பேசினான்.

"நான்கூட ஸ்கூட்டருக்குப் புக் பண்ணி இருக்கேன்."

"உம்..."

"ஒருத்தொருத்தர் அதிர்ஷ்டம் சீக்கிரம் கிடைக்கிறது. எனக்கு லேட்டாகுது."

"உம்..."

மாயா என்ன என்னமோ நினைத்துக்கொண்டு உட் கார்ந்திருந்தாள்.

அக்கா வந்ததிலிருந்து ஒவ்வொரு சம்பவமாக நினைத்துப் பார்த்தாள். எங்கோ ஒரு விரிசல். அது எங்கே? எப்படி? எப்போது?

நாகராஜன் முன்பு மாதிரி இல்லை! நிச்சயம்.

கிருபாதான் பழைய மாதிரியே சிரித்துக் கொண்டு கேலி பேசிக் கொண்டிருக்கிறான். என்னால் சிரிக்கவும் முடியவில்லை. சிரிக்காமல் இருக்கவும் முடியவில்லை.

ஏன்? எப்படி?

எல்லாம் கல்யாணமானால் சரியாகிவிடும். ஸ்வப்னா என்னைப் புரிந்து கொள்வாளா?

"என்ன நான் பாட்டுக்குப் பேசிட்டே வரேன்.. உம் உம்னு சொல்றே? ஒண்ணுமே பேச மாட்டேங்கறே? கனவா?"

நாகராஜன் திரும்பி மாயாவைப் பார்த்தபடி கேட்ட அதே நேரம் -

தன் கனவுகள் கலைந்து மாயா விழிப்புப் பெற்ற அதே நேரம் -

எதிரே லாரி ஒன்று யமனாக வந்து கொண்டிருப்பதை கண்டு அவள் திகைத்த அதே நேரம் -

கண்மூடிக் கண்திறப்பதற்குள் அந்தச் சம்பவம் நிகழ்ந்து விட்டது.

## 7

"வெரி ஸாரி மேடம்." என்றார் அந்த வெள்ளை உடை அணிந்திருந்த டாக்டர். அந்த ஸ்பெஷல் வார்டின் பணக்காரத் தனத்திலும் அந்த அழகு நர்ஸ்களின் வெள்ளை அலங்கார பவனிகளிலும், அவ்வப்போது ஸ்ட்ரெச்சர்களின் கிரீச்சிடும் ஓசைகளிலும், டெட்டால் நெடிகளிலும் எதிலுமே தன் மனதைப் பதிய வைக்காமல் பரபரப்புடன்



அந்த அறையின் வாசலில் காத்திருந்த மாயாவிடம்தான் டாக்டர் சொன்னார்.

மாயா தலையிலும் ஒரு கட்டு இருந்தது. ஆஸ்பத்திரிக் கட்டு.

"டாக்டர்.." மாயா விம்மினாள்.

"ப்ளீஸ், மனசைத் திடப்படுத்திக்கங்க."

டாக்டரை மேலே பேசவிடாமல் மாயாவின் கேவல் ஒலித்தது.

"ப்ளீஸ் மாயா நடந்து முடிந்ததைப் பத்தி இனிமே கவலைப்படக் கூடாது. இனி நடக்கப் போறதைப் பத்தி தான் கவலைப்படணும்.. டாக்டர் சொல்றதைக் கேட்போம்" என்றான் கிருபாகரன்.

இது நடந்து இரண்டு வாரம் இருக்குமா? இருக்கும். இருக்கும்.

அன்றைய நாள் -

எப்படிப்பட்ட நாள் -

புத்தம் புதிய ஸ்கூட்டரில் நாகராஜனும், மாயாவும் முன்னால் செல்ல, பின்னால் ஆட்டோவில் கிருபாகரன் அவர்களைத் தொடர்ந்தான்.

ஆட்டோவின் பெட்ரோல் கம்மியாகிவிட்டது என்று ஒரு பங்கில் ஆட்டோக்காரர் பெட்ரோல் போட ஆட்டோவை நிறுத்தினார்.

மீண்டும் அவர்கள் பயணித்தபோது..

நடுரோட்டில் இதென்ன கூட்டம்?

யாருக்கு என்ன நடந்துவிட்டது?

கிருபாகரன் ஆட்டோவை நிறுத்தினான்.

அருகில் சென்று பார்த்தபோது..?

ரத்த வெள்ளத்தில் நாகராஜன் மிதக்க, பிளாட்பார ஓரத்தில் மாயா மயங்கிக் கிடக்க.

கடவுளே! விபத்தை நேரில் பார்த்தவர்கள் விஷயத்தை வருணித்தார்கள்.

வேகமாக வந்த லாரியும், ஸ்கூட்டரும் மோதிக் கொள்ள, பின்சீட்டில் அமர்ந்திருந்த மாயா தூக்கி எறியப்பட...

நிலைகுலைந்து விழுந்த நாகராஜனின் கால்கள் இரண்டும் லாரியின் அடியில் நசுங்கி உருத்தெரியாமல்...

மயங்கிக் கிடந்த இருவரையும் எப்படி டாக்ஸியில் போட்டுக்கொண்டு, எப்படி ஆஸ்பத்திரி வந்தான் அந்த ஆஸ்பத்திரிக் குழப்பங்களை எப்படிச் சமாளித்தான் எல்லாமே இன்னும் கிருபாவுக்குப் புரியவில்லை!

அத்தனை பரபரப்புடன் செயல்பட்ட வினாடிகள் அவை!

இரு வாரத்திய பழைய கதை.

நாகராஜனுக்கு உணர்வு வந்தது. பாதங்களில் போடப்பட்ட கட்டுக்களைப் பார்த்தே அலறினான் அவன் அன்று...

இன்று?

முழங்காலுக்குக் கீழே இரண்டு பாதங்களையும் எடுத்தே ஆக வேண்டும் என்கிற உண்மையை இதோ டாக்டர் கூறிக் கொண்டு இருக்கிறார்.

இதைக் கேட்டால் என்ன தவிப்பானோ? எப்படிக் கதறுவானோ?

மாயா விம்மி விம்மி அழுதாள்.

டாக்டர் சில பாரங்களில் அவர்கள் கையெழுத்திட வேண்டியதைப் பற்றிச் சொல்லிட்டுப் போய்விட்டார்.

மாயா இன்னும் அழுது கொண்டுதான் இருந்தாள்.



"ப்ளீஸ் இதோ பாருங்க. ஏற்கனவே உங்களுக்கும் அடிப்பட்டிருக்கு... வீணா அழுதா உங்க உடம்புக்கு ஏதாவது வந்துடப் போகுது. ப்ளீஸ் அழாதீங்க."

தான் அழுதுகொண்டே அவளைத் தேற்றினான் கிருபா.

நாளை ஆபரேஷனாம். டாக்டர் சொல்லிவிட்டார்.

நாளை நாகராஜனின் இரண்டு கால்களையும் எடுத்துவிடுவார்கள்.

"எனக்கு இனி யார் துணை? நான் அனாதை. நான் அனாதை..?" மாயாவின் அழுகை அதிகமானது.

"உஸ்... என்னங்க இது? இப்படிப் பச்சைக் குழந்தை மாதிரி அழறீங்க? ப்ளீஸ் அழாதீங்க."

கிருபாகரன் அவளைத் தேற்றினான்.

"நான் இனிமே அனாதை. எங்கிட்டே அன்பு பாராட்ட ஆறுதலா இருக்க யாருமே இல்லை. நான் அனாதை... நான் அனாதை..." மாயா அரற்றினாள்.

"ப்ளீஸ் மாயா, என்னைப் பாருங்க. நான் உங்களுக்குப் பக்கபலமா இருக்கேன். துணையா இருக்கேன். கவலைப் படாதீங்க. யார் என்ன சொன்னாலும், எந்த எதிர்சக்தி என்னைத் தடுத்தாலும், எந்த நிலையிலும் நான் உங்களைக் கைவிட மாட்டேன். இது சத்தியம். கவலைப்படாதீங்க. ப்ளீஸ் கண்களைத் துடைச்சிக்குங்க."

மாயா அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"மாயா..." என்று அவன் அவளைப் பெயர் சொல்லி அழைத்தது மனசுக்கு ரொம்ப இதமாக இருந்தது.

# 8

"ஆ.. மெல்ல மெல்ல.. மெல்ல எங்கே இப்படி என் கையைப் பிடிச்சுக்கோ. தட்ஸ் குட்."

கிருபாகரன் தன் இரு கரங்களால் நாகராஜனை மெல்லத் தாங்கியபடி நடக்க நாகராஜன் ஊன்றுகோலுடன் நடை பழகிக் கொண்டிருக்கிறான்.

நாகராஜன் ஆஸ்பத்திரியிலிருந்து வந்து, நிரந்தரமாக வந்து, கிட்டத்தட்ட ஒரு மாதமாகப் போகிறது! கடந்த சில மாதங்கள் எத்தனை கொடூரம் நிரம்பியவை.

நாகராஜன் முழங்காலுக்குக் கீழ் இரண்டு பாதங்களையும் நீக்கிவிட்டு அவனை நொண்டியாய், முடமாய், படுக்கையில் பாதிக் கால்களுடன் படுத்திருந்தவனைப் பார்த்துவிட்டு மாயா அழுத அழுகை!

இரவு பகல் தூக்கமின்றி, ஆகாரமின்றி, கிருபாகரன் ஆபீஸுக்கு லீவு போட்டுவிட்டு அவன் பக்கத்திலேயே இருந்த காட்சி! இதெல்லாம் ஆறிப் போன கதை! இதோ இப்போதுதான் வீட்டிற்கு வந்திருக்கிறான்.

செயற்கைக் காலுக்கு ஆர்டர் தந்தாகிவிட்டது!

அதுவரை ஊன்றுகோலின் உதவியுடன் நடக்க வேண்டும். செயற்கைக்கால்! இனி எல்லாமே செயற்கை தானோ? நண்பனின் கைகளைப் பிடித்துக் கொண்டு நாகராஜன் அழுதேவிட்டான்.

"நீ மட்டும் இல்லேன்னா என்ன பண்ணி இருந்திருப்பேன் கிருபா?"

"உன் நல்ல மனசுக்கு வேற யாராவது வந்து உதவி இருப்பாங்க. வீடு கிடைக்காம நடுத்தெருவில் திண்டாடின



வனை உன் வீட்டுக்குள்ளே விட்டே... இந்த உபகாரம் கூடப் பண்ணலேன்னா நான் மனுஷனே இல்லை!"

நாகராஜனின் பழைய இயல்புகள் சுபாவங்கள் திரும்பி வந்துவிட்டனவோ என்று நினைக்கும்படியான நெருக்கம் மீண்டும் நண்பர்கள் இடையே உருவானது.

அக்காவிற்கு இந்த விபத்து பற்றிக் கடிதம் இப்போது எழுத வேண்டாம் என்று நாகராஜன் தடுத்துவிட்டான்.

அதுவும் சரிதான். சிங்கப்பூரில் இருக்கும் அக்காவால் இப்போதைக்கு வரவும் முடியாது. வீணாக மனசு சங்கடப் படுவானேன்?

அதுதான் சங்கடத்தைப் பகிர்ந்து கொள்ள மூன்று பேர் இருக்கிறார்களே! போதாது?

ஸ்வப்னாவின் வீட்டில் நாகராஜனை வந்து பார்த்தார்கள். வருத்தப்பட்டார்கள். இப்படி ஆகிவிட்டதே என்று வேதனைப்பட்டார்கள். கூடவே நாசுக்காக கல்யாணத்தை எப்போது வைத்துக் கொள்வது என்று கேட்டார்கள்.

கிருபாகரன் தீர்மானமாகச் சொல்லிவிட்டான்.

"நாகராஜனுக்கு இந்த நிலை வரும்னுதான் நினைக்கவே இல்லை. எது எப்படியோ, இன்னும் கொஞ்ச நாளைக்கு என் மனசு சரியாகிற வரை இதைப் பத்திப் பேச வேண்டாம்."

ஸ்வப்னாவின் அப்பா கேட்டார்.

"அது சரி மாப்பிள்ளை. நிச்சயம் பண்ணியாச்சு. ஒரு நல்ல நாள்லே நிச்சயதார்த்தத்தை முடிச்சுட்டுக் கல்யாணத்தையும் கையோட முடிச்சுட்டா..." கிருபாகரன் பேச்சை வெட்டினான்.

"மன்னிக்கணும். நண்பன் காலில்லாமே இருக்கான். இந்த நேரத்துலே எனக்கு இப்ப கல்யாணம் வேண்டாம்."

"மனது எப்போ சரியாகும்? ஒரு டேட் சொல்லுங்கோ. அன்னிக்கு வந்து பார்க்கறேன்."

"எனக்கு இப்போ சொல்லத் தெரியலை."

"உங்களை நம்பி என் பெண் காத்திருக்கலாமா?"

"ஸாரி ஸார்... என்னை நம்பி என் நண்பன் காத்திருக்கான். நீங்க வீணா என்னை நம்ப வேண்டாம். உங்க பெண்ணுக்கு வேற இடத்துலே மாப்பிள்ளை பாருங்க..."

மாயா அதிர்ந்து போனாள். என்னை இப்படிச் சொல்லிவிட்டான் கிருபா?

"ஆமாம் ஸார்... என்னை நம்பி வீணா உங்க பெண்ணோட எதிர்காலத்தைப் பாழ்படுத்தாதீங்க. நான் அதிர்ஷ்டகட்டை இல்லியோன்னு எனக்கு சந்தேகமா இருக்கு... அதனால வேற நல்ல இடம் வந்தா உங்க பொண்ணுக்கு முடிச்சுடுங்க. ஸாரி ஸார்..." அவர் எழுந்தார்.

"போயிட்டு வரேன் சார்... நான் ஆரம்பத்துலே நினைச்சதுதான். இங்கே ஒரு நண்பர் மட்டும் காத்திருக்கவில்லை. நண்பரோட மனைவியும் காத்திருக்கா!" 'சட்'டென்று சொல்லிவிட்டு அவர் வெளியே போயிட்டார்.

மாயா அதிர்ந்து போனாள்.

கிருபாகரன் திணறிப் போனான்.

கடவுளே... உள் ரூமில் கட்டிலில் படுத்திருக்கின்ற நாகராஜனுக்கு இது கேட்காமல் இருக்க வேண்டும்.

"கிருபா... நீங்க எடுத்த முடிவு தப்பு. ரொம்ப ரொம்ப தப்பு. அவர் என்ன சொல்லிவிட்டுப் போறார் பார்த்தீங்களா."

"நான் அன்னிக்கே உங்ககிட்டே சொல்லலியில்லை? யார் என்ன சொன்னாலும் எந்த சக்தி என்ன எதிர்த்தாலும் நான் உங்களுக்குத் துணை நிற்பேன். பக்க பலமாக



நிற்பேன். முதல்லே நாகராஜன் எழுந்து நடக்கட்டும் அப்புறம் இதைப் பற்றி யோசிப்போம்."

அதன்பின் இருவரும் நாகராஜன் அறைக்குப் போனார்கள்.

நல்லவேளை நாகராஜன் அசந்து தூங்கிக் கொண்டிருந்தான். ஸ்வப்னாவின் அப்பா வந்தது, போனது தெரியாது! நிம்மதி.

மெல்ல மெல்ல நாகராஜனின் ரணம் குணமானது.

ரொம்ப நாட்களுக்குப் பிறகு பக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்த மனைவியை உற்றுப் பார்த்தான் நாகராஜன்.

"மாயா..." என்றான் நாகராஜன் அன்புடன்

சட்டென்று விழித்தாள்.

"ஏன் தண்ணி வேணுமா? பெட்பேன்...?" என்றவளை கையமர்த்தி...

"எனக்கு... எனக்கு நீ வேணும்..." என்றான் காதலுடன்.

மாயா பயந்து போனாள்.

"இதென்ன இந்த நேரத்தில்? ஏதாவது ஜன்னிகின்னி வந்துவிட்டதா? என்னாச்சு உங்களுக்கு? உடம்பு சரியில்லையா?"

"மாயா... டார்லிங்... டார்லிங்... என்னை என்னை நீ வெறுக்கறியா?" மாயா பதறினாள்.

"என்ன பேச்சு பேசறீங்க? உங்க மனசு சரியில்லை ஏதேதோ நினைச்சுட்டு குழம்பி இருக்கீங்க. ப்ளீஸ் டேக் ரெஸ்ட்..."

குழந்தையைத் தட்டுவதுபோல் அவனைத் தட்டினாள் மாயா.

திடீரென்று நாகராஜனுக்குத் தோன்றியது.

இவள்... இவள் என்னை வெறுக்கிறாள்... என் ஊனத்தை அருவெறுப்புடன் நினைக்கிறாள்... அதனால் தான் என்னிடம் நெருங்க மறுத்து இப்படி எதை எதையோ பேசுகிறாள்.

"நீ ஒரு வெள்ளைச் சோளம்... உனக்கு ஒண்ணும் தெரியாது. உங்கிட்டேயே திருடினவனைப் புரிஞ்சுக்காம அவன் மேலே அன்பு பாராட்டினே!" சிங்கப்பூரில் இருந்த அக்கா திடீரென்று லவுட் ஸ்பீக்கரில் கத்தினாள்.

ஏதேதோ யோசித்தபடி கிருபாகரனின் கையைப் பிடித்தபடி கட்டையுடன், நடக்க முயன்று கொண்டிருந்த நாகராஜன் தடுமாறிக் கீழே விழப் போனான்.

விழப் போறானே என்ற பயந்த மாயா ஓடியே போய் அவனைத் தாங்கிப் பிடிக்க, அதே சமயத்தில் கிருபாகரனும் அவனைத் தாங்கிக் கொள்ள, இவருடைய கைகளும் ஒன்றாக இணைந்து அவனைப் பிடித்து நிறுத்த -

மாயாவின் கரங்கள் நடுங்கியதைத் தன் முதுகுக்குப் பின் நாகராஜன் உணர்ந்தான்.

கிருபாவின் தடுமாற்றத்தை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

சமாளித்த கிருபாகரன் சிரித்தபடி சொன்னான்.

"நல்ல வேளை, நாங்க பிடிக்கலேன்னா நீ கீழே விழுந்திருப்பே."

"நான் கீழே விழ மாட்டேன். ஏன்னா ஊன்றுகோல் பக்கத்துலே இருக்கு. பாவம் நீங்க ரெண்டு பேரும் தான் தடுமாறி விழுந்திருப்பீங்க. இனிமே ஜாக்கிரதையா இருங்க."

மாயா திகிலுடன் கிருபாகரனைப் பார்த்தாள்.

கிருபாகரன் சிரித்தான். "ஆமாம் நாகராஜன்... நீ சொல்றது சரி... நீ முந்தியெல்லாம் சொல்லுவியே ஞாபகம்



இருக்கா? அடிக்கடி சிரிச்சு சிரிச்சுப் புரை ஏறிட்டா என்னை யாரோ நினைக்கிறா... யாரோ நினைக்கிறான்னு. உன்னை நினைச்சது வேற யாருமில்லை... உன்னோட விதி. இனிமே நீதான் ஜாக்கிரதையா இருக்கணும்." என்றவன் வெளியே போய்விட்டான்.

மாயா நாகராஜனின் அருகே வந்தாள்.

"என்னங்க, அவரு மனசு நோகும்படி பேசிட்டீங்க அவர்?"

"அவனைப்பத்தி நீ கவலைப்படாதே. அவன் எனக்குத் தான் நண்பன். முதல் சொந்தம் எனக்குத்தான். எனக்கும் மனசுன்னு ஒண்ணு உண்டு தெரியுமா?"

மாயா அவனை வேதனையுடன் பார்த்தாள்.

இவளுக்குக்கூட மனசு என்று ஒன்று இருக்கிறதே!

நாகராஜன் அதை மறந்து போனானா?

மாயா உள்ளே போனாள்.

## 9

"தொட்டுத் தொட்டு பேச வரான் கண்ணன்
பட்டி மாடோட்டும் பாலகோபாலன்
கட்டுக்கடங்காத கடலைபோல் துள்ளி
தொட்டுத் தொட்டுப் பேச வரான்"

அதை எதிரில் உட்கார்ந்தபடி ரசித்துக் கொண்டிருப்பது கிருபாகரன். முன்பும் மாயா நிறையப் பாடி இருக்கிறாள். கிருபா ரசித்திருக்கிறான். நாகராஜனும் தனக்கு சங்கீதத்தில் அவ்வளவாகப் போறாது என்று ஒப்புக் கொண்டிருக்கிறான்!

இன்று! இதென்ன பாட்டு என்று இவள் பாடுகிறாள். அதுவும் அன்னிய புருஷன் எதிரில்!

இவனுக்குப் பாட்டு கேட்க வேண்டும் என்றால் பேசாமல் ரிகார்ட் ப்ளேயரோ, டேப்ரிகார்டரோ வாங்கிப் பாட்டுக்களைப் போட்டுக் கேட்க வேண்டியதுதானே? இல்லை, அந்த ஸ்வப்னாவோ ஸ்வரூபாவோ அவளைப் பாடச் சொல்லிக் கேட்க வேண்டியதுதானே?"

ஆ.. நேற்று இவர்கள் இருவரும் இல்லாதபோது அந்த ஸ்வப்னாவின் தந்தை வந்தாரே.. இவனிடம் விவரம் சொல்ல என்றே வந்திருக்கிறார்!

மகளுக்கு வேறு இடத்தில் கல்யாணம் நிச்சயம் பண்ணி சமாசாரத்தைச் சொல்லிவிட்டு எதை எதையோ சொல்லிவிட்டுப் போனாரே! இப்போதைக்குக் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லிவிட்டானாமே கிருபாகரன்! ஏன்? ஏன்?

"இங்கே ஒரு நண்பர் காத்திருக்கிறாங்கிறது கதை. நண்பரோட மனைவி காத்திருக்கிறாங்கிறதுதான் உண்மை."

எத்தனை பெரிய வார்த்தை! அன்று மாயா பாதாம் அல்வாவில் பாதி ஷேர் கேட்டாள். அது மட்டும்தானா? நாடகத்தில் கடைசி நேரத்தில் நடிகர் வரவில்லை என்றால் இவன், கிருபாகரன் ஆபத்பாந்தவன், அனாதரட்சகன் அந்த வேடத்தைப் போட்டு நாடகத்தை முடித்தானாமே! இருக்கும். இங்கு ஏதாவது 'சப்ஸ்டிடியூட்' வேடம் போட்டு விடுவானோ? நான் காலொடிந்த முண்டம்! நொண்டி! முடவன்! எனக்கு என்ன தெரியப் போகிறது? இந்த அறையே சாஸ்வதம் என்று நினைத்துக்கொண்டு இங்கேயே இருக்கிறேன். நான் கட்டையுடன் நடக்க ஆரம்பித்தால் 'டொக் டொக்' என்று சத்தமே எனக்குக் கட்டியம் பாடுகிறது! நான் என்ன செய்வேன்?



இவனுக்கா எக்ஸ்பிரஷன் வராது என்றேன்? தப்பு. தப்பு.. இருவரும் என்னமாக நடிக்கிறார்கள். ஆபீஸுக்குப் போக முடியாது! ஊனமுற்றோர் கோட்டாவில் ஏதாவது கிடைக்க வேண்டும். எப்படி இருந்தாலும் ஒரு வருடத்திற்கு ஆபீஸுக்கு லீவு!

இப்படி சிந்திக்கச் சிந்தித்தே தலை வெடித்து விடும் போலிருக்கிறது.

மாயா அடுத்த பாடலைப் பாட ஆரம்பித்து விட்டாள். தம்பூராவின் சுருதியுடன் அவள் குரல் இழைந்து மேலே கிளம்பியது.

'மறவேன் மறவேன் என்று வேலின் மேல் ஆணையிட்ட மன்னரும் மறப்பாரே? நீல மயிலே.. சோல மயிலே' எதற்காக இதைப் பாடுகிறாள்? என்னை மறக்காதே என்னை மறக்காதே.. என்று கிருபாகரனுக்கு மறைமுகமாகப் பாட்டின் மூலம் செய்தி சொல்லுகிறாளோ?

நாகராஜன் தடுமாறியபடி எழுந்தான். தட்டுத் தடுமாறி கட்டையை எடுத்துக் கொண்டான்.

'டொக் டொக்' "அன்பர் வரவு நோக்கி.."

'டொக் டொக்' "இங்கு நான் காத்திருக்க.."

'டொக் டொக்' "அன்ன நடை பயில்வாயோ?"

'டொக் டொக்' "வண்ண மயிலே.."

'டொக் டொக்' "அன்னநடை பயில்வாயோ?"

'டொக் டொக்' ஏன் இந்த அடியையே திரும்பத் திரும்பப் பாடுகிறாள்?

கேலி பண்ணுகிறாளோ?

வன்மம்! 'டொக்'

பாட்டு 'சட்'டென்று நிற்கிறது.

"அடடே நாகராஜா? நீயும் வந்துட்டியா? வா வா இப்படி வா தூங்கிட்டு இருந்தேன்னு நினைச்சேன்..."

"நான் ராத்திரிகூடத் தூங்குறது இல்லை."

மாயா மேலே பாடுவதா வேண்டாமா என்று புரியாமல் தம்பூராவை மீட்டியபடி இருந்தாள். தம்பூராவின் ரீங்கார ஒலி மட்டும் கேட்டது.

"நீங்க பாடுங்க மாயா... நாகராஜும் கேட்கட்டும்... மனசுக்கு இதமா ஆறுதலா இருக்கும். நாதோபாசனை மாதிரி ஒரு சிறந்த மருந்து கிடையாது. எனக்கு இன்னிக்கு ஆபீசிலே இருந்து வந்ததில் இருந்து ஒரே தலைவலி. அதான் பாடச் சொன்னேன்."

"எனக்குக்கூடத் தலைவலி..." நாகராஜன் நிறுத்தினான்.

"நீங்க பாடுங்க மாயா..."

"ஸ்டாப் இட்..."

நாகராஜன் வெறிபிடித்தவன் மாதிரி கத்தினான்.

"என் ஒய்ஃபை என் எதிரிலேயே பேர் சொல்லிக் கூப்பிடறே நீ! எனக்குத் தலைவலி மண்டையைப் பிளக்கிறது. எப்பப் பார்த்தாலும் பாட்டு, பேச்சு, சிரிப்பு... இதென்ன வீடா இல்லை..."

"நாகராஜ்..." என்று கிருபா அலறினான்.

மாயா தடுமாறியபடி எழுந்தாள்.

"இது இருக்கிறதாலேதானே இந்தத் தொல்லை. சனியன்..." தன் ஊன்றுகோல் ஒன்றைத் தூக்கி தம்பூராவின் மீது போட்டான் அவன் வெற்றியுடன். அது மாயாவின் வலது கையைப் பதம் பார்க்க, "அம்மா..." என்றலறியபடி மாயா கீழே சாய்ந்தாள். ரத்தம் ஆறாக வழிய மாயா தன் நினைவிழந்தாள்.



# 10

நினைவுகள் மெல்ல மெல்ல வருவதும் திரும்புவதுமாகக் கண் முழுவதுமாக விழித்துப் பார்த்தபோது, கையில் ஹார்லிக்ஸ் ஏந்திய டம்ளர், ஸ்பூனுடன் கிருபாகரன் நின்று கொண்டிருந்தான்.

இது என்ன இடம்? ஆஸ்பத்திரியா? எத்தனை நாட்களாக நான் இங்கிருக்கிறேன்? என் நினைவுகளில் மயக்கம் வந்த பிறகு என்று நான் தெளிந்தேன்?

மிக அருகில் நெருங்கி இணக்கமாக, இதமாக ஒரு குரல்...

"மாயா..."

மாயா கண்களைத் திறக்கவில்லை.

இது கிருபாவின் குரல்தான். கிருபா ப்ளீஸ் போய் விடுங்கள். தள்ளிப் போய்விடுங்கள். என்னைவிட்டு விலகிப் போய்விடுங்கள். நா வறட்டியது. உடம்பு முழுவதும் ஊசி குத்திய வலிகள்.

ஒருபுறம் சலைன் வாட்டர் இறங்கிக் கொண்டிருக்கிறது. இன்னொரு புறம் ரத்தம் உடம்பு முழுவதும் ஊசிகளால் துளைத்தெடுத்து விட்டார்கள். பரவாயில்லை. நாகராஜனின் வார்த்தைகள் அம்புகள் தாக்கும் வலியைவிட இந்த வலி குறைவுதான்!

"மாய எப்படி இருக்கீங்க?" வாயில் ஸ்பூனாக ஹார்லிக்ஸைப் புகட்டியவாறு கிருபாகரன் கேட்கிறான்.

கண்கள் நிரம்புகின்றன. "ஐயம் ஆல் ரைட்...." கிருபாகரன் கண்களும் நிறைந்திருக்கின்றன.

"இந்தக் குரலை மறுபடியும் கேட்போமான்னு ஆயிடிச்சு மாயா. சரியான ஒரு வாரம் ஆயாச்சு. உங்களை இங்கே அட்மிட் பண்ணி."

"ஓ காட்! ஒரு வாரமாக என் உணர்வுகள் செத்துக் கிடந்தனவா? ஒரு வாரமாக நான் நிம்மதியாக இருந்திருக்கிறேன்! ஏன்... ஏன்... என்னைப் பிழைக்க வைத்தீர்கள் கிருபா?" அழத் தோன்றியது.

கிருபாகரன் அவளை அன்புடன் படுக்க வைத்தான்.

"நோ... ஊசி வழியே சலைன் இறங்கிட்டு இருக்கு அசையாதீங்க... வலிக்கும்..." வியர்த்திருந்தது மாயாவிற்கு அவள் முகத்தைத் துடைத்தபடி கிருபாகரன் மெல்லப் பேசினான்.

"எற்கெனவே அனிமிக்கா இருந்திருக்கு ரொம்ப ப்ளீட் பண்ணிட்டீங்க. ஸோ ரத்தம் கொடுக்கும்படி ஆயிடுச்சு. அப்பவே வரலைன்னா ஓ காட்... நினைச்சுப் பார்க்கவே கஷ்டமா இருக்கு." மாயா மெல்லச் சிரித்தாள்.

"இப்படி எங்க இரண்டு பேரையும் ஆஸ்பத்திரியிலே 'அட்மிட்' பண்ணிட்டு உங்க உயிரை கொடுக்கறதுன்னே சபதமா?"

"பரவாயில்லை நீங்க ரெண்டு பேரும் நல்லா இருந்தா சரி."

மாயா தயங்கித் தயங்கிக் கேட்டாள். "அவர்... அவர்... என்னைப் பார்க்க வரலியா?"

கிருபா தவித்தான். இதற்கு என்னவென்று பதில் சொல்வது? மாயாவைப் பார்க்க நாகராஜன் வராதது மட்டுமல்ல.

"அவ உடம்பை நல்லா குணப்படுத்தி அவளைக் கொண்டு போய் பிறந்த வீட்டிலே விட்டுட்டு வந்துடு.



வயசான அம்மா இருக்கா. ஒருத்தர் கொருத்தர் உதவியா இருக்கும்."

"நாகராஜ் உனக்கென்ன பைத்தியமா? உனக்கு என் மேலேதானே கோபம்? நீதான் என்னை வருந்தி வருந்தி உன் வீட்டுக்குக் கூப்பிட்டே. இப்போ என்னை எப்படி வெளியிலே போகச் சொல்றதுன்னு உனக்குக் குழப்பம் அதுக்கு நேரடியாகவே நீ என்னை 'கெட் அவுட்'டுன்னு சொல்லிவிடலாம். வீணா உன்னோட ஒய்ஃபை பழி வாங்காதே."

"வில் யூ ஸ்டாப் ப்ளீஸ்? நீங்க ரெண்டு பேருமே என்னைப் பழி வாங்கறீங்க. எனக்கு இனிமே யாரோட தயவும் தேவையில்லை. ஆர்டிபிஷியல் லெக்ஸ் வந்தாச்சு மெல்ல மெல்ல நானே பழகிப்பேன்."

"தெரிகிறது நீ தடுமாறினப்போ எல்லாம் துணை தேவைப்பட்டது. இப்போது நிக்க பலம் வந்தவுடனே எட்டி உதைக்கறே. ஊனமான இந்தக் காலிலேயே இத்தனை பலம் இருந்தா, உனக்கு முழுக்காலும் இருந்திருந்தா எப்படி இருக்கும்? இதுதான் பகவான் பாதி ஆக்கி விட்டான்!"

"இன்ஸல்ட் பண்ற மனைவியைவிடத் தனிமை இனிமை."

"நீ நினைக்கிறது மாதிரி அது இன்ஸல்ட் இல்லை உன்னோட காம்ப்ளக்ஸ். உன்னோட இயலாமையைச் சுத்தி நீயா ஏற்படுத்திட்ட காம்ப்ளக்ஸ். ஒருநாள் இதே உறவைத் தேடி நீயா அலைபாய்ஞ்சு அலைஞ்சு வருவே. அன்னிக்கு அன்னிக்கு..."

"அன்னிக்கும் நீதான் நாயா சுத்திட்டு இருப்பேன்னா நான் திரும்பப் போயிடுவேன்."

"தேங்க்ஸ்! நன்றியுள்ள நாயை எனக்கு உதாரணம் காட்டினதுக்கு நன்றி! ஆனா சுத்திட்டு இல்லை. காவல் காத்துட்டு இருப்பேன்."

அன்று கிளம்பியவன் நான்!

"தன் அறையில் பொருட்களையெல்லாம் நிரந்தரமாக அப்புறப்படுத்திவிட்டான். நான் ஏன் இங்கு வந்தேன்? ஏன் இவர்கள் வாழ்வில் புகுந்தேன்? என்னால் ஓர் இனிய வசந்தம் இலையுதிர் காலமாகிவிட்டதே!

இல்லை! இந்த இலையுதிர் காலத்தின் வெம்மைக்கு உன் வரவு இனிய வசந்தமாக இருக்கட்டும்.

அந்த வீட்டின் ஒவ்வொரு மூலையையும் பார்த்துப் பார்த்து அழுதான் கிருபா.

இனி இனி என்ன செய்யப் போகிறாள் மாயா?

இதை எல்லாம் எப்படிச் சொல்வது?

நான் உன் வீட்டைக் காலி பண்ணிவிட்டேன். ஒரு ஹோட்டல் அறையில் இருக்கிறேன் என்பதா?

உன் உடம்பு குணமானதும் நீ கணவன் வீடு செல்லப் போவதில்லை. பிறந்த வீடுதான் செல்லப் போகிறாய் என்பதா?

ராமர் சீதையைக் காட்டில் கொண்டு போய் விட்டு விட்டு வர லட்சுமணனைத் துணை அனுப்பிய மாதிரி உன்னை உன் பிறந்த வீட்டில் கொண்டுவிட என்னைத் 'துணையாக' உன் கணவன் அனுப்பி இருக்கிறான் என்பதா?

எதைச் சொல்வது?

"என்ன கேட்டேனே அவர் அவர் என்னைப் பார்க்க வரலியா?"

மீண்டும் மாயா கேட்டாள்.



# 11

ரயில்வே ஸ்டேஷன் நெருக்கடி எக்கச்சக்க கூட்டம். பயணிப்பவர்களைவிட வழி அனுப்ப வந்தவர்கள் கூட்டம் அதிகம்.

மாயா பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

இந்தக் கூட்டத்தில் இந்தப் பரபரப்பில் நான் எங்கிருக் கிறேன்? என் தனி நிலை என்ன? நானும் பயணிக்கிறேன். ஆனால் என்னை வழியனுப்ப இதோ இந்த கிருபாவைத் தவிர யாரும் வரவில்லை!

என் பயண முடிவு என்ன?

இதுவரை இவளைப் பார்க்க நாகராஜன் ஆஸ்பத்திரி வரவில்லை.

அன்று கையோடு நாகராஜன் அழைத்து வருகிறேன் என்று போன கிருபா தனியேதான் திரும்பி வந்தான்.

அன்று என்ன சொன்னான்?

இவன் வீட்டிற்குப் போனபோது வீடு பூட்டியிருந்த தாம். எதிர்வீட்டில் சாவியைக் கொடுத்துவிட்டு மெஸேஜ் சொல்லிவிட்டு அவசரமாகப் பூனாவிற்கு போயிருக்கிறா னாம் நாகராஜன். ஆர்டிபிஷியல் லெக் வந்துவிட்டதாம். அளவு எடுத்ததில் ஏதோ கோளாறாம்.

அதற்காக நாகராஜனையே வரச் சொல்லியிருக்கிறார் களாம். கிருபாவிற்கு இப்போது லீவு இல்லை என்பதாலும் ஆஸ்பத்திரியில் இருக்கும் மாயாவைக் கவனிக்க ஆள் வேண்டும் என்பதாலும் கிருபாவை அழைக்காமல் ஆபீஸ் நண்பன் ஒருவனைக் கூட்டிக் கொண்டு அவசரமாகக் கிளம்பி இருக்கிறார்களாம். நாகராஜன் திரும்பி வரும்

வரை மாயாவை அவளுடைய பிறந்த வீட்டில் இருக்கச் சொல்லியிருக்கிறானாம். அவனே 'நடந்து' வந்து அவளை அழைத்துக் கொண்டு போகிறானாம்.

மாயா யோசித்துப் பார்த்தாள்.

இத்தனையும் நிஜமா? இத்தனை சோவையாகப் பொய் சொல்ல கிருபாவிற்குத் தெரியாது.

நிஜமாக நாகராஜன் புனா கிளம்பி இருக்கலாம்.

அவன் இல்லாதபோது ஒரே வீட்டில் இவர்கள் இருவரும் இருக்கக்கூடாது என்பதற்காக இவளைப் பிறந்த வீடு போகச் சொல்லி இருக்கலாம்.

அதுவும் நல்லதுதான். எப்படியும் ஓரிரு வாரங்களில் நாகராஜன் வந்துவிடுவான்.

அதன்பிறகு போய்க் கொண்டால் போயிற்று. இந்த நிலையில் நல்லவேளை கிருபாகரனையாவது அந்த வீட்டில் தங்கச் சொன்னானே! சாவியை எதிர்வீட்டில் தராமல் தானே எடுத்துக் கொண்டு போயிருந்தால்... ஓரளவுக்கு நாகராஜனுக்கும் இதயம் இருக்கிறது!

அவளைக் கொண்டு வந்து பிறந்த வீட்டில் விடுகிறேன் என்று சொன்ன கிருபாகரனைப் பிடிவாதமாக மாயாவே தடுத்துவிட்டாள்.

நாகராஜனின் எண்ணம் ஓரளவு புரிந்தபிறகு இனி இவன் விலகி இருப்பதுதான் முறை!

"அம்மாவுக்கு லெட்டர் போட்டிருக்கிறேன். நீங்க வர வேண்டாம்."

"ஸ்டேஷனுக்கு யாராவது வந்திருப்பாங்க இல்லை?"

"கவலைப்படாதீங்க. எனக்கு ஒண்ணும் ஆயிடாது."

மாயா பழைய மாதிரி சிரிக்க முயன்றாள்.



"ஆமாம், இனிமே ஆகறதுக்கு ஒண்ணுமில்லை!" கிருபா மெலிதான குரலில் சொன்னான்.

"என்ன சொன்னீங்க?"

ரயில்வே ஸ்டேஷன் இரைச்சலில் அவன் பேசியதைப் புரிந்து கொள்ளாத மாயா கேட்டாள்.

"ஒண்ணுமில்லை. டிக்கெட் பத்திரம். ஊருக்குப் போய் லெட்டர் போடுங்க. டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்தை எல்லாம் வாங்கி அந்த அட்டைப் பெட்டியிலே வைச்சு உங்க பாக்ஸிலே வைச்சிருக்கேன். பிரிஸ்கிருப்ஷன்படி தவறாம சாப்பிடுங்க. அப்புறம் வலதுகையை ஜாஸ்தி ஸ்ட்ரெயின் பண்ணிக்காதீங்க."

"நிறைய தடவை சொல்லிட்டீங்க."

"நான் பக்கத்துலே இருந்தா வேளா வேளைக்கு நானே மருந்து எடுத்துத் தருவேன். தள்ளி இருக்கிறதாலேதான் சொல்லிட்டே இருக்கேன்."

"இதென்ன நான் என்னமோ நிரந்தரமா எங்க ஊர்லேயே தங்கிடற மாதிரிப் பேசறீங்க. அடுத்த வாரமோ அதற்கடுத்த வாரமோ அவர் வந்தா வந்துடப் போறேன்."

"ஆமாம்... ஆமாம்."

"ஒரு சின்ன ரிக்வொஸ்ட்..." என்றாள் மாயா.

"சொல்லுங்க."

"புதுசா ரோஜா பத்தி ரெண்டு போட்டுப்ப பதியன் போட்டிருக்கேன். இப்பத்தான் வைச்ச சின்னச் செடி. நர்சரியிலே இருந்து நானே பார்த்து செலக்ட் பண்ணினது. நல்ல ரோஸஸ். ரெட் ரோஸஸ். தண்ணிவிடலேன்னா செடி வாடிடும். ப்ளீஸ் எனக்காகத் தினம் தினம் அந்தச் செடிகளுக்கு மட்டும் தண்ணி ஊத்திட்டு வர்றீங்களா? நான் வந்ததும் அதைக் கவனிக்கறேன்."

மாயா கூறியபோது கிருபாகரன் துடித்துப் போய் விட்டான்.

முதல் 'பெல்' அடித்துவிட்டார்கள்.

"கவலைப்படாதீங்க. நீங்க சொன்ன ரெட் ரோஸை நான் பத்திரமா பார்த்துக்கறேன். செடிக்குத் தண்ணி ஊத்தறேன். டோண்ட் ஒர்ரி."

"தேங்க்யூ..."

"நானும் ஒரு சின்ன ரிக்வொஸ்ட் பண்ணிக்கலாமா?"

"சொல்லுங்க."

"என் மனசுக்கு எப்பவாவது தோணினா உங்களைப் பார்க்க ஊருக்கு வரலாமா?"

மாயா கலகலவென்று சிரித்தாள்.

"இதென்ன பெரிய கேள்வி. நீங்க எப்ப வேணா என்னைப் பார்க்க வரலாம். யூ ஆர் ஆல்வேஸ் வெல்கம்" என்றபோது, 'சட்'டென்று தோன்றியது.

இவன் ஏன் பார்க்க வரவேண்டும்? அதுதான் நாகராஜனே நடந்து வந்து அழைத்துப் போகப் போகிறானே! அதற்குள் இவன் வருவானே ஒருவேளை? இரண்டு வாரத்திற்குள் வந்துவிட மாட்டானோ?

ஏதோ ஒரு திகில் நெஞ்சைக் கவ்வ மாயா தான் கேட்க நினைத்ததைக் கேட்பதற்குள் இரண்டாவது 'பெல்' அடித்து கார்ட் விசில் ஊதி இடை இடையே மனிதர்கள் தலை மறைந்து ரயில் பெருத்த சைரன் அலறலுடன் மெது மெதுவாக நகர ஆரம்பித்தபோது இவளால் கையசைத்து 'டாடா'தான் சொல்ல முடிந்தது.

நாகராஜன் வீடு ரொம்ப கலகலப்பாக இருந்தது. ஊரிலிருந்து அக்கா மாப்பிள்ளை ஜானும், ரேவதியும் வந்திருக்கிறார்கள்.



குழந்தையை அமெரிக்காவிலேயே விட்டுவிட்டு இவர்கள் மட்டும் வந்திருக்கிறார்கள்.

பழைய ரேவதியா இவள்?

அக்கா வளர்த்த அந்தப் பட்டிக்காட்டுப் பெண்ணா இவள்?

நீளமான தலைமுடியை வெட்டிக் கொண்டு பாப் பண்ணிக் கொண்டு அத்தனை பெரிய சரீரத்துக்குப் பொருந்தாமல் மாக்ஸியும், மிடியும் போட்டுக் கொண்டு இரவு பகல் என்று இல்லாமல் உதட்டில் லிப்ஸ்டிக்கும், நுனி நாக்கு ஆங்கிலமும்! ரேவதி இப்படி எப்படி மாறிப் போனாள்!

"ஹாய் ராஜ்" என்று அவன் கரத்தைப் பிடித்துக் குலுக்கி அவள் அவனைத் தொட்டபோது நாகராஜனே குலுங்கித்தான் விட்டான்.

ஜானும் இதை எல்லாம் பார்த்துச் சிரித்துக்கொண்டு தான் இருந்தான்.

அவர்கள் நாகரிகம் அப்படி! எது எப்படியோ இந்த ரேவதி அவனுடைய அக்கா மகள்! இங்கு வளர்ந்தவள்! ஒரு வயது அவன் சின்னவளாக இருந்திருந்தால் இவனே அவளை மணந்து கொள்ள சாத்தியக்கூறு இருந்தது!

அதெல்லாம் போகட்டும். மேலை நாகரிகத்திலேயே வளர்ந்து ஆளானவள் மாதிரி எப்படி இவளால் இதை சகஜமாக ஏற்றுக் கொள்ள முடிகிறது?

தனக்குப் புத்திமதி சொன்ன அக்காவை ஒருகணம் நினைத்துப் பார்த்தான் நாகராஜன்.

அக்கா இப்போது இங்கு இருந்திருந்தால்?

அக்காவிற்குத் தன் நிலையைப் பற்றி நடந்த ஆக்ஸிடெண்ட் பற்றி விபரமாக லெட்டர் இப்போதுதான் நாகராஜன் போட்டிருந்தான்.

அதில் மாயா பிறந்த வீடு சென்றது பற்றியோ அவன் அவளை 'வழியனுப்பியது' பற்றியோ ஒன்றும் எழுதவில்லை. அது அத்தனை முக்கியமாகப் படவில்லை அவனுக்கு.

"அக்கா இந்தச் சமயத்தில் நீ இங்கு இருந்திருந்தால் எத்தனையோ உதவியாக இருந்திருக்கும்..." என்று மட்டுமே எழுதியிருந்தான்.

ஜானின் திடீர் வரவு அவனைப் பொருத்தவரை ஒரு போனஸ்.

ரேவதி நன்றாகச் சமைத்தாள். தினுசு தினுசாகச் சமைத்தாள்.

இவனுக்கு உட்கார்ந்த இடத்தில் எல்லாம் இவனைத் தேடி வந்தது.

ஜானும் ஓயாமல் ஏதோ பேசிக்கொண்டே இருந்தான்.

இந்தியன் கல்சர், பிலாசபி, புராணம் இதெல்லாம் நிறையத் தெரிந்து வைத்திருந்தான்.

நிறைய 'ஆர்டர்' பண்ணினான்.

ஒரு மாத லீவில் இந்தியா சுற்றிப் பார்க்க வந்திருக்கிறார்களாம். ஒவ்வோர் இடமாகப் பார்த்துவிட்டு அப்படியே சிங்கப்பூர் போய் அக்காவையும் பார்த்துவிட்டு கிளம்பப் போகிறார்கள்

அன்று ரேவதி பாதாம் அல்வா பண்ணி இருந்தாள்.

"பாதாம் அல்வாவா? ஹை... சமையல் ரூமுக்கே போய் பாத்திரத்தோட ஒரு பிடி பிடிக்கிறேன்..." பழைய நினைவுகள் இடறுகின்றன.

"என்ன அப்படி ப்ளேட்டையே பாக்கறே? பிடிக்காதா?" ரேவதி நாகராஜனிடம் கேட்டாள்.

"யார் சொன்னா? எனக்குப் பாதாம் அல்வான்னா உயிர்..." ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லி வைத்தான்.



"ஈசிட்? அப்போ இந்த என் ஷேர்லேயும் கொஞ்சம் எடுத்துக்கோ?" சட்டென்று தன் தட்டிலிருந்து பாதி பாகத்தை அவன் தட்டில் போட்டாள் ரேவதி. ஜான் பார்த்துக் கொண்டு சிரித்துக் கொண்டுதான் இருந்தான்.

இப்படித்தானே அன்றும் மாயா நடந்து கொண்டாள். இதை அடிப்படையாக வைத்துதான் நான் என்ன என்னவோ நினைத்தேன்.

பாதாம் அல்வாவை ஷேர் பண்ணுகிறவர்கள் படுக்கையை ஏன் பங்கிட்டுக் கொள்ள மாட்டார்கள் என்று நினைத்தேன். இப்போது ஜான்கூட என்னை மாதிரியே நினைப்பானோ? சீ சீ. அவன் ஜெண்டில்மென். அப்படி நினைக்க மாட்டான்.

அப்போதுதான் நாகராஜன் நிறைய யோசிக்க வேண்டி இருந்தது.

அன்று அக்காவிடமிருந்து கடிதம் வந்திருந்தது. அவன் உடல்நிலை குறித்து அக்கறையாக விசாரித்திருந்தாள். உடம்பைப் பார்த்துக்கச் சொல்லி 'அட்வைஸ்' பண்ணி இருந்தாள்.

கடைசியாக ஒன்று எழுதி இருந்தது "நாகராஜா... நான் இங்கு ஏன் வரவழைக்கப்பட்டிருக்கிறேன் தெரியுமா? ஆமா உத்தியோகம். கௌரவக் கைதி நான்! பிள்ளையை எதிர்த்துக் கொள்ள முடியவில்லை. என் பேச்சை இங்கு யாரும் கேட்பதில்லை. நாளைக்கு அவன் எனக்குக் கொள்ளி போட வேண்டுமே என்பதற்காக நான் என்னை இப்போதே எரித்துக் கொள்கிறேன். அங்கு ரேவதியும் ஜானும் ஏன் வந்திருக்கிறார்கள் தெரியுமா? டைவர்ஸ் பண்ணிக் கொள்ளப் போகிறார்களாம். அதற்காக ஆசி வாங்க வந்திருக்கிறார்கள்! அவள் பெற்ற குழந்தையை நான் வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமாம்!

நீயும்ஒரு குழந்தையை எனக்குத் தந்துவிடு. எல்லாக் குழந்தைகளையும் வைத்துக் கொண்டு நான் இங்கு சிங்கப்பூரில் ஆயா உத்தியோகம் பார்க்கிறேன். இப்போதுதான் மாயாவைப் பற்றி நான் புரிந்துகொள்கிறேன். நல்ல பெண். அவளை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். என் ஆசிகளை அவளுக்குச் சொல்லு. தங்கள் டைவர்ஸ் விஷயத்தையும், மறுமணப் பிரச்சனையைப் பற்றியும் என் அருமைப் பெண்ணும் மாப்பிள்ளையும் விவாதிக்கும்போது நல்ல அந்தக் குழந்தையையாவது அமெரிக்காவிலே விட்டுவிட்டு வந்தார்களே... அந்த குழந்தையின் எதிர்காலத்தைப் பற்றி நினைத்தால் எனக்குப் பயமாக இருக்கிறது. பாவமாக இருக்கிறது."

அக்காவின் கடிதத்தைப் பார்த்தபோது நாகராஜனுக்கு அதிர்ச்சியாக இருந்தது என்ன தம்பதிகள் இவர்கள்?

நாளை விவாகரத்துப் பெறக் காத்திருப்பவர்கள். இன்று எப்படி சிரித்து வாழ்கிறார்கள்? இது எப்படி சாத்தியம்?

ஊருக்குக் கிளம்புமுன் ஜானே விபரமாகக் கூறினான்.

"மிஸ்டர் நாகராஜ்... எனக்கும் ரேவதிக்கும் நிறைய சிமிலாரிடீஸ் இருக்கு ஒருத்தரை ஒருத்தர் பரிபூரணமா நேசிக்கிறோம். பட் கொஞ்ச நாளா எனக்கு அடிக்கடி மயக்கம் வருகிறது. காரணம் என்ன என்னவோ சொல்கிறார்கள். இந்த நிலைமையில் இளமையும் அழகும் உள்ள ரேவதியின் எதிர்காலத்தைப் பற்றி நான் சிந்திக்கிறேன். என்னால் மணவாழ்க்கையில் நிம்மதியாக ஈடுபட முடியவில்லை. மரணத்தை எதிர்பார்க்கிற மாதிரி ஒரு படபடப்புடன் என் மனைவியைத் திருப்தி செய்ய முடியவில்லை. என் இயலாமைக்காக அவள் இளமை அழியக்கூடாது. இந்தியர்களுக்கு இது புதிதாக இருக்கலாம். புரியாமல் இருக்கலாம். அன்பு, பந்தம், பாசம், குடும்பம் என்கிற



இந்தியக் கட்டுக் கோப்புகள் எனக்கும் பிடிக்கும். ஆனால் இதன் அடிப்படையில் நிச்சயமாக 'செக்ஸ்' இருக்கிறது வெறித்தனமானது அல்ல. தென்றலாகத் தவழக்கூடிய அன்பின் அந்த அடிப்படையில் பிறந்த 'செக்ஸ்' திருப்தி செய்யப்படாத பெண்மைக்குச் சாபம் கொடுக்க உங்கள் இந்தியப் புராணக் கதைகள் மாதிரி நான் ரிஷி இல்லை. பெண்ணுக்கும் சம உரிமை இருக்கிறது என்கிற பட்சத்தில் பார்க்கும்போது அவளுக்கும் சாபம் கொடுக்கும் சக்தி இருக்கிறது. வலிமை இருக்கிறது. நான் ஆண் என்பதால் உயர்ந்தவன் என்று நினைப்பதில்லை. நான் மனிதன் என்பதால் மனிதாபிமானம் உள்ளவன் என்றுதான் நினைத்துக் கொள்கிறேன்.

ரேவதி மறுமணம் செய்து கொள்ளப் போகிறாளா இல்லையா என்பது அவளுடைய பிரச்சனை. நான் விடுதலை தராமல் அவளை விலங்கிட்டுக் கொண்டிருக்க விரும்பவில்லை. அதனால்தான் அவளை வற்புறுத்தி 'டைவர்ஸுக்கு' ஒப்புக் கொள்ளச் செய்தேன். என்றும் நாங்கள் இனிய நண்பர்களாக இருப்போம். நட்புக்கு உண்மை நட்புக்கு 'செக்ஸ்' தேவை இல்லை!"

எத்தனை உயர்ந்தவன் இந்த ஜான்! உண்மைகளை இப்படி எப்படி தைரியமாகச் சந்திக்கிறான்? ஜான் ஊருக்குக் கிளம்பும் முன் சொன்ன ஒவ்வொரு வார்த்தைகளும் நாகராஜனுக்குள் புகுந்து ரசாயன மாற்றங்கள் பண்ணிக் கொண்டிருந்தன.

நாகராஜன் நிறைய யோசித்தான்... யோசித்தான். யோசித்துக் கொண்டே இருந்தான்.

அன்புள்ள மாயா!

இந்தக் கடிதம் உனக்கு வியப்பை அளிக்கும். உனக்கு இத்தனை நாளா நான் கடிதம் எழுதாதற்குக் காரணம்

சொல்லிக் கொண்டிருக்கப் போறதில்லை. சூரியனுக்குக் கூட கிரகணம் பிடிக்கிறது. எனக்குப் பிடித்த கிரகணம் விலகிவிட்டது. நிரந்தரமாக விலகிவிட்டது. வண்ணான் பேச்சைக் கேட்டு சீதையைக் காட்டுக்கு அனுப்பிய மாதிரி நான் என்னுடைய அறியாமையில் உனக்குத் தீங்கு இழைத்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு. என்னை மன்னித்துவிடு. அடுத்த வாரத்தில் ஒருநாள் நல்ல நாள் பார்த்து நானே நானே உன்னைத் தேடி 'நடந்து' வந்து உன்னை அழைத்துப் போக வருகிறேன். என் 'ராஜ' நடையைப் பார்த்துச் சிரிக்காதே. ஆமாம் இது ராஜ நடை தான் நாகராஜ நடை! மற்றவை நேரில்.

அன்புடன் உன்

நாகராஜன்

கடிதத்தை எழுதிய பிறகுதான் அவன் மனம் நிம்மதி அடைந்தது.

அடுத்தது..?

கிருபாவிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

கட்டாயம் கிருபாவைச் சந்திப்பேன். அவனிடம் மன்னிப்புக் கேட்பேன்.

கடிதத்தைப் போஸ்ட் செய்துவிட்டுத் திரும்பிய போது தான் 'அது' கண்ணில்பட்டது.

ரோஜாப் பாத்தி!

மாயா ஆசையுடன் நட்ட செடி! நல்லவேளை இன்னும் வாடிவிடவில்லை. இரண்டொரு மழை பெய்திருந்தால் இன்னும் பசுமை போய்விடவில்லை. அதோ அதில் ஒரு மொக்குகூட விட்டிருக்கிறது. இதற்குத்தானே அன்று கிருபா தண்ணீர்விடச் சொன்னான்.

நாகராஜன் பூவாளியால் தண்ணீர் எடுத்து வந்தான்.



மாயா நீ இங்கு வரும்போது அதில் மலர்கள் பூத்திருக்கும். நீ எடுத்து வைக்கிற ஒவ்வோர் அடிக்கும் ஒரு மலராக வைத்து உன்னைப் பூஜித்து உன்னை இந்த வீட்டிற்குள் அழைப்பேன் சத்தியம். பூவாளியில் தண்ணீர் விழுந்தது. எண்ணங்களில் பன்னீர் சிந்தியது.

மாயா... மாயா... மாயா... மாயா...

ஃ ஃ ஃ

மாயாவிற்கு ஆச்சரியமாக இருந்தது. கூடவே அழுகையும் வந்தது. நாகராஜன் இன்று வருவான், நாளை வருவான் என்று இவள் காத்திருந்ததெல்லாம் கனவுதானா? ஒவ்வொரு தடவையும் கிருபாதானே வருகிறான்? ஏன்? ஏன்?

இவள் கேள்விகளைத் தாங்க முடியாமல் கிருபா அன்று உண்மையைச் சொல்லிவிட்டான். மாயா அதிர்ந்து போனாள்.

நாகராஜன் மாயாவை வெறுக்கிறான்.

நாகராஜன் மாயாவைத் தலை முழுகிவிட்டான்!

நாகராஜன் இனி இவளை ஏறிட்டுப் பார்க்க மாட்டான்!

இதெல்லாம் நிஜமா? நிஜமா?

நிஜம்தான். புதிய விடியலுக்காக இவள் காத்திருந்தது வீண். இனி இவளுக்கு விடிவு இல்லை! காரிருள்தான்.

இவள் நெஞ்சம் வெடிக்க விம்மினாள்.

அப்போதுதான் கிருபா சொன்னான்.

"மாயா, இத்தனை நாள் உங்களை நான் தெய்வமாக தான் நினைச்சிருந்தேன். ஆனா இன்னிக்கு நிலையிலே உண்மையான நிலையிலே இனி போலிகள் தேவை இல்லை. எனக்கு மனைவியா வரப்போறவ உங்களை மாதிரி தப்பு உன்னை மாதிரி ரசனை உள்ளவளா, படிச்சவளா, சங்கீதம்

தெரிஞ்சவளா, நல்லவளா, வரணும்னு வேண்டினேன். ஆனா ஆண்டவன் என் வேண்டுதலுக்கு வரமே தந்துவிட்டான்! மாயா மாதிரித்தானே கேட்டாய்? மாதிரியே வேண்டாம். இந்தா மாயாவையே எடுத்துக்கொள்! என்று சொல்லி விட்டான். ஆமாம் மாயா, நான் உன்னை மனதார நேசிக்கிறேன். நாகராஜன் போன்ற சந்தேக ஜீவிகளின் வாழ்வில் நீ அடிபட்டு காணாமல் போய்விடக்கூடாது என்பதற்காகவே கடவுள் என் கல்யாணத்தை நிறுத்தினார் என்று நினைக்கிறேன். உன்னை என் மனைவியாக மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். எத்தனை நாட்கள் நீ நாகராஜனுக்காகக் காத்திருக்கப் போகிறாய்? அவசரமில்லை. யோசித்து முடிவு சொல். அடுத்த வாரம் வருகிறேன்..." என்றவுடன் -

போய்விட்டான் என்று அழ ஆரம்பித்தவள் தான் மாயா. இன்னும் அவள் அழுகை முடியவில்லை!

மாயா ஒரு வெள்ளை மலராகத்தான் இருந்தாள். ரோஜாமலர் பரிசுத்த மலர். இந்த மலரில் உரம் போடுவதற்குப் பதிலாக விஷத்தைத் தூவியது யார்?

இவள் நாத்தனாரா? சமுதாயமா? நட்பா? நல்லுறவு சந்தர்ப்பச் சூழலால் திசை மாறிப் போகுமா?

நான் தப்பு செய்கிறேனா? என்னால் எப்படி இது சாத்தியமாயிற்று?

ஏமாற்றப்பட்ட பெண்மை பழி வாங்குமா? இது எப்படி நடக்க முடியும்?

நாகராஜனின் தாழ்வு மனப்பான்மை அந்தக் குடும்ப நேசத்தையே சிதைத்துவிட்டதா?

அழுதழுது துவண்ட மாயாவை அன்று கிருபாதான் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தான்.

"மாயா, காட்பிராமிஸா இத்தனை நாளா உன்னை நான் வணக்கத்துக்குரிய ஒரு தெய்வமாகத்தான் நினைச்சிருந்தேன். ஆனா உனக்கு இழைக்கப்பட்ட அநீதி உன் மென் மனத்தைப புரிஞ்சுக்காம ஒரு தடிப்பயல் உன் இதயத்தில் அறைஞ்ச வேதனை, இதை என்னால் தாங்கிக்க முடியவில்லை. நாம பரிசுத்தமா தூய்மையா எட்டி நின்னபோது நம்மை ஒட்டி ஒட்டி உறவு சொல்லிப் பேசினாங்க அவன் எண்ணப்படியே இனிமே நாம ஏன் இணையக்கூடாது ஊரறிய உன்னை என் மனைவின்னு நான் பகிரங்கமா சொல்றேன். கையாலாகாத ஒரு சபோதிப் பயலுக்கு மனைவியா இருக்கிறதைவிட, எனக்கு அன்புத் துணைவியா ஆயுசுக்கும் வரக்கூடாதா? நான் இதைப் பத்தி தீவிரமா சிந்திச்சுத்தான் பேசறேன். ஊரைப்பத்திக் கவலைப்படாதே. உன்னை நாகராஜன் வீட்டைவிட்டுத் துரத்தியபோது அந்த ஊரா வந்தது உனக்கு ஆதரவா? எத்தனையோ நாள் நாம தனியா இருந்திருக்கிறோம். இனிமே துணையா இருப்போம்."

மீண்டும் மீண்டும் கிருபாவின் பேச்சுக்கள்

ஃ ஃ ஃ

அன்று மாயா எழுந்தாள். வீதியில் நடந்தாள் இத்தனை நாட்கள் பித்துப் பிடித்தவள் போல் இருந்தவள் இயந்திரத்தனமாக வெளியே கிளம்பினாள். எங்கே போகிறோம் என்று புரியாமலே கால் போன பாதையில் நடந்தாள்.

அருகே இணையாக ஓடிய ரயில்வே தண்டவாளத்தை வெறித்தபடி நடந்தாள்.

இந்த இணைக்கோடுகள் தடம் புரண்டால்? ஒரு விபத்தல்லவா நடக்கும்!

யோசித்தபடியே ரயில்வே ட்ராக்கில் நடந்து வந்து கொண்டிருந்த மாயாவின் காதுகளில் ரயிலின் கூவல் கேட்கவில்லை. அதே சமயம் பூட்டிய மாயாவின் வீட்டில் போஸ்ட்மேன் ஒரு கடிதத்தைப் போட்டுவிட்டுப் போனார்

மறுநாள்...

தினசரிகளில் ஒரு செய்தி பரபரப்புடன் வெளியாகி இருந்தது.

இளம்பெண் மரணம்.

ரயில் தண்டவாளத்தின் சிக்கி மரணம்.

இது தற்கொலையா? கொலையா? போலீஸ் புலன் விசாரணை நடத்துகிறார்கள்.

ரத்த சகதியில் சிவப்பாகக் கிடந்த அப்பெண்ணின் முகம் அடையாளம் தெரியாதபடி நசுங்கி இருந்தது.

ஆனால் போலீசார் நாகராஜன் என்கிற அவளது கணவனைக் கண்டுபிடித்து அழைத்துவந்தனர். நாகராஜனுடன் அவன் நண்பன் கிருபாகரன் என்பவரும் வந்திருந்தார்.

வலது முழங்கைக்குக்கீழ், முன்பக்கத்தில் இருந்த அந்த இரண்டங்குலத் தையல் அடையாளத்தைப் பார்த்து ஏக காலத்தில் இருவரும், "மாயா" என்று கதறி அழுதது பரிதாபமாக இருந்தது.

இந்தச் செய்தி பேப்பரில் வெளியான அதே நேரம் - நாகராஜன் வீட்டு ரோஜாப் பாத்தியில் மாயா நட்ட செடியில் ஓர் அழகான சிவப்பு ரோஜா அனாதையாகப் பூத்து இருந்தது.

(நிறைவு)

169380 / 602 7237
வட்டார நூலகம்
அசோக் நகர், சென்னை-83